Koviloor Digital Library

विमानार्चनकल्पः

விமானார்ச்சன கல்பம்

9558
ND

Editor
S. Sudarshan

THANJAVUR MAHARAJA SERFOJI'S
SARASVATI MAHAL LIBRARY,
THANJAVUR.

Koviloor Digital Library

Koviloor Digital Library

6-5

கோவிலூர் ஆண்டவர் நூலகம், கோவிலூர்
A. No. 9558
ND

Thanjavur Sarasvati Mahal Series No. 441

|| श्रीः ||

मरीचिमहर्षि विरचितः

विमानार्चनकल्पः

விமானார்ச்சன கல்பம்

பதிப்பாசிரியர்

ஸ்ரீவைகானஸ பகவத் சாஸ்த்ர ப்ரவீண, ஆகம விசாரத,
ந்யாய சிரோமணி

எஸ். சுதர்சன், எம். ஏ., எம். எல். ஐ. எஸ்.,
நூலகர் II
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்-613 009

2002) (விலை : ரூ. 75-00

Koviloor Digital Library

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	விமானார்ச்சன கல்பம் (தொகுதி - 2)
பதிப்பாசிரியர்	:	எஸ் சுதர்சன், M. A., M. L. I. S.,
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்
வெளியீட்டு எண்	:	441
மொழி	:	சமஸ்கிருதம் - தமிழ்
பதிப்பு	:	முதற்பதிப்பு
வெளியீட்டு நாள்	:	ஜூன், 2002
தாள்	:	TNPL 17.8 kgs.
நூல் அளவு	:	24 x 14 c. m.
பக்கங்கள்	:	344
படிகள்	:	500
எழுத்து	:	16 & 12
அச்சிட்டோர்	:	ஒளியச்சு மற்றும் ஒளியச்சுக்கோப்பு
புத்தகக்கட்டு	:	மெலிந்த அட்டை
பொருள்	:	ஸ்ரீவைகானஸ ஆகமம் (சிற்ப சாஸ்த்ரம்)
பகுப்பு எண்	:	Q125:4x6,1
விலை	:	ரூ. 75-00

Koviloor Digital Library

வெளியீட்டாளர் முகவுரை

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க, தஞ்சாவூர் மாவட்டத்தில் இடம்பெற்றுத் தரணி முழுவதும் வியக்கவைக்கும் பல வரலாற்று அமைப்புகளில் சரசுவதி மகால் நூலகமும் ஒன்றாகும். இந்நூலகம் அறிஞர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் 'தொட்டனைத்தூறும் மணற்கேணியாய்' விளங்கிவருகிறது என்றால் அது மிகையல்ல; உண்மையாகும்.

அரும்பெறல் மரபில் அமைந்த இந்நூலகம் பன்மொழிச் சுவடிகள் பல்லாயிரம் கொண்டது. அவற்றில் பொருண்மைச் சிறப்பும், உயர்வும் கொண்டு விளங்கும் சுவடிகளுக்கு முன்னுரிமையும், முதன்மையும் தந்து உரிய பதிப்பாசிரியர்களிடம் வழங்கி அனைவரும் படித்துப் பயன்பெறும் வகையில் அழகிய நூல்களாகப் பதிப்பித்து (அச்சிட்டு) அளிக்கும் பணியைத் தொடர்ந்து ஆற்றிவருகிறது இந்நூலகம். இந்த இனிய பயணத்தின் தொடர்ச்சியாக இந்நூலகத்தின் சமஸ்கிருதத் துறையில் உள்ள 'விமானார்ச்சன கல்பம்' என்னும் ஸ்ரீவைகானஸ ஆகமநூல் தமிழ் மொழி பெயர்ப்புடனும், தமிழ் ஒலிபெயர்ப்புடனும் (இரண்டாவது தொகுதி) வெளியிடப்படுகின்றது.

வைணவ சமயத்தில் 'ஸ்ரீவைகானஸ நெறி' ஸ்ரீவிகனஸ முனிவரால் தோற்றுவிக்கப்பெற்றதாகும். இவருடைய நான்கு சீடர்களில் ஒருவரான மரீசி மஹரிஷியால் எழுதப்பெற்றதே இந்த விமானார்ச்சன கல்பமாகும்.

இதன் முதற்தொகுதியின் தொடர்ச்சியாகக் கோயில்களுக்குத் திருச்சுற்று (ப்ராகாரம்) அமைக்கும்முறை, கோபுரங்களின்முறை, மண்டபங்களை அமைக்கும் முறையின் விளக்கங்கள், பரிவார தேவதைகளுக்கான ஆலயங்களைக் கோயில்களில் எங்கு எப்படி அமைப்பது; பரிவார தேவதைகளுக்கான இடங்கள்; கர்பபேளா ஸ்தாபனவிதி; கோயில்களுக்கு அர்ச்சகர்கள் எத்தனைபேர் இருக்கவேண்டும்; பரிசாரகர்கள் (சமையல்காரர்கள்) எத்தனைபேர்

Koviloor Digital Library

இருக்கவேண்டும்; சிலைகள் செய்வதின் பொருட்டு கல் தேர்ந்தெடுக்கும்முறை மற்றும் அவைகளின் வகைகள்; கருவறையில் பெருமாளை ஸ்தாபனம் செய்யவேண்டிய இடம் மற்றும் அவற்றிற்கான பலன்; மரம் சேர்த்து மண்ணால் சிலை செய்வதெனில் அதன் முறைகள்; அதில் ஏதேனும் குறைவு ஏற்பட்டால் தலைவனுக்கு ஏற்படும் குறைவுகள்; பேரங்களின் முறைகள்; பெருமாளுக்கு வண்ணங்கள் நிர்மாணிக்கும்முறை; கோயிலில் இருக்க வேண்டிய தேவதைகள் மற்றும் அவற்றின் இலட்சணங்கள் ஆகிய அனைத்து பொருண்மைகளையும் இந்நூல் தெளிவாகத் தெரிவிக்கிறது.

இந்நூலைச் சுவடியிலிருந்து சிறப்பாகப் பதிப்பித்து வழங்கியுள்ள இந்நூலக நூலகர் நிலை II திரு. எஸ். சுதர்ஷன் அவர்களுக்கு என் பாராட்டுக்கள்.

இந்நூல் நல்லமுறையில் வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும்; இந்நூலக வெளியீட்டு மேலாளர் மற்றும் நூலகருமான திரு. அ. பஞ்சநாதன் அவர்களுக்கும் எனது பாராட்டுக்கள். இந்நூலினைச் செம்மையாக அச்சிட்டுத் தந்துள்ள நூலக கணினிப் பிரிவு பணியாளர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

"விமானார்ச்சன கல்பம்" தொகுதி இரண்டு என்னும் இந்நூல் ஸ்ரீவைகானஸ ஆகம நெறியைச் சேர்ந்தவர்களுக்கும், திருமால் நெறியின்பால் ஈடுபாடுடைய அன்பர்களுக்கும்; ஆய்வாளர் களுக்கும்; சில்ப சாஸ்த்ரம் பயிலும் மாணவர்களுக்கும் பெரும்பயன் அளிக்கும் என உறுதியாக நம்புகிறேன்.

சி. கோசலராமன், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
30 -6-2002

Koviloor Digital Library

6-5

॥ श्रीः ॥

॥ श्रीमद्विखनसमहागुरवे नमः ॥

முன்னுரை

श्रीलक्ष्मीवल्लभारम्भां विखनोमुनिमध्यमाम् ।
अस्मदाचार्यपर्यन्तां वन्दे गुरुपरम्पराम् ॥

देवराज दयापात्रं धीभक्त्यादि गुणार्णवम् ।
भृग्वादि मुनिभिर्मान्यं वन्दे श्रीविखनोमुनिम् ॥

अखण्डमण्डलाकारं व्याप्तं येन चराचरम् ।
तत्पदं दर्शितं येन तस्मै श्रीगुरवे नमः ॥

प्रणम्य विखनोमुनिं त्रियुगपुत्रमत्रिं भृगुं
मरीचिमथकाश्यपं मम गुरूंश्च वैखानसान् ।
तदीयमतमुत्तमं समनुसृत्य वैयासिकीं
गिरं प्रविवृणोम्यहं श्रुति शिरोऽर्थविद्योतिनीम् ॥

शब्द ब्रह्म कृताधियोग विभवाः साक्षात्कृतात्मेश्वराः
श्रीवैखानस धर्मशास्त्र निपुणाः ये नैमिशीयालयाः ।
ये तत्व प्रतिपादकाः कृतधियः ये विप्रनारायणाः
प्रख्याताः परिषत्सु वेदविदुषां तेभ्यो नमस्कुर्महे ॥

ஸ்ரீலக்ஷ்மீவல்லபாரம்பாம் விகனோமுனிமத்யமாம் ।
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ॥

தேவராஜ தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம் ।
ப்ருக்வாதி முனிபிர்மான்யம் வந்தே ஸ்ரீவிகனோமுனிம் ॥

அகண்டமண்டலாகாரம் வ்யாப்தம் யேன சராசரம் .
தத்பதம் தர்சிதம் யேன தஸ்மை ஸ்ரீகுரவே நம:॥

ப்ரணம்ய விகனோமுனிம் த்ரியுகபுத்ரமத்ரிம் ப்ருகும்
மரீசிமதகாச்யபம் மம குரூம்ச்ச வைகானஸான் ।

Koviloor Digital Library

தத்யமதமுத்தமம் ஸமனுஸ்ருத்ய வையாசிகீம்
கிரம் ப்ரவிவ்ருணோம்யஹம் ச்ருதி சிரோர்த்தவித்யோதினீம் ॥

சப்தப்ரம்ம க்ருதாதியோக விபவா: ஸா்க்ஷாத்க்ருதாத்மேச்வரா:
ஸ்ரீவைகானஸ தர்மசாஸ்த்ர நிபுணா: யே நைமிசீயாலயா:।
யே தத்வ ப்ரதிபாதகா: க்ருததிய: யே விப்ரநாராயணா:
ப்ரக்யாதா: பரிஷத்ஸு வேதவிதுஷாம் தேப்யோ
நமஸ்குர்மஹே ॥

பகவான் ஸ்ரீமந்நாராயணன் நித்யன் (அதாவது அழிவில்லாதவன்). அழியும் இயல்புடைய நம்மை அவன் ஒருவன்தான் ரக்ஷித்துவருகிறான். புருஷோத்தமன் (ஸ்ரீமந்நாராயணன்) சுத்தன் (தூய்மையானவன்). நாம் செய்த கர்மாக்களின் காரணமாக பல அழுக்குகள் ஜீவாத்மாவுடன் சேர்ந்து நிரம்பிக் கிடக்கின்றது. அவற்றை நீக்கி நம்மை நிர்மலமாக (சுத்தமாக)ச் செய்யும் சக்தி உடையவனும் ஸ்ரீமந்நாராயணன்தான். பகவான்ஸ்ரீமந்நாராயணன் ஸர்வக்ஞன் (எல்லாம் அறிந்தவன்). அறியாமையில் மூழ்கி அவதிப்படும் நம்மை சரியான ஓடம் கொடுத்து ஞானத்தை அனுக்ரஹம் செய்பவனும் அவனே. எனவே எல்லாம்வல்ல எம்பெருமானிடத்து பக்தி பண்ணவேண்டும்.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

என்பது திருவள்ளுவர் வாக்கு. பொதுவாக பக்தியைச் செய்வது இரண்டு முறைகளாக உள்ளது. உருவத்தைப் பார்த்துப் பக்தி கொள்வது ஒருமுறை. உருவமில்லாமல் மனதிலேயே நினைத்துப் பக்திகொண்டு ஆனந்தத்தை (நித்யானந்த நிலையை – மோக்ஷத்தை) அடைவது. இரண்டாவதாக சொல்லப்பட்ட உருவமில்லாமல் மனதளவிலே த்யானித்து பக்தி பண்ணுகின்ற நிலை கலியுகத்தில் ஸாத்யமில்லை. காரணம் கலியுக தர்மம் அப்படிப்பட்டது.

हरेर्नामैव नामैव नामैव मम जीवनम् ।
कलौ नास्त्येव नास्त्येव नास्त्येव गतिरन्यथा ।।

ஹரேர்நாமைவ நாமைவ நாமைவ மம ஜீவநம் ।
கலௌ நாஸ்த்யேவ நாஸ்த்யேவ நாஸ்த்யேவ கதிரந்யதா ॥

Koviloor Digital Library

எனவே, கலியுகத்திலும் ஜீவாத்மாக்களுக்கு முக்தி அளிக்க வேண்டும் என்பதாக பரமகாருணிகனான எம்பெருமான் பூலோகத்திற்கு அர்ச்சாவதாரம் (சிலை வடிவாக வருகிறான்) செய்கிறான். அப்படி எம்பெருமான்அவதாரம் செய்த இடத்தைச் சுற்றி (வலம்) வந்து வணங்கவும்; தூய்மையாக (புனிதமாக) வைத்துக்கொள்ளவும் ஏற்பட்டதுதான் ஆலயங்கள்.

பல இன்னல்களால் அமைதியற்று இருக்கும் மனதை; அமைதியாகவும், ஆனந்தமயமாகவும் அழகாகவும் இருக்கின்ற எம்பெருமானின் ஆலயங்களுக்குச் சென்று எம்பெருமானைக் கண்ணுற்று,

'கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணை
யுண்டவாயன் என்னுள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோன் அணியரங்கன் என்னமுதினைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே'.

என்பதாகத் திருப்பாணாழ்வார் அனுபவித்ததுபோல அனுபவிக்கவேண்டும். அப்பொழுது மனம் ஒருநிலைப்படும். அதனால் அமைதியும், ஆனந்தமும் கிடைக்கும். இவ்வாறு நாமெல்லாம் அனுபவித்து மோக்ஷத்தை அடைவதற்காக ஒரு வழிவகையை முதன்முதலில் அமைத்துத் தந்தவர் ஸ்ரீமத்விகனஸர்.

ஸ்ரீமத்விகனஸாசார்யனால் எம்பெருமானிடமிருந்து உபதேசரூபமாகப் பெறப்பெற்ற அனைத்து சாஸ்த்ரங்களையும் (1 1/2 கோடி க்ரந்த ஸங்க்யையை) ப்ருகு, அத்ரி, காச்யபர், மரீசி என்ற நான்கு (ரிஷிகளுக்கும்) சிஷ்யர்களுக்கும் உபதேசித்தார். உபதேசம் பெற்றுக் கொண்ட நான்கு சிஷ்யர்களுள் மரீசி மஹரிஷியும் ஒருவராவார். இவரால் சொல்லப்பெற்ற ஸம்ஹிதைகளுள் ஒன்றான ஆனந்த ஸம்ஹிதையில்தான் 'விமானார்ச்சன கல்பம்' என்னும் இந்நூல் அடங்கும்.

Koviloor Digital Library

விமானார்ச்சன கல்பம்

இவ்வுலகில் உள்ள அனைத்திலும் அந்தர்யாமியாய் இருப்பவரும், அனைத்திற்கும் ஆதாரமாக விளங்குபவரும், அழிவற்றவரும், பரப்ரம்மமாகவும், ஜ்யோதிஸ்வரூபமாகவும் உள்ள பரமபுருஷனை (புருஷோத்தமனை) அர்ச்சிப்பதே "விமானார்ச்சனம்" என்று சொல்லப்படுகிறது. பூஜை முறைகளைச் சொல்வது "கல்பம்" என்ற பெயரால் குறிப்பிடப்படுவதால் "விமானார்ச்சன கல்பம்" என்னும் பெயரை இந்நூல் பெற்றதுபோலும்.

புருஷோத்தமனான பகவான் ஸ்ரீமந்நாராயணனை அர்ச்சிப்பதால் ப்ராம்மணர்கள் தங்களால் தினமும் காலையிலும், மாலையிலும் செய்யப்பெற்ற யாகங்களில் ஏதேனும் விடுபட்டிருந்தாலும் அவை நிறைவாகச் செய்ததற்கான பலனைப் பெறுகிறார்கள். மேலும் இப்படி எம்பெருமானை வணங்கி அர்ச்சிப்பதால் சரீரத்தைவிட்டு ஜீவாத்மாவானது பிரிந்தபிறகு, "அஹं स्मरामि मद्भक्तं नयामि परमाङ्गतिम्" 'அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாங்கதிம்' என்ற வாக்கின்படி மோக்ஷத்தையும் அடைகிறார்கள்.

இதன் முதல் தொகுதியில் இறைவழிபாட்டின் பயன், ஊரில் கோயில்களை அமைக்கும்முறை, கிராமம், நகரம் ஆகியவற்றை அமைக்கும்போது காணப்படும் வேற்றுமைகள், கோயில் கட்டுவதற்கான கற்களைத் தேர்ந்தெடுக்கும்முறை, கோயில் கட்டும்முறை, கோபுரங்களின் விதங்கள் மற்றும் அவற்றின் இலட்சணங்கள் போன்ற செய்திகள் அனைத்தும் இடம்பெற்றுள்ளன. இந்நூல் 1998ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் (முதல் பத்து படலங்கள் மட்டும்) நமது நூலகத்தின் 397ஆவது வெளியீடாக மலர்ந்தது. மீதமுள்ள 91 படலங்களுள்; பதினோராவது படலம் தொடங்கி இருபதாவது படலம் வரை இரண்டாவது தொகுதியாக இந்நூல் வெளிவருகிறது.

சுவடிபற்றி

இதன் மூலச்சுவடி B. 3652 / D. 15344 என்ற எண்ணில் இந்நூலக ஸம்ஸ்க்ருதப் பிரிவில் பதிவாகியுள்ளது. இது 14x5.3 செ. மீ., நீள

Koviloor Digital Library

அகலம் உடையதாகவும்; கைகளால் தயாரிக்கப்பெற்ற காகிதத்தால் ஆனதாகவும்; பல இடங்களில் பூச்சிகளால் அரிக்கப்பட்டதாயும்; தவறுகள் நிறைந்தும்; முழுமையற்றதாகவும் உள்ளது. இச்சுவடியில் ஒவ்வொரு படலத்தின் இறுதியிலும் "इति श्रीवैखानसे मरीचि प्रोक्ते विमानार्चन कल्पे एकादशः पटलः -இதி ஸ்ரீவைகானஸே மரீசி ப்ரோக்தே விமானார்ச்சன கல்பே ஏகாதச: படல:" என்பதாக இருந்த போதிலும், 'வைகானஸ தந்த்ரம்' என்பதாகப் பதிவாகியுள்ளமை குறிப்பிடத் தக்கது. இதில் ஒரு பக்கத்திற்குப் பத்து வரிகளும், ஒரு வரிக்கு ஐம்பது அக்ஷரங்களும் உள்ளன.

பதிப்பும் பயனும்

அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக, இயந்திரமயமாய் முன்னேறி இயங்கிக்கொண்டிருக்கும் இந்த உலகிற்குப் பல அறிவியல் ஆதாரங்களை ஆகமங்களும் தந்துதவுகின்றது எனில் அது மிகையாகாது. ஆலயம் அமைப்பதன் பொருட்டு இடத்தைத் தேர்ந்தெடுப்பது தொடங்கி, கட்டிடக்கலை, சிற்பக்கலை, வேத-வேதாந்த சாஸ்த்ரங்கள் ஆகிய அனைத்தையும் தன்னகத்தே கொண்டுச் சிறப்பாக விளங்கும் இந்த ஆகமத்தை ஸம்ஸ்க்ருத எழுத்தும், மொழியும் தெரியாதவருங்கூட படித்துப் பயன்பெறும் பொருட்டு தமிழ் ஒலிமாற்றத்துடன் பதிப்பிக்கப்பெற்று வெளிவருகிறது. இந்நூல் ஸ்ரீவைகானஸர்களுக்கும், அதன்பால் ஈடுபாடுடையவர்களுக்கும், ஆகம ஆய்வாளர்களுக்கும், சிற்பத் துறையைச் சார்ந்தவர்களுக்கும் பெரிதும் பயனாக விளங்கும்.

நன்றி நவிலல்

இந்நூலைப் பதிப்பிக்க ஆணைவழங்கி, வெளியீட்டாளர் முகவுரையையும் வழங்கிய மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இந்நூலக இயக்குநர் உயர்திரு. சி. கோசலராமன், இ. ஆ. ப., அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நூலைப் பதிப்பிக்க ஆவனசெய்த நூலக நிருவாக அலுவலர் திரு. சாமி. சிவஞானம், M. A., அவர்களுக்கும், பதிப்பிக்க ஊக்கமளித்த நூலகப் பதிப்பு மேலாளரும், முதல்நிலை நூலகருமான

Koviloor Digital Library

திரு. அ. பஞ்சநாதன். M. A., M. L. I. S., அவர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்கி மகிழ்கிறேன். இந்நூல் பிழையின்றி வெளிவர செம்மையாக நுண்ணாய்வு செய்தளித்தவரும், ஸம்ஸ்க்ருத இலக்கணத்தில் சிரோமணி பட்டம் பெற்றவரும்; ஸ்ரீவைகானஸ திவ்ய பகவத் சாஸ்த்ர வித்வானும், அடியேனது ஆசார்யனுமான கடுக்கலூர் ஸ்ரீமான் ஸ்ரீ. உ. வே. S. ஸ்தலசயன பட்டாச்சாரியார் ஸ்வாமி அவர்களுக்கு எனது தண்டவத் ப்ரணாமத்தோடு கூடிய தன்யவாதங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பதிப்பிற்கு உதவியவரும், எனது கனிஷ்ட ப்ராதாவும், சென்னை R. K. M. விவேகானந்தா கல்லூரியில் ஸம்ஸ்க்ருத விரிவுரையாளராகப் பணிபுரிபவரும், ஸ்ரீவைகானஸ பகவத்சாஸ்த்ர குலாலங்காரருமான ந்யாய சிரோமணி, சங்கேந்தி முனைவர். S. முத்து, M.A., M. L. I. S., B. Ed., Ph. D., அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூல் சிறப்பான முறையில் ஒளி அச்சுக்கோப்பு-காப்பி பிரிண்டர் வழியில் செம்மையாகவும், அழகாகவும் அச்சிடப்பட்டுள்ளது. இப்பணியைச் சிறப்பாகச் செய்தளித்த திரு. R. சுப்ரமணியன் அவர்களுக்கும், திரு. க. பத்மநாபன் அவர்களுக்கும் மற்றும் இதற்குத் துணைநின்ற ஏனையோருக்கும் எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஸ்ரீ. சுதர்ஷன்,
நூலகர் நிலை II
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்.
27- 6 - 2002

Koviloor Digital Library

।। श्रीः ।।

।। श्रीमद्विखनसमहागुरवे नमः ।।

நூற்சுருக்கம்

नाहं वसामि वैकुण्ठे न योगी हृदये रवौ ।
मद्भक्ता यत्र गायन्ति तत्र तिष्टामि नारद ।।

नाहं जानामि केयूरे नाहं जानामि कुण्डले ।
नूपुरेत्वपि जानामि नित्यं पादाभिवन्दनात् ।।

நாஹம் வஸாமி வைகுண்டே ந யோகீ ஹ்ருதயே ரவௌ ।
மத்பக்தா யத்ர காயந்தி தத்ர திஷ்ட்டாமி நாரத ॥

நாஹம் ஜானாமி கேயூரே நாஹம் ஜானாமி குண்டலே ।
நூபுரேத்வபி ஜானாமி நித்யம் பாதாபிவந்தனாத் ॥

பதினோராவது படலம்

இந்த படலத்தில் கோவிலைச் சுற்றி அமைக்கப்படும் திருச்சுற்று (ப்ராகாரம்) எவ்வாறு அமைக்கவேண்டும்; அளவுகள் என்ன? என்பது பற்றியும்; ஹஸ்தமானங்கள் உத்தமம், மத்யமம், அதமம் என்பதாக முப்பெரும் பிரிவுகளைச் சொல்லி, பின்னர் அவை ஒவ்வொன்றும் மீண்டும் மூன்று விதமாகக் கொண்டு மொத்தம் ஒன்பது வகைகளையும்; ப்ராகாரத்தின் அளவை ப்ரதானமாகக் கொண்டு ஆஸ்தான மண்டபத்தை அமைக்கும் முறைகள் விவரிக்கப் பெற்றுள்ளது. (பக்கம் 3-4).

கோவிலுக்கு முன்போ, வடக்கு பாகத்திலோ திருக்குளம் அமைக்கவேண்டும் என்றும்; புதிதாக அமைக்கப்படும் குளத்திற்கான கரைகள் எவ்வாறு இருக்கவேண்டும் என்றும்;

Koviloor Digital Library

குளத்தை ஊர் மக்கள் அனைவரும் புனிதமாகப் பயன்படுத்தும் பொருட்டு அழகான படித்துறைகள் அமைத்து, அதில் மண்டபம் போன்றோ, கூடம் போன்றோ அமைத்து, முகப்புப் பகுதியில் கோபுரம் அமைக்கவேண்டும் என்றும்; திருக்குளத்தைச் சுற்றி அதமம், மத்யமம், உத்தமம் என்பதாக அளவுகளைக் கொண்டு ப்ராகாரம் அமைக்கவேண்டும் என்றும்; ஏழு ப்ராகாரங்களுடன் கூடியது உத்தமோத்தமமான திருக்குளம் என்றும்; இதன் முதல் ப்ராகார சுவற்றின் கிழக்கு திசையில் அனைவரும் சென்றுவரும்படி வாயிற்படி அமைத்து அதற்குமேல் கோபுரம் அமைக்கவேண்டும் என்றும்; அதேபோன்று மற்ற ப்ராகாரங்களிலும் அமைத்துக் கொள்ளலாம் என்றும்; முதல் ப்ராகாரம் தவிர மற்ற ப்ராகாரங்களுக்கு மட்டும் கோபுரம் அமைக்கலாம் என்பது நூலாசிரியரான மரீசி மஹரிஷியின் அபிப்ராயம் என்றும்; இந்த கோபுரங்களை எவ்வாறு அமைக்கவேண்டும் என்பது பற்றியும் தெளிவாகக் கூறப்பெற்றுள்ளது. (பக்கம் 7-8).

கோபுரம் த்வாரசோபா, த்வாரசாலா, த்வார ப்ராஸாதம், த்வாரஹர்ம்யம், த்வாரகோபுரம் என்பதாக ஐந்து விதங்கள் என்றும்; அவற்றை அமைக்கும் முறையையும் 11 தளங்கள் வரை அமைக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. (பதினொரு தளங்கள் கொண்ட கோபுரம் ஸ்ரீவில்லிபுத்தூர் ஸந்நிதியில் அமைந்துள்ளது. இதுவே முதன்முதலில் தமிழ்நாட்டின் பெரிய கோபுரமாக இருந்தது. தற்போது அதைக்காட்டிலும் உயர்ந்ததாக பதிமூன்று நிலைகளுடன் கூடிய கோபுரம் ஸ்ரீரங்கம் ஸந்நிதியின் தெற்கு வாசலில் அமைந்து உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்) (பக்கம் 11-12)

பிறகு பரிவாரங்களை த்ருவகௌதுக பேரங்களுடன் அமைப்பது உத்தமம் என்றும்; கௌதுகபேரமானது இல்லாமல் அர்ச்சிப்பது மத்யமபக்ஷம் என்றும்; இவை ப்ரதான ஆலயத்தைத் தொடர்ந்தே அமைக்கவேண்டும் என்றும் விவரிக்கப் பெற்றுள்ளது. (பக்கம் 14).

ஆலயத்திற்கு முன்பு மஹாமண்டபம் அமைத்து ஒட்டு ஒட்டி, மண்டபத்தின் நடுவே சபா மண்டபத்தையும்; அதற்கு முன்பக்கத்தில்

Koviloor Digital Library

நடன மண்டபமும்; ஆக்னேயாதி கோணங்களில் நடன மண்டபத்தைப்போல ஆஸ்தான மண்டபமும்; ப்ராகாரங்கள் சிறியதாயின் ஆலயத்திற்கு முன்பு (சோபான மண்டபத்திற்கு முன்பு) ஸ்நபன அறையோ, மண்டபமோ, கூடமோ ஒருவாயில் கொண்டதாகவோ, நான்கு வாயில்கள் கொண்டதாகவோ அமைக்க வேண்டும் என்றும்; இரண்டாவது அல்லது மூன்றாவது திருச்சுற்றின் அக்னிமூலையில் சமையலறை அமைக்கவேண்டும் என்றும்; சமையலறையில் நான்குபுறமும் சாலையுடன் கூடியதாக மண்டபமானது அமைக்கவேண்டும் என்றும்; இந்த மண்டபமானது நல்ல கற்கள் கொண்டும், சுதை வேலைப்பாடுகளுடனும், ஜ்வாலை போன்ற அமைப்பாகவும் செய்யவேண்டும் என்றும்; இதன் தென்புறச் சாலையில் நித்யாக்னி குண்டமும்; மேற்கு சாலையின் நடுவில் படிகள் அமைப்பதற்கான இடமும்; வடக்கில் ஹவிர்நிவேதனங்களுக்கான பொருட்களை வைப்பதற்கான இடமும்; தென்கிழக்கிலோ, கிழக்கிலோ கழிவுநீர் ஓடுவதற்கான வழியும் அமைக்கவேண்டும் என்றும்; முதல் ப்ராகாரத்திலோ இரண்டாவதிலோ ஹோமஸ்தானம் அமையவேண்டும் என்பதாக தனது அபிப்ராயத்தோடு நூலாசிரியர் பதினோராவது படலத்தை நிறைவுசெய்கிறார். (பக்கம் 17–18).

பன்னிரெண்டவது படலம்

முதலில் பரிவாரங்களை அமைக்கும் இடத்தைக்கூறி கிழக்கு வாயிலின் தேவதாகாரத்தில் முதல் ப்ராகாரத்தின் இரண்டாவதில் இந்திரனுக்கும், ஈசானனுக்கும் நடுவில் திருமஞ்சன தீர்த்தம் பானீயம் ஸமர்ப்பிக்கும் தீர்த்தம், புஷ்பங்களைச் சேகரித்து வைப்பதற்கும்; ப்லோத வஸ்த்ரம், சந்தனம், தாம்பூலம் ஆகிய அர்ச்சனைக்குரிய த்ரவ்யங்களை வைத்துக்கொள்வதற்கும் இடம் ஒதுக்கவேண்டும் என்றும்; இந்திரனுக்கும் அக்னிக்கும் இடையில் பெருமாளுக்குப் பள்ளியறை அமைக்கவேண்டும் என்றும்; வடக்கு வாயிலாக கோயில் அமைந்திருப்பின் சோமனுக்கும், வாயுவிற்கும் இடையில் திருமஞ்சன தீர்த்தம் சேமித்துவைப்பதற்கான இடமும், த்ரவ்யங்களை வைக்கும் இடமும் அமைக்கவேண்டும். சோமனுக்கும்,

Koviloor Digital Library

ஈசானனுக்கும் இடையில் பெருமாளுக்கு சயன அறை அமைக்கவேண்டும் என்றும்; சமையலறை எப்பொழுதும் அக்னி மூலையில்தான் அமைக்கவேண்டும் என்பதாகவும் நூலாசிரியர் கூறுகிறார். (பக்கம் 20-22).

பெருமாளைச் சூழ்ந்துள்ள தேவதைகளின் இடத்தைக்கூறி; வாயில்களில் பூஜிக்கவேண்டியதான ஆறு தேவதைகளையும்; விமான பாலகர்கள்; கோபுர கலசத்தின் அடியில் ஆவாஹனம் செய்யவேண்டிய நான்கு தேவதைகளின் பெயர்கள் சொல்லப் பெற்றுள்ளது. நுழைவு வாயிலின் த்வாரதேவதைகள்ல மணிகன் - ஸந்த்யா; முகமண்டப வாயிலின் த்வாரதேவதைகள் விகனஸன் - தாபஸன்; முதல் ப்ராகார த்வாரதேவதைகள் கிஷ்கிந்தன் - தீர்த்தன் இரண்டாவது த்வாரதேவதைகள் விக்னேசன் - நாகேசன் மூன்றாவது த்வாரதேவதைகள் சங்கன் - பத்மன் நான்காவது த்வாரதேவதைகள் துஹினன் - பலிந்தன் ஐந்தாவது த்வாரதேவதைகள் நந்தகன் - சார்ங்கன் ஆறாவது த்வாரதேவதைகள் சக்ரசூலீ - சங்கசூலி ஏழாவது த்வாரதேவதைகள் சண்டன் - ப்ரசண்டன் ஆகியவைகளைச் சொல்லி, பிறகு விஷ்வக்ஸேனர், ஸ்ரீபூதன், கருடன், சக்ரம், த்வஜம், சங்கம், யூதாதிபம், அக்ஷஹந்த்ரு, அனபாயி ஆகியோர்களுக்கான இடங்களையும் எடுத்தியம்பியுள்ளார். (பக்கம் 23-25).

முதல் ப்ராகாரம் தொடங்கி ஏழு ப்ராகாரங்களுக்குள் அனைத்து தேவதைகளுக்கும் இடங்கள் தெளிவாகச் சொல்லப் பெற்றுள்ளது. (பக்கம் 27-29)

பலிபீடம் அமைப்பதற்கான பீடம் எவ்வாறு இருக்கவேண்டும் என்றும் கூறி பன்னிரண்டாவது படலத்தை நிறைவு செய்கிறார். (பக்கம் 31)

பதிமூன்றாவது படலம்

கர்பவிந்யாஸ விதியைப் பற்றிக் கூறும்போது சமுத்திரம் (கடல்) மலை, நதிக்கரை, மேட்டு நிலம், யுத்தகளம், புற்று, வானம் ஆகிய

Koviloor Digital Library

அனைத்து இடங்களிலிருந்தும் மண் எடுத்து வந்தும்; யானை தந்தத்தாலும், எருது கொம்பாலும் பெயர்த்த மண்ணும்; வைரம், முத்து, வைடூர்யம், ஸ்படிகம், புஷ்பராகம், சந்த்ரகாந்தம், நீலக்கல், மனச்சிலை, ஹரிதாளம், அஞ்ஜனம், கோரோசனை, தங்கத்துகள்கள், அரிசி, உளுந்து, கொள்ளு, எள், பயறு, யவதான்யம், தங்கம், வெள்ளி, தாமிரம், பித்தளை, இரும்பு, வெள்ளீயம், ஈயம்; தாமரை, நீலோத்பலம், தாமரைக்கிழங்கு ஆகிய அனைத்தையும் முதலில் சேகரிக்கும்படி கூறுகிறார். (பக்கம் 32-33).

தங்கத்தினால் நான்கு வர்ணங்களின் முத்திரைகள், ஸ்ருக், ஸ்ருவம், கமண்டலு, ஜுஹு, உபஜுஹு, குடை, சாமரம், அங்குசம், கொடி, தராசு, எடைக்கற்கள், நுகத்தடி, கலப்பை, யானை, கருடன், ஆமை; சங்கு, சக்கரம், கதை, வில், கத்தி- ஆகிய பஞ்சாயுதங்கள்; ஸ்ரீவத்ஸலக்ஷ்மீ, பூர்ணகும்பம், பேரீ, கண்ணாடி, இரட்டை மீன், அங்குசம், சங்கு, நீர்ச்சுழல் வட்டம் என்பதான அஷ்டமங்களங்கள் மற்றும் மேற்சொன்ன அனைத்தையும் கர்பபேளாவில் சேர்க்கும் அளவிற்கு நுணுக்கமாகத் தயார் செய்து வைத்துக் கொள்ள வேண்டும் என்கிறார் நூலாசிரியர். (பக்கம் 34).

பேளா ஸ்தாபனம் விமானங்களின் ஒவ்வொரு தளத்திற்கும் அந்தந்த சுவற்றின் அளவிற்குச் சற்று குறைவாகவும், ஒன்பது கோஷ்டங்கள் உள்ளதாகவும், உறுதியானதாகவும், அழகானதாகவும் பெட்டியை (பேளாவை)ச் செய்யவேண்டும் என்கிறார் மரீசி மஹரிஷி. (பக்கம் 35)

யஜமானனுக்கு அனுகூலமான நன்னாளில் தயார்செய்து வைத்துள்ள த்ரவ்யங்களை (பொருட்களை) சொல்லியுள்ள முறைப்படி பேளாவில் இடவேண்டும். பிறகு யாகசாலை அமைத்து அதற்குரிய ஹோமங்களைச் செய்துமுறைப்படி ஸ்தாபனம் செய்யும்படி கூறுகிறார். (பக்கம் 39-40)

நல்ல நாளில் கோயில் அமைக்கும் வேலையை நிறைவு செய்து மூடுகல்லை (நிறைவு கல்) அமைக்கவேண்டும் என்றும்; பொதுவாகக் கோயிலை ஒரு த்ரவ்யத்தால் நிர்மாணிப்பது மிகவும்

Koviloor Digital Library

உயர்ந்தது என்றும்; விமானம் எந்த த்ரவ்யத்தால் அமைக்கப் படுகிறதோ அதே த்ரவ்யத்தால் கலசமும் (ஸ்தூபியும்) அமைக்க வேண்டும் என்றும்; விமானத்திற்குமேல் தங்கம், வெள்ளி, தாமிரம் ஆகிய மூன்றில் ஏதாவது ஒன்றினால் கவசம் செய்யலாம் என்றும்; ஸ்தூபியை மட்டும் உலோகத்தால்தான் செய்யவேண்டும் என்ற தனது அபிப்ராயத்தைக் கூறிய ஆசிரியர் கலசத்தின் அடியில் குச்சியைச் சேர்த்து க்ராமத்தையோ ஆலயத்தையோ ப்ரதக்ஷிணம் செய்து; சொல்லப் பெற்றுள்ள ஹோமாதிகளைச் செய்து ஸ்தூபியை வைத்து ப்ரதிஷ்டை செய்யவேண்டும் என்பதைச் சொல்லி இந்த படலத்தை நிறைவு செய்கிறார். (பக்கம் 44-46).

பதினான்காவது படலம்

ஆலயங்களில் பரிவார தேவதைகளை அமைக்கும் விதமான ஒன்பதும் விபரமாக கூறப்பட்டுள்ளது. (பக்கம் 48-49)

ஆலயத்திலுள்ள பரிவார ஸந்நிதிகளின் கணக்கை ப்ரதானமாகக் கொண்டு அர்ச்சகர்கள், பரிசாரகர்களின் எண்ணிக்கை ஒன்பது விதமாகச் சொல்லப்பட்டுள்ளது. (பக்கம் 51-52).

ஆசார்யன், அர்ச்சகன், பரிசாரகன் ஆகியோர்கள் ஸௌக்யமாக இருக்கவேண்டும் என்பதற்காக அவர்களுக்கு நன்கு விளையக்கூடிய பூமியாக தானம் செய்யவேண்டும் என்றும், அதன் பலனும் விபரமாக எடுத்துரைக்கப்படுவதுடன் பதினான்காவது படலம் நிறைவுறுகிறது. (பக்கம் 53).

பதினைந்தாவது படலம்

பேரங்கள் செய்வதன் பொருட்டு கற்கள் தேர்ந்தெடுக்கும் முறையை நூலாசிரியர் கூறுகிறார். 'மலையில் தோன்றியவை, பூமியில் தோன்றியவை, ஜலத்தில் தோன்றியவை' என கற்கள் மூன்று வகைப்படும். அது ஆண், பெண், அலி என்பதாக மேலும் மூன்று வகைப்படும். ஆண் கற்களால் ஆண் சிலைகளும், பெண்

Koviloor Digital Library

கற்களால் பெண் சிலைகளும், அலி கற்களால் ப்ராஸாதம், சிறிய சுவர்கள் போன்றவைகளைச் செய்யலாம். பெருமாள், தாயார் இருவர் ஆகிய மூர்த்தங்களை ஒரே கல்லில் செய்யலாம் என்பது நூலாசிரியரான மரீசி மஹரிஷியின் அபிப்ராயமாகும். இதில் கர்ப்பிணீ கல்லாக இருந்தால் எதற்கும் பயன்படுத்தக் கூடாது என்று முக்யமாகக் கூறியுள்ளார். (பக்கம் 55-56)

சிலை செய்வதற்கான கல்லை தேர்ந்தெடுத்த பிறகு யஜமானனுக்கு நல்ல நாளாகப் பார்த்து ஆசார்யனானவர் யஜமானன், சில்பி, பக்தர்களுடன்கூட உரிய இடத்திற்குச் சென்று முறைப்படி பூஜைகளைச் செய்து நமக்கு வேண்டிய பாகத்தை எடுத்து ஆலயத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்பதாகக் கூறியுள்ளார். (பக்கம் 58).

த்ருவ பேரமானது தாமிரம், கல், மரம் ஆகிய மூன்றில் எதில் வேண்டுமானாலும் இருக்கலாம் என்றும்; மரத்தைவிட மண் சிறந்தது, அதனைவிடக் கல் உத்தமம், கல்லைவிட தாமிரம் முக்யம் என்பதாகக் கூறியுள்ளார். (பக்கம் 60).

முதன்முதலில் கோயில் அமைக்கும்பொழுது யஜமான னுடைய அளவு, கருவறையின் அளவு ஆகிய இரண்டையும் மனதில் கொண்டு த்ருவபேரத்தை அமைக்கவேண்டும். (பக். 61-62).

படம் எழுதி பூஜை செய்யும்முறை (சித்ரம்) கோடுகள் மட்டும் (line arts) முழு சித்திரமாக வரையும்முறை; (அர்த்தசித்ரம்) முன்பக்கம் மட்டும் வரையும்முறை; முழுவதும் வர்ணங்களோடு கூடியதாக வரையும்முறை என்பதாக மூன்று விதமாகச் சொல்வதுடன் அதன் பலன்களையும் எடுத்துக் கூறியுள்ளார். (பக்கம் 63-64).

அமைக்கப்பட உள்ள பேரத்தின் அளவைக் கொண்டு பீடம் அமைக்கவேண்டும் என்றும் அதற்கான அளவுகளின் விபரங்களும் தரப்பட்டுள்ளது. (பக்கம் 66).

கர்பக்ருஹத்தில் (கருவறையில்) மிக முக்பமான ப்ராம்மம், தைவிகம், மானுஷம், பைசாசம் என்பதான நான்கு பதங்களில் த்ருவ

V-iii

Koviloor Digital Library

பேரத்தை எந்த பதத்தில் ப்ரதிஷ்டை செய்தால் என்ன பலன் என்பதைக் கூறியுள்ளார். (பக்கம் 68).

த்ருவபேரத்தின் அளவைக் கணக்கில் கொண்டு ஸ்ரீதேவி, பூமிதேவி, ப்ருகு, மார்க்கண்டேயர், கருடன், ஆதிசேஷன், ப்ரம்மா, சிவன் ஆகிய அனைவருக்கும் அளவுகளைக் கூறுவதோடு பதினைந்தாவது படலத்தை நிறைவு செய்கிறார் நூலாசிரியர். (பக் 70).

பதினாறாவது படலம்

த்ருவபேரத்தை ஸ்தாபிப்பதன் பொருட்டு இடத்தைத் தீர்மானம் செய்தபிறகு, எப்பொழுது ப்ரதிஷ்டை செய்யவேண்டும் என்பது பற்றிய தெளிவான விபரங்களைக் கூறியுள்ளார் (அதாவது ப்ரதிஷ்டை செய்வதற்குரிய மாதங்கள், நக்ஷத்திரங்கள் சொல்லப்பெற்றுள்ளது. (பக்கம் 71).

ப்ரதிஷ்டை செய்வதற்கு முன்பு அங்குரார்ப்பணம், அதிவாஸங்கள் செய்யும் விபரங்கள் கூறப்பட்டுள்ளன. (பக். 71-73)

த்ருவபேரம் (பிம்பம்) பெரியதாக இருந்தால் கும்ப ஜலங்களினால் மந்த்ர பூர்வகமாக ப்ரோக்ஷித்தால் போதுமானது. பிறகு யாகசாலை அமைத்துச் சொல்லப்பட்ட ஹோமாதிகளைச் செய்து; பர்யக்னிகரணம், பஞ்சகவ்யம் முதலான சுத்திகளைச் செய்து; பன்னிரண்டு கலசங்கள் வைத்து பெருமாளுக்கு ஸ்நபனம் செய்வித்து; ஆடை, ஆபரணங்களால் அலங்கரித்துப் பெருமாளைத் தாயார்களுடன்கூட சயனத்தில் (படுக்கையில் படுக்க) எழுந்தருளப் பண்ணவேண்டும் என்பதாகக் கூறுகிறார் மரீசி. (பக்கம் 75-76).

கோயிலின் வாயிற்படியைப் பொருத்து அமைக்கப்பெற்ற பிம்பமானது பெரியதாக இருக்குமல்லவா? அப்படியாகில் ஜலாதிவாஸம் செய்யாமல் மந்த்ர பூர்வகமாகச் செய்து ப்ரோக்ஷிக்க வேண்டும் என்றும்; அதனைத் தொடர்ந்து சொல்லப்பெற்றுள்ள ஹோமாதிகளைச் செய்து பெருமாள், தாயார் ஆகிய அனைவரையும் அவரவர்களுக்கு உரிய இடத்தில் ப்ரதிஷ்டை செய்யவேண்டும் என்பதாகவும் கூறுகிறார். (பக்கம் 77-78).

சில்பியானவர் அஷ்டபந்தன மருந்துகளைச் சேர்த்து

Koviloor Digital Library

பிம்பத்தை த்ருடமாக ப்ரதிஷ்டை செய்தபிறகு மந்த்ர பூர்வகமாக ஆசார்யனானவர் ப்ரதிஷ்டை செய்யவேண்டும் என்பது மரீசி மஹரிஷியின் அபிப்ராயமாகும். மூர்த்தமானது பெரியதாயினும், சிறியதாயினும் அதனை ப்ரதிஷ்டை செய்தபிறகு, விமானத்தைச் செய்யவேண்டும். மண்ணால் கட்டப்பட்ட கோவிலிலும், கூரைவேய்ந்த கோவிலிலும் ஒரு பேரம்தான் ப்ரதிஷ்டை செய்ய வேண்டும் என்பது முக்கியமாகச் சொல்லப்பட்டுள்ளது. மேலும் பெருமாளுடைய (த்ருஷ்டியானது) பார்வையை சரியாக வைத்துப் ப்ரதிஷ்டை செய்யவேண்டும் என்ற அனைத்தையும் தெளிவாக எடுத்தியம்பியுள்ளார். (பக்கம் 79)

பிறகு கண் திறந்து, வாஸ்து ஹோமம் செய்து, பர்யக்னிகரணம், பஞ்சகவ்ய சுத்தி செய்து, அதிவாஸத்ரய ஹோமம் செய்து, ஸ்நபனம் செய்வித்து; உத்ஸவ பேரங்கள் தனியாக இருக்குமானால் அவற்றிற்கும் கண் திறந்து, ஸ்நபனம் செய்வித்து சயனம் சமர்ப்பிக்கவேண்டும் என்கிறார் நூலாசிரியர். (பக்கம் 81).

ஸப்யாக்னி குண்டத்தில் ஹோமாதிகளைச் செய்து, நான்கு திசைகளிலும் வேதபாராயணங்களைச் செய்வித்து, அதிகாலையில் பெருமாளுக்கு ஸ்நபனம் செய்வித்து, ரத்ன ந்யாஸத்தைச் செய்ய வேண்டும். பிறகு யஜமானனானவர் ஆசார்யர்களுக்கு தக்ஷிணா தானம் செய்து, சந்தோஷப்படுத்தி பூர்ணாஹுதியைச் செய்ய வேண்டும் என்பதாகக் கூறுகிறார் மரீசி. (பக்கம் 82).

ப்ரதிஷ்டைக்குரிய முகூர்த்தம் வந்தவுடன் பெருமாளை வணங்கி, அனுமதியைப் பெற்று, ஆசார்யன் அஷ்டபந்தனத்தைச் சாத்தவேண்டும் என்பதாக மரீசி மஹரிஷி கூறுகிறார். (பக்கம் 83-84).

பிறகு ஆசார்யனானவர் த்ருவபேரத்திற்குரிய சுத்திகளைச் செய்து, பூஜித்த கும்பத்தை எடுத்துத் தலையால் தாங்கிக்கொண்டு கிராம மக்கள், யஜமானர்கள் புடைசூழ ஆலயத்தை வலம்வந்து, கருவறைக்குச் சென்று, வடக்குமுகமாக நின்றுகொண்டு, எம்பெருமானிடத்தில் ஆத்மஸூக்தம், அக்ஷர ந்யாஸம், மந்த்ர ந்யாஸம் ஆகியவைகளை மனதால் தியானித்து ப்ரதிஷ்டை செய்ய வேண்டும் என்றும், பிறகு நன்கு பூஜிக்கவேண்டும் என்பதாகக்கூறி

Koviloor Digital Library

பதினாறாவது படலத்தை நிறைவு செய்கிறார் நூலாசிரியர் (பக்கம் 85-86).

பதினேழாவது படலம்

த்ருவபேரம் செய்வதன் பொருட்டு மரம் எங்கு இருந்தால் எடுத்துக் கொள்ளத்தக்கவை; எங்கு இருந்தால் விலக்கத்தக்கவை; எப்படி இருந்தால் என்ன பேரம் செய்யலாம் என்பது போன்ற விளக்கங்களைக் கூறி (மரம்) தேர்ந்தெடுக்கும் முறையைத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். (பக்கம் 87-89).

மரத்தைத் தேர்ந்தெடுப்பதன் பொருட்டு ஆசார்யன்-யஜமானர் சில்பியுடன்கூட காட்டிற்குச் சென்று சகுனங்களைப் பார்க்க வேண்டும் என்றும், எந்தெந்த சகுனங்கள் நல்லவை, எவை அசுபமானவை என்பதையும் எடுத்துரைக்கிறார். (பக்கம் 90).

பிறகு நல்ல முகூர்த்தத்தில் குறிப்பிட்ட அந்த மரத்தை அடைந்து, சுற்றிலும் சுத்தம் செய்து, வனதேவதைகளைப் பூஜித்து, புஷ்பம் பலி சாதிக்கவேண்டும் என்றும்; பெருமாள், ஸ்ரீதேவி, பூமிதேவி ஆகிய மூவருக்கும் உள்ள மந்த்ரங்களைச் சொல்லி; ஆசார்யனானவர் த்ருவபேரங்களைச் செய்வதற்கான மரங்களை முதலில் வெட்டிய பிறகு ஸ்தபதியானவர் வெட்டவேண்டும் என்றும், எந்த திசையில் விழுகிறதோ அவற்றிற்கான பலன்களும் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. (பக்கம் 91-92)

யஜமானன் ஆசார்யன் முதலியோருக்கு தக்ஷிணையைக் கொடுத்து, மரத்தை வண்டியிலேற்றி செயற்கூடத்திற்குக் கொண்டு வந்து, அளவைத் தீர்மானித்து நன்கு அமைக்கவேண்டும் என்றும், த்ருவபேரம் கருவறையின் அளவைக்கொண்டு நிர்மாணம் செய்ய வேண்டும் என்பதாகவும் சொல்லி பதினேழாவது படலத்தை நூலாசிரியர் நிறைவு செய்கிறார். (பக்கம் 93-101).

பதினெட்டாவது படலம்

நல்ல நாள் பார்த்து, மூன்று நாட்களுக்கு முன்பு

Koviloor Digital Library

அங்குரார்ப்பணம் செய்து, சூலஸ்தாபனத்தைச் செய்யவேண்டும் என்றும்; பிறகு யாகசாலை அமைத்துத் தண்டங்களையும், சூலங்களையும் வைத்து ஹோமாதிகள், பர்யக்னிகரணம் போன்றவை களைச் செய்து (தண்ட-சூலங்களை) சயனத்தில் எழுந்தருளப்பண்ண வேண்டும் என்கிறார் மஹரிஷி. (பக்கம் 102, 105, 106).

சயனத்தில் எழுந்தருளப்பண்ணிய பிறகு, நான்கு பக்கங் களிலும் நான்கு வேதங்களையும் பாராயணம் பண்ணுமாறு செய்யவேண்டும் என்றும்; பிறகு ஸப்யாக்னி குண்டத்தில் பரிசேஷணம் செய்து, ஹௌத்ரப்ரசம்சனம் செய்து, அதற்குரிய ஹோமங்களைச் செய்யவேண்டும் என்பதாகவும் கூறியுள்ளார். (பக்கம் 106-107).

பிறகு அதிகாலை வந்தவுடன் கருவறைக்குச் சென்று த்ருவபேரத்தை ஸ்தாபிக்கவேண்டிய இடத்தில் ரத்ன ந்யாஸத்தைச் செய்யவேண்டும் என்றும்; யஜமானனானவர் ஆசார்யனுக்குத் தக்ஷிணைகளைக் கொடுத்து, பூஜித்துத் திருப்தி செய்து பிறகு யாகசாலைக்குச் சென்று தண்டங்களைக் கருவறைக்குக் கொண்டுவந்து உரிய மந்த்ரங்களைச் சொல்லி ப்ரம்மதண்டத்தை ஸ்தாபிக்கவேண்டும் என்றும், மற்ற தண்டங்களைப் பொதுவாக அமைக்கும் முறையைக்கூறி; த்ருவபேரம் நின்ற, கிடந்த திருக்கோலமாகில் எவ்வாறு தண்டங்களை அமைக்கவேண்டும் என்பது பற்றியும் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். (பக்கம் 108-110).

பிறகு சில்பியை அழைத்துப் பூஜித்து வழக்கமான மரியாதைகளைச் செய்து; அந்தந்த தண்டங்களை இணைக்கும் கட்டு இருக்கமாக இருப்பதன் பொருட்டு தாமிரப்பட்டையைக் கொண்டு பந்தனம் பண்ணவேண்டும் என்றும்; பிறகு ஏழு த்ரவ்யங்களை சொல்லியுள்ள அளவுப்படி ஒன்றுசேர்த்துக் காய்ச்சி அதற்குரிய ஹோமாதிகளைச் செய்து, அதனை எடுத்துக்கொண்டு ஆலயத்தை வலம்வந்து கருவறையில் நுழைந்து உரிய மந்த்ரங்களைச் சொல்லி சூலங்களுக்குத் தடவச் செய்யவேண்டும் என்றும்; பிறகு யஜமானனானவர் ஆசார்யன் முதலானோர்க்குத் தக்ஷிணையைக்

Koviloor Digital Library

கொடுக்கவேண்டும் என்பதாகவும் கூறுகிறார் மரீசி (பக்கம் 114).

த்ருவபேரம் செய்வதற்கான மண்ணை எடுத்துவந்து, நன்கு சுத்தம் செய்து, புதிய பானையிலோ பெரிய பாத்திரத்திலோ சேர்த்து; அத்துடன் கருங்காலி கஷாயத்தைச் சேர்த்து; ஒருமாத காலம் ஊற வைக்குமாறு கூறுகிறார். (பக்கம் 115).

மேலும் பலமுறைகளைச் செய்து ஹோமாதிகளைச் செய்து நன்கு பூஜித்து, அந்தக் கயிற்றுக்குமேல் இந்த மண்ணைப் பூசவேண்டும் என்றும் கூறுகிறார் மஹரிஷி, (பக்கம் 119)

பிறகு மணல் கொண்டுவந்து நன்கு சுத்தம் செய்து, பொடி செய்து; கஷாயங்களைச் சேர்த்து நன்கு பூசி; பருத்தியினாலான மெல்லிய துணியைக் கொண்டுவந்து, அதற்குரிய ஹோமாதிகளைச் செய்து; பிறகு சுருக்கமில்லாமல் துணியை அந்த மண் பூச்சுக்குமேல் ஒட்டவேண்டும். பிறகு ஆபரணங்களாலே அலங்கரிக்கவேண்டும். அதற்குமேல் மண்பிசினைத் தடவவேண்டும். த்ருவபேரத்தின் அங்கங்களில் குறைவு ஏற்பட்டால் யஜமானனுக்கும் அதே இடத்தில் அங்கக்குறைவு ஏற்படும் என்பதாகவும் மரீசி மஹரிஷி கூறுகிறார். (பக்கம் 122-123).

பிறகு யுகங்களை ப்ரதானமாகக்கொண்டு வெளுப்பு, மஞ்சள், மேகவர்ணம், கருப்பு என்பதாக நான்கு வண்ணங்கள் சொல்லப்பட்டு; அவற்றிற்குரிய ஹோமாதிகளைச் செய்து, பிறகு த்ருவபேரத்திற்கு வண்ணமிடவேண்டும் என்பதாகக்கூறி பதினெட்டாவது படலத்தை நிறைவு செய்கிறார் நூலாசிரியர். (பக்கம் 125-126)

பத்தொன்பதாவது படலம்

த்ருவபேரம் நின்ற, அமர்ந்த, கிடந்த நிலை என்பதாக மூன்று வகையாகச் சொல்லப்பட்டு; யோகம், போகம், வீரம், ஆபிசாரிகம் என மேலும் நான்குவகையாகப் பேசப்பட்டு; இந்த மூர்த்தங்களை

Koviloor Digital Library

அமைக்கும் இடங்களையும் தெளிவாக விளக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பக்கம் 127-128)

நின்றநிலை மூர்த்தங்களுக்கு ஏற்ற விமானங்கள் என்னென்ன என்றும்; அமர்ந்தநிலை மூர்த்தங்களுக்கேற்ற விமானங்கள் என்னென்ன என்றும்; கிடந்தநிலை மூர்த்தங்களுக்கு ஏற்ற விமானங்கள் என்னென்ன என்றும் எடுத்துக் கூறியுள்ளார். (பக். 130).

விமானங்களில் வைக்கப்படவேண்டிய படிமங்களின் விபரங் களையும் தெளிவாக எடுத்தியம்பியுள்ளார். (பக்கம் 130).

வாகனத்தில் அமர்ந்துள்ள மூர்த்தங்களுக்கு எல்லாவகை விமானங்களும் பொருந்தும் என்றும்; த்ருவபேரத்தில் எடுக்கத்தக்க அளவை தீர்மானித்து லக்ஷணமாக அமைத்து கருவறையில் உரிய இடத்தில் ஸ்தாபிக்க வேண்டும் என்றும்; இவ்வகையில் ஸ்தாபிக்கப்படும் மூர்த்தங்களின் திருமுகமண்டலம் எந்த திசையைப் பார்த்து அமைந்துள்ளதோ அதற்குத் தகுந்தாற்போல் பலன் மாறுபடும் என்றும்; ஆபிசாரிக மூர்த்தங்களை அமைக்கும் முறையையும், அதன் பலன்களையும் கூறியுள்ளார். (பக்கம் 131-132)

யோக, போக, வீரமூர்த்தங்களின் மூன்றுவிதங்களும், ஆபிசாரிக ஸ்தானகமூர்த்தியின் லக்ஷணங்களும் விசதமாகக் கூறப்பட்டுள்ளது. (பக்கம் 132-138).

அந்தந்த மூர்த்தங்களுக்கு உண்டான பீடங்களும், அதன் அளவுகளும், அதனை ஸ்தாபிக்கும் முறைகளும் விபரமாகச் சொல்லப்பட்டுள்ளது. (பக்கம் 139). யோக, போக, வீர, ஆபிசாரிகாஸனத்தின் உத்தமத்வத்தைக் கூறியுள்ளார் (பக்கம் 140-146). பத்மாஸனம், பத்மஸிம்ஹாஸனம், பத்ராஸனம் போன்றவற்றின் அளவுகள், லக்ஷணங்கள் ஆகியவற்றை விபரமாக எடுத்துரைத்துள்ளார் (பக்கம் 147-149). யோகசயன, போகசயன, வீரசயன மூர்த்தங்களின் உத்தமத்வமும்; அதன் வகைகளையும்; ஆபிசாரிகமூர்த்தங்களின் லக்ஷணங்களையும் எடுத்தியம்பியுள்ளார் (பக்கம் 149 - 156). அனந்தசயனத்தின் லக்ஷணங்களையும், ப்ரம்மாதிகளின் இடம், அளவு, நிறம் போன்றவைகளை நிர்ணயம்

Koviloor Digital Library

செய்வதோடு அவர்களின் லக்ஷணங்களையும்கூறி பத்தொன்பதாவது படலத்தை நிறைவுசெய்கிறார் நூலாசிரியர். (பக்கம் 160-161).

இருபதாவது படலம்

பெருமாள்-தாயார் ஆகியோருக்கான வண்ணங்கள், வாகனம், கொடி, பெயர், நக்ஷத்ரம், பீஜாக்ஷரம் ஆகிய அனைத்தையும் தெரிந்துகொண்டு பூஜை செய்யவேண்டும் என்றும்; இல்லையேல் நாம் செய்யும் பூஜையின் பலனை அசுரர்கள் எடுத்துக் கொள்கிறார்கள் என்றும் கூறுகிறார். (பக்கம் 165).

பெருமாளுக்கு வண்ணங்கள் யுகத்தின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுவதுடன் பொதுவாக ஒரு நிறமும் சொல்லியுள்ளார் மஹரிஷி. (பக்கம் 166).

முதல் ஆவரண தேவதைகள் : முதலில் பெருமாளுக்கு உரிய லக்ஷணங்களைத் தெளிவாகக் கூறியுள்ளார். (பக்கம் 167).

அதனைத் தொடர்ந்து புருஷன், கபிலன், ஸத்யன், யக்ஞன், அச்யுதன், நாராயணன், அநிருத்தன், புண்யன் ஆகிய எட்டு தேவதைகளுடைய லக்ஷணங்களையும்கூறி அவர்களுக்கான சதுர்நாமாக்களையும் கூறியுள்ளார் (பக்கம் 168-172).

இரண்டாவது ஆவரண தேவதைகள் : வராகன், ஸுபத்ரன், நரஸிம்மன், ஈசிதாத்மா, வாமனன், ஸர்வேசன், த்ரிவிக்ரமன், ஸர்வவித்யேச்வரன் ஆகியோருடைய லக்ஷணங்களையும், சதுர்நாமாக்களையும் கூறியுள்ளார். (பக்கம் 173-177).

மூன்றாவது ஆவரண தேவதைகள் : இந்திரன், அக்னி, யமன், நிர்ருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகிய அனைவருடைய லக்ஷணங்களையும்கூறி அவர்களுக்கான சதுர்நாமாக்களையும் சொல்லி; அவர்களை (இந்த அஷ்டதிக்-பாலகர்களை) த்ருவபேரத்தின் நிலையை அனுசரித்து த்யானிக்க வேண்டும் என்றும் தெளிவாகக் கூறி, ஸ்ரீதேவி - பூதேவிக்கான லக்ஷணங்களையும், சதுர்நாமாக்களையும் கூறியுள்ளார். (பக்கம்

Koviloor Digital Library

கோ... நூலகம், கோவிலூர் A. No. 9558 ND

178-185).

கௌதுகபேரத்தினுடைய பீடத்தில் முதல் ஆவரண தேவதைகளான ஸுபத்ரன், ஸர்வன், ஹயாத்மகன், ஸுகாவஹன், ராமதேவன், ஸம்வஹன், புண்யன், ஸுவஹன், ஆகியோருக்கான லக்ஷணங்களையும், சதுர்நாமாக்களையும் கூறியுள்ளார். (பக்கம் 186-189).

கௌதுகபேரத்தினுடைய பீடத்தில் இரண்டாவது ஆவரண தேவதைகளான மித்ரன், அத்ரி, சிவன், விச்வன், ஸனாதனன், ஸநந்தனன், ஸனத்குமாரன், ஸனகன் ஆகியோருக்கான லக்ஷணங்களையும், சதுர்நாமாக்களையும் கூறியுள்ளார். (பக். 190-192).

கௌதுகபேரத்தினுடைய பீடத்தில் மூன்றாவது ஆவரண தேவதைகளான இந்திரன், அக்னி, யமன், நிர்ருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகிய அனைவருடைய லக்ஷணங்களையும், சதுர்நாமாக்களையும் பக்கம் 178 முதல் 183 வரை சொல்லியுள்ளபடி படித்துக்கொள்ளுமாறு கூறுகிறார். (பக்கம் 192).

ப்ரம்மனின் லக்ஷணமும், சதுர்நாமாக்களையும்; ப்ரம்மா, மார்க்கண்டேயர், கங்காதரன், (சிவன்), பத்மாபிதா ஆகிய அனைவருக்கும் லக்ஷணங்களையும், சதுர்நாமாக்களையும் கூறியுள்ளார். (பக்கம் 193-195).

த்வார (வாயில்) தேவதைகளான தாதாரன், விதாதாரன், புவங்கன், பதங்கன், பதிரன், வருணன் ஆகிய அனைவருக்கும் லக்ஷணங்களையும், சதுர்நாமாக்களையும் கூறியுள்ளார். (பக்கம் 196-198).

ஆலயத்திற்கு வெளியில் ந்யக்ஷன், விவஸ்வந்தன், மித்ரன், க்ஷத்தா ஆகிய நான்கு தேவதை களுடைய லக்ஷணங்களையும், சதுர்நாமாக்களையும் கூறியுள்ளார். (பக்கம் 199-200).

முதல் த்வாரதேவதைகளான மணிகன், ஸந்த்யா ஆகியோருக்கான லக்ஷணங்களைக்கூறி; முகமண்டப த்வார தேவதைகளான விகனஸன், தாபஸன் ஆகியோருக்கான லக்ஷணங்களையும், சதுர்நாமாக்களையும் கூறியுள்ளார். (பக்கம் 201-

Koviloor Digital Library

203).

முதல் ஆவரணத்தின் த்வாரதேவதைகளான கிஷ்கிந்தன், தீர்த்தன் ஆகிய இருவருக்கும் உண்டான லக்ஷணங்களையும், சதுர்நாமாக்களையும் கூறியுள்ளார். (பக்கம் 204-205).

இரண்டாவது ஆவரணத்தின் த்வாரதேவதைகளான வக்ரதுண்டன் (கணபதி), நாகராஜன் ஆகிய இருவருக்கும் லக்ஷணங்களையும், சதுர்நாமாக்களையும் கூறியுள்ளார். (பக்கம் 206-207).

மூன்றாவது ஆவரணத்தினுடைய த்வாரதேவதைகளான சங்கநிதி, பத்மநிதி ஆகியோருக்கும், நான்காவது ஆவரணத்தினுடைய த்வாரதேவதைகளான துஹினன், பலிந்தன் ஆகியோருக்கும், ஐந்தாவது ஆவரணத்தினுடைய த்வார தேவதைகளான நந்தகன், சார்ங்கன் ஆகியோருக்கும், ஆறாவது ஆவரணத்தினுடைய த்வாரதேவதைகளான சங்கசூலி, சக்ரசூலி ஆகியோருக்கும், ஏழாவது ஆவரணத்தினுடைய த்வாரதேவதை களான சண்டன், ப்ரசண்டன் ஆகியோருக்கும், லக்ஷணங்களையும், சதுர்நாமாக்களையும் கூறியுள்ளார். (பக். 207-214).

விஷ்வக்ஸேனருக்கு இடமும், அவரது லக்ஷணங்களையும், சதுர்நாமாக்களையும் கூறியுள்ளார். அதனைத் தொடர்ந்து ஸ்ரீபூதம், கருடன் ஆகியோருக்கான லக்ஷணங்களையும், சதுர்நாமாக்களையும் கூறியுள்ளார். (பக். 215-218).

சக்ரம், சங்கு, த்வஜம், யூதாதிபன் (கம்பத்தடியான்), அக்ஷஹந்த்ரன், ஆவரண பலிதேவதைகள் ஆகிய அனைவருக்கும் லக்ஷணங்களையும், சதுர்நாமாக்களையும் கூறியுள்ளார். (பக். 218-223).

இரண்டாவது ஆவரணத்தில் நவக்ரஹத்திற்கான இடங்களையும் அவர்களின் லக்ஷணங்களையும், சதுர்நாமாக் களையும் கூறியுள்ளார். (பக். 224-230).

மூன்றாவது ஆவரணத்தில் கங்கா, நர்மதா, ஸிந்து, துர்கா,

Koviloor Digital Library

சரஸ்வதி, லக்ஷ்மி, ஜ்யேஷ்டா, தாத்ரீ, ஸுரா, ஸுந்தரீ, ஸ்வாஹா, ஸ்வதா, ஸம்ஹ்லாதினீ, ராகா, ஸிநீவாலீ, ஹவிரக்ஷகன், புஷ்பரக்ஷகன், புருஷன், ப்லோதாதிபன்; சயன ஸ்தானத்தில் கதை சாமுண்டன், பலிரக்ஷகன் ஆகிய அனைத்து தேவதைகளுக்கும் உரிய இடங்களையும், லக்ஷணங்களையும், சதுர்நாமாக்களையும் எடுத்தியம்பியுள்ளார் நூலாசிரியர். (பக். 230-249).

நான்காவது ஆவரணத்தில் கவிஷ்டன், ஹரிணீ, தோயன், அக்னி, வாயு, ரிக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வவேதம், சிவன், விஷ்ணு, காச்யபர், குஹன், பங்க்தீசன், பவித்ரன், பாவனன், தக்ஷகன், குஹு, அனுமதி, ஸப்தமாத்ருக்கள்; எட்டு ஜயாதி தேவதைகள்; ப்ராணன், மருத், சதருத்ரர்கள்; ஏகாதச ருத்ரர்கள்; த்வாதச ஆதித்யர்கள்; கந்தர்வர்கள்; முனிகள், அப்ஸரஸுக்கள்; அச்வினீ தேவர்கள்; வஸுக்கள்; வித்யாதரர்கள், தும்புரு, நாரதர், ருதுக்கள், ப்ரஜாபதி, முத்களன், ஹலேசன், ஜாம்பவான், அஸுரன், கின்னர மிதுனர்கள், ப்ரஹ்லாதன், மதனன், விபா, வ்யாஜினீ, காமினீ, சந்த்ரபா, ஸுந்தரன், ப்ரம்மாதிபத தேவதைகள் ஆகிய அனைவருக்கும் இடங்களையும், லக்ஷணங்களையும், அவரவர்களுக்குரிய சதுர்நாமாக்களையும் எடுத்துக்கூறுவதோடு இருபதாவது படலத்தை நூலாசிரியரான மரீசி மஹரிஷி நிறைவு செய்கிறார். இத்துடன் இந்த நூலும் நிறைவடைகிறது. (பக் 249-296).

Koviloor Digital Library

AN APPEAL

Manuscripts on Palmleaf or Paper of the ancient works of the wise men of the past, are the great treasures, solely inherited by the Nation and it is the moral obligation of persons who possess them to preserve them safely for the future generations of mankind.

Probably you have some of these in your possession or you know friends or neighbours who possess them. You can make a great contribution to the cause of the preservation not only of our national Culture but also to the Culture of Humanity as a whole by arranging to present such manuscipts to the famous T.M.S.S.M.Library, Thanjavur.

The Manuscripts so presented will be accepted and acknowledged with pleasure and gratitude by the authorities of the Library, preserved with meticulous care and made available to succe -ssive generations of readers and scholars for study and research. The hitherto unpublished works found among them will be printed and published in due course, as facilities occur, with the expression of the Library's gratitude for your gift.

The great Scholar King of Tanjore, **Rajah Serfoji**, has attained immortal fame by dedicating enormous time and wealth to the expansion and firm establishment of this world famous **'Sarasvati Mahal'**. It is open to you to share the honour of Serfoji, in your own measure by contributing your manuscripts to the great institution built by him.

This great Honour is beckoning to you to accept it. Will you hasten to take it up? The Library waits for your answer.

DISTRICT COLLECTOR AND DIRECTOR
Sarasvati Mahal Library, Thanjavur.

Koviloor Digital Library

विषयानुक्रमणिका

एकादशः पटलः 1

प्राकार लक्षणम्
हस्तमान त्रैविध्यम्
गोपुर लक्षणम्
तटाकतीर्थमण्टपानां लक्षणम्
महामण्टपस्य मानविकल्पः
परिवाराणामालय निर्माणम्
प्रथमावरणे द्वितीये वा स्नपनमण्टपम्
द्वितीय तृतीयादिषु स्नपनपचनालयादि कल्पनम्

द्वादशः पटलः 19

परिवारस्थानम्
चक्रध्वजशङ्खादीनां स्थान कल्पनम्
पचनालयादीनां मूलालयाभिनुख्यम्
स्नपनस्थान प्राकार गोपुराणां
बहिर्मुखत्वम् (पीठावरणत्रयदेवाः)
सप्तावरणदेवाः अष्टादशद्वारपालाः
विष्वक्सेन स्थानम्
यूथेश पीठलक्षणम्

त्रयोदशः पटलः 32

गर्भविन्यास विधिः
वर्णचिह्नपञ्चायुधानि, अष्टमङ्गलानि, फेलालक्षणम्
फेलायां समन्त्रकं द्रव्यविन्यसविधिः
ब्राह्मणादिभेदेन फेलास्थान विवेकः

Koviloor Digital Library

समाप्तेष्टकाशिला विन्यास विधिः

स्थूपिकाग्रविन्यासविधिः

चतुर्दशः पटलः 47

परिवाराणां नवभेद निरूपणम्

अर्चकादि सङ्ख्याभेदेन, अधमादिकथनम्

आचार्यादीनां भूम्यादिदानम्

पञ्चदशः पटलः 54

बेरार्थं शिलाग्रहणम्

शिलानां त्रैविध्यम्

शिलानां पुंस्त्वादि भेदाः तत्कार्यञ्च

देवदेवीनां एकैक शिलेति मतान्तरम्

गर्भिणीशिलात्यागः

नवविधाङ्गुलभेदः

शिलानयन प्रकारः

दारवादिबेरकर्माणि

दारव मृण्मयादीनां उत्तरोत्तरं श्रैष्ठ्यम्

ध्रुवबेर विधानम्

चित्रादि विधानम्

अर्धचित्रार्चनं केवलामुष्मिकप्रदम्

पीठविधानम्

ध्रुवार्थमाभासनिषेधः

गर्भालय पदविन्यास विधानम्

देव्यादि प्रमाणम्

ब्रह्मादि स्थानेषु ध्रुवस्थापने फलभेदः

देवस्य बाह्वन्तं स्तनान्तं कर्णान्तम्

Koviloor Digital Library

देवदेवी परिषदां एकद्रव्येणकरणम्

स्थानकादीनां पीठादिषु रत्नन्यास विधानम्

षोटशः पटलः 71

शिलाबेर स्थापन विधिः

यागशाला शय्यादीनां लक्षणम्

शिल्पिना अमन्त्रकं ध्रुवबेरस्थापनम्

सुमुहूर्त्ते ध्रुवस्थापनम्

अष्टबन्ध प्रयोगः तद्द्रव्याणि

सप्तदशः पटलः 87

बेरार्थं दारुग्रहणम्

ग्राह्यंदारवः

अग्राह्यदारवः

लिङ्गभेदेनदारुत्रैविध्यम्

गमनकाले निमित्तदर्शनम्

वृक्षपतने दिग्भेदेन फलभेदः

ऊरुदण्डादीनां अङ्गुलसङ्ख्या अग्रेताम्रपट्टबन्धनम्

प्रसारित पादादीनां सन्ध्यभावः

अष्टादशः पटलः 102

शूलस्थापन विधिः

धान्यवेदि शूलस्तापनम्

सभ्यहोमः

अष्टबन्धः

रज्जुवेष्टनम्

मृत्सङ्ग्रहणम्, तत्संस्कारः

हृदयादिभेदेन पद्मरागादि स्थापनम्

Koviloor Digital Library

दारुशिलाभेदेन शर्करादि स्थापनम्

एकोनविंशः पटलः 127

नेत्रादिच्छिद्रे अन्धत्वादि दोषः

ध्रुवबेरविधिः

स्थानकादिभेदेन ध्रुवत्रैविध्यम्; तस्यैव योगादिभेदेन चातुर्विध्यम्

स्थानकादिभेदेन विमानभेदः

दैविके स्थानकं यानकं, मिश्रभेदेनभेदः

प्राग्द्वारादीनां फलम्

उत्तरशीर्षमाभिचारिकम्

स्थानकादि ग्रामप्रेक्षं कर्तव्यम्

योगत्रैविध्यम्

भोगत्रैविध्यम्

वीरत्रैविध्यम्

आभिचारिकस्थानकम्

पीठपरिमाणम्

योगासनस्योत्तमत्वादिकम्

भोगासनस्योत्तमत्वादिकम्

वीरासनस्योत्तमत्वादिकम्

आभिचारिकासनस्योत्तमत्वादि पद्मासनम्

पद्मसिंहासनम्

भद्रासनम्

योगशय्या तदुत्तमत्वादि

भोगशयनं तदुत्तमत्वादि

वीरशयनं तदुत्तमत्वादि

आभिचारिकम्

Koviloor Digital Library

अनन्तशयनलक्षणम्
ब्रह्मादीनां स्थानप्रमाणवर्णादि निर्णयः
ध्रुवायामवशात् ब्रह्मगरुडादीनां प्रमाणम्
विंशतितमः पटलः 165
देवस्य वर्णनिर्णयः
प्रथमावरणदेवाः
द्वितीयावरणदेवाः
तृतीयावरणदेवाः
श्रीभूचतुर्नाम-
पुरुषादिदेवीनां चतुर्नाम
कर्मार्चास्थाने प्रथमावरणदेवाः
सर्वः
हयाननः
सुखावहः
रामदेवः
सुवहः
पुण्यः
सुवहः
द्वितीयावरणदेवाः
मित्रादीनां लक्षणम्
मित्रादीनां चतुर्नाम
तृतीयावरण देवाः
ब्रह्मादिलक्षणम्
ब्रह्मणोलक्षणम्
मार्कण्डेयस्य

Koviloor Digital Library

गङ्गाधरस्य

पद्मापितुः

धात्रादीनां लक्षणम्

धात्रादीनां चतुर्नाम

आलयबाह्ये न्यक्षादि देवाः

न्यक्षः

विवस्वः

मित्रः

क्षत्ता

प्रथमद्वारदेवते

विखनाः

तापसः

मुखमण्टपद्वारदेवते

मणिकः

तस्यपत्नी सन्ध्या

प्रथमावरणद्वारदेवते

किष्किन्धः

तीर्थः

द्वितीयावरणद्वारदेवते

वक्रतुण्डः

नागराजः

तृतीयावरणद्वारदेवते

शङ्खनिधिः

पद्मनिधिः

चतुर्थावरण द्वारदेवते

Koviloor Digital Library

तुहिणः

बलिन्दः

पञ्चमावरण द्वारदेवते

नन्दकः

शार्ङ्गः

षष्ठावरणद्वारदेवते

शङ्खचूली

चक्रचूली

सप्तमावरणद्वारदेवते

चण्डः

प्रचण्डः

विष्वक्सेन स्वरूपं स्वरनिर्णयश्च

श्रीभूतस्थानादि

गरुडस्थानादि

चक्रस्थानादि

शङ्खस्थानादि

ध्वजस्थानादि

यूथाधिपस्थानादि

अक्षहन्तृस्थानादि

चक्रादीनां स्थाने मतान्तरम्

आवरणबलिदेवाः

आदित्यस्य

चन्द्रस्य

अङ्गारकस्य

बुधस्य

Koviloor Digital Library

गुरोः

शुक्रस्य

मन्दस्य

राहोः

केतोः

तृतीयावरणे गङ्गादीनां चतुर्नामादिकम्

गङ्गायाः

यमुनायाः

नर्मदायाः

सिन्धोः

दुर्गायाः

सरस्वत्याः

श्रियः

ज्येष्ठायाः

धात्र्या

सुरायाः

सुन्दर्याः

स्वाहायाः

स्वधायाः

संह्लादिन्याः

राकायाः

सिनीवाल्याः

हविरक्षकस्य

पुष्परक्षकस्य

पुरुषस्य

Koviloor Digital Library

प्लोताधिपस्य

शयनस्थाने गदायाः

चामुण्ड़स्य

बलिरक्षकस्य

तुरीयावरण देवेषु - गविष्ठस्य

हरिणस्य

तोयस्य

अग्नेः

वायोः

ऋग्वेदस्य

यजुर्वेदस्य

सामवेदस्य

अथर्ववेदस्य

शिवस्य

विष्णोः

काश्पस्य

गुहस्य

पङ्क्तीशस्य

पवित्रस्य

पावनस्य

तक्षकस्य

कुह्वाः

अनुमत्याः

सप्तमातृणाम्

जयादीनामष्टानाम्

Koviloor Digital Library

सप्तरोहिणीनाम्

वत्सरस्य

प्राणादीनाम्

मरुताम्

शतरुद्राणाम्

एकादशरुद्राणाम्

द्वादशादित्यादीनाम्

गन्धर्वाणाम्

मुनीनाम्

अप्सरसाम्

अश्विनोः

वसूनाम्

विद्याधराणाम्

तुम्बुरोः

नारदस्य

ऋतूनाम्

प्रजापतेः

मुद्‌गलस्य

हलेशस्य

जाम्बवस्य

असुरस्य

किन्नरमिथुनस्य

प्रह्लादस्य

मदनस्य

विपायाः

Koviloor Digital Library

व्याजिन्याः

कामिन्याः

चन्द्राभायाः

सुन्दरस्य

ब्रह्मादिपद देवतानां स्थानम्

Koviloor Digital Library

பொருளடக்கம்

ஏகாதச: படல: (பதினோராவது படலம்) 2

ப்ராகார லக்ஷணம்

ஹஸ்தமான த்ரைவித்யம்

கோபுரலக்ஷணம்

தடாகதீர்த்தமண்டபானாம் லக்ஷணம்

மஹாமண்டபஸ்ய மானவிகல்ப:

பரிவாரணாமாலய நிர்மாணம்

ப்ரதமாவரணே த்விதீயே வா ஸ்னபனமண்டபம்

த்விதீய த்ரித்யாதிஷு ஸ்நபனபசனாலயாதி கல்பனம்

த்வாதச: படல: (பன்னிரண்டாவது படலம்) 19

பரிவாரஸ்தானம்

சக்ரத்வஜசங்காதீனாம் ஸ்தானகல்பனம்

பசனாலயாதீனாம் மூலாலயாபிமுக்யம்

ஸ்நபனஸ்தான ப்ராகார கோபுராணாம் -

பஹிர்முகத்வம் (பீடாவரணத்ரயதேவா:)

ஸப்தாவரணதேவா: அஷ்டாதசத்வாரபாலா:

விஷ்வக்ஸேன ஸ்தானம்

பூதேச பீடலக்ஷணம்

த்ரயோதச: படல: (பதிமூன்றாவது படலம்) 32

கர்பவிந்யாஸ விதி:

வர்ணசிஹ்ந(சின்ன) பஞ்சாயுதாநி,

அஷ்டமங்களாநி, பேளாலக்ஷணம்

பேளாயாம் ஸமந்த்ரகம் த்ரவ்யவிந்யாஸ விதி:

ப்ராம்மணாதிபேதேன பேளாஸ்தான விவேக:

ஸமாப்தேஷ்டகா சிலாவிந்யாஸ விதி:

ஸ்தூபிகாக்ரவிந்யாஸவிதி:

சதுர்தச: படல: (பதினான்காவது படலம்) 47

பரிவாராணாம் நவபேத நிருபணம்

Koviloor Digital Library

அர்ச்சகாதி ஸங்க்யாபேதேன, அதமாதிகதனம்
ஆசார்யாதீனாம் பூம்யாதிதானம்
பஞ்சதச: படல; (பதினைந்தாவது படலம்) 54
பேரார்தம் சிலாக்ரஹணம்
சிலானாம் த்ரைவித்யம்
சிலானாம் பும்ஸ்த்வாதி பேதா: தத்கார்யஞ்ச
தேவதேவீனாம் ஏகைக சிலேதி மதாந்தரம்
கர்பிணீசிலாத்யாக:
நவவிதாங்குலபேத:
சிலாநயன ப்ரகார:
தாரவாதிபேரகர்மாணி
தாரவ ம்ருண்மயாதீனாம் உத்தரோத்தரம் ச்ரைஷ்ட்யம்
த்ருவபேர விதானம்
சித்ரார்தி விதானம்
அர்தசித்ரார்ச்சனம் கேவலாமுஷ்மிகப்ரதம்
பீடவிதானம்
த்ருவார்தமாபாஸநிஷேத:
கர்பாலய பதவிந்யாஸவிதானம்
தேவ்யாதி ப்ரமாணம்
ப்ரம்மாதி ஸ்தானேஷு த்ருவஸ்தாபநே பலபேத:
தேவஸ்ய பாஹுவந்தம் ஸ்தனாந்தம் கர்ணாந்தம்
தேவதேவீ பரிஷதாம் ஏகத்ரவ்யேணகரணம்
ஸ்தானகாதீனாம் பீடாதிஷு ரத்னந்யாஸ விதானம்
ஷோடச: படல: (பதினாறாவது படலம்) 71
சிலாபேர ஸ்தாபன விதி:
யாகசாலா சய்யாதீனாம் லக்ஷணம்
சில்பினா அமந்த்ரகம் த்ருவபேரஸ்தாபனம்
ஸுமுஹுர்த்தே த்ருவஸ்தாபநம்
அஷ்டபந்த ப்ரயோக: தத்த்ரவ்யாணி
ஸப்ததச: படல: (பதினேழாவது படலம்) 87
பேரார்த்தம் தாருக்ரஹணம்

V-Vi

Koviloor Digital Library

க்ராஹ்யதாரவ:

அக்ராஹ்யதாரவ:

லிங்கபேதேனதாருத்ரைவித்யம்

கமனகாலே நிமித்த தர்சனம்

வ்ருக்ஷபதனே திக்பேதேன பலபேத:

ஊருதண்டாதீநாம் அங்குலஸங்க்யா அக்ரே-
தாம்ரபட்டபந்தனம்

ப்ரஸாரித பாதாதீநாம் ஸந்த்யபாவ:

அஷ்டாதச: படல: (பதினெட்டாவது படலம்) 102

சூலஸ்தாபந விதி:

தான்யவேதி சூலஸ்தாபநம்

ஸப்யஹோம:

அஷ்டபந்த:

ரஜ்ஜுவேஷ்டனம்

ம்ருத்ஸங்க்ரஹணம், தத்ஸம்ஸ்கார:

ஹ்ருதயாதிபேதேன பத்மராகாதி ஸ்தாபனம்

தாருசிலாபேதேந சர்க்கராதி ஸ்தாபனம்

ஏகோனவிம்ச: படல: (பத்தொன்பதாவது படலம்) 127

நேத்ராதிச்சித்ரே அந்தத்வாதி தோஷ:

த்ருவபேரவிதி:

ஸ்தாநகாதிபேதேந த்ருவத்ரைவித்யம்
தஸ்யைவ யோகாதிபேதேந சாதுர்வித்யம்

ஸ்தானகாதிபேதேன விமானபேத:

தைவிகே ஸ்தானகம் யானகம், மிச்ரபேதேனபேத:

ப்ராக்த்வாராதீனாம் பலம்

உத்தரசீர்ஷமாபிசாரிகம்

ஸ்தானகாதி க்ராம ப்ரேக்ஷம் கர்த்தவ்யம்

யோகத்ரைவித்யம்

போகத்ரைவித்யம்

வீரத்ரைவித்யம்

ஆபிசாரிகஸ்தானகம்

Koviloor Digital Library

பீடபரிமாணம்

யோகாஸனஸ்யோத்தமத்வாதிகம்

போகாஸனஸ்யோத்தமத்வாதிகம்

வீராஸனஸ்யோத்தமத்வாதிகம்

ஆபிசாரிகாஸனஸ்யோத்தமத்வாதி பத்மாஸனம்

பத்மஸிம்ஹாஸநம்

பத்ராஸனம்

யோகசய்யா ததுத்தமத்வாதி

போகசயனம் ததுத்தமத்வாதி

வீரசயனம் ததுத்தமத்வாதி

ஆபிசாரிகம்

அனந்தசயனலக்ஷணம்

ப்ரம்மாதீனாம் ஸ்தானப்ரமாணவர்ணாதி நிர்ணய:

த்ருவாயாமவசாத் ப்ரம்ம கருடாதீனாம் ப்ரமாணம்

விம்சதிதம: படல: (இருபதாவது படலம்) 165

தேவஸ்ய வர்ணநிர்ணய:

ப்ரதமாவரணதேவா:

த்விதீயாவரணதேவா:

த்ருதீயாவரணதேவா:

ஸ்ரீபூ சதுர்நாம

புருஷாதிதேவீனாம் சதுர்நாம

கர்மார்சாஸ்தானே ப்ரதமாவரணதேவா:

ஸர்வ:

ஹயானன:

ஸுகாவஹ:

ராமதேவ:

ஸுவஹ:

புண்ய:

ஸுவஹ:

த்விதீயாவரணதேவா:

மித்ராதீனாம் லக்ஷணம்

Koviloor Digital Library

மித்ராதீனாம் சதுர்நாம
த்ருதீயாவரண தேவா:
ப்ரம்மாதிலக்ஷணம்
ப்ரம்மணோலக்ஷணம்
மார்கண்டேயஸ்ய
கங்காதரஸ்ய
பத்மாபிது:
தாத்ராதீனாம் லக்ஷணம்
தாத்ராதீனாம் சதுர்நாம
ஆலயபாஹ்யே ந்யக்ஷாதி தேவா:
ந்யக்ஷ:
விவஸ்வ:
மித்ர:
க்ஷத்தா
ப்ரதமத்வாரதேவதே
விகனஸ:
தாபஸ:
முகமண்டபத்வாரதேவதே
மணிக:
தஸ்ய பத்னீ ஸந்த்யா
ப்ரதமாவரண த்வாரதேவதே
கிஷ்கிந்த:
தீர்த்த:
த்விதீயாவரண த்வாரதேவதே
வக்ரதுண்ட:
நாகராஜ:
த்ருதீயாவரண த்வாரதேவதே
சங்கநிதி:
பத்மநிதி:
சதுர்த்தாவரண த்வாரதேவதே
துஹிண:

Koviloor Digital Library

பலிந்த:
பஞ்சமாவரண த்வாரதேவதே
நந்தக:
சார்ங்க:
ஷஷ்டாவரண த்வாரதேவதே
சங்கசூலீ
சக்ரசூலீ
ஸப்தமாவரண த்வாரதேவதே
சண்ட:
ப்ரசண்ட:
விஷ்வக்ஸேந ஸ்வரூபம் ஸ்வரநிர்ணயச்ச
ஶ்ரீபூதஸ்தானாதி
கருடஸ்தானாதி
சக்ரஸ்தானாதி
சங்கஸ்தானாதி
த்வஜஸ்தானாதி
யூதாதிபஸ்தானாதி
அக்ஷஹந்த்ருஸ்தானாதி
சக்ராதீநாம் ஸ்தானே மதாந்தரம்
ஆவரணபலிதேவா:
த்விதீயாவரணே நவக்ரஹாதீனாம் சதுர்நாமாதிகம்
ஆதித்யஸ்ய
சந்த்ரஸ்ய
அங்காரகஸ்ய
புதஸ்ய
குரோ:
சுக்ரஸ்ய
மந்தஸ்ய
ராஹோ:
கேதோ:
த்ருதீயாவரணே கங்காதீநாம் சதுர்நாமாதிகம்

Koviloor Digital Library

கங்காயா:

யமுனாயா:

நர்மதாயா:

ஸிந்தோ:

துர்காயா:

ஸரஸ்வத்யா:

ச்ரிய:

ஜ்யேஷ்டாயா:

தாத்ர்யா:

ஸூராயா:

ஸூந்தர்யா:

ஸ்வாஹாயா:

ஸ்வதாயா:

ஸம்ஹ்லாதிந்யா:

ராகாயா:

ஸினீவால்யா:

ஹவிரக்ஷகஸ்ய

புஷ்பரக்ஷகஸ்ய

புருஷஸ்ய

ப்லோதாதிபஸ்ய

சயனஸ்தானே கதாயா:

சாமுண்டஸ்ய

பலிரக்ஷகஸ்ய

துரீயாவரண தேவேஷூ - கவிஷ்டஸ்ய

ஹரிணஸ்ய

தோயஸ்ய

அக்னே:

வாயோ:

ரிக்வேதஸ்ய

யஜூர்வேதஸ்ய

ஸாமவேதஸ்ய

Koviloor Digital Library

அதர்வவேதஸ்ய

சிவஸ்ய

விஷ்ணோ:

காச்யபஸ்ய

குஹஸ்ய

பங்க்தீசஸ்ய

பவித்ரஸ்ய

பாவனஸ்ய

தக்ஷகஸ்ய

குஹ்வா:

அனுமத்யா:

ஸப்தமாத்ருணாம்

ஜயாதீனாம் அஷ்டானாம்

ஸப்தரோஹிணீனாம்

வத்ஸரஸ்ய

ப்ராணாதீனாம்

மருதாம்

சதருத்ராணாம்

ஏகாதசருத்ராணாம்

த்வாதசாதித்யாதீநாம்

கந்தர்வாணாம்

முனீனாம்

அப்ஸரஸாம்

அச்வினோ:

வஸூனாம்

வித்யாதராணாம்

தும்புரோ:

நாரதஸ்ய

ருதூனாம்

ப்ரஜாபதே:

முத்களஸ்ய

Koviloor Digital Library

ஹலேசஸ்ய

ஜாம்பவஸ்ய

அஸுரஸ்ய

கின்னரமிதுனஸ்ய

ப்ரஹ்லாதஸ்ய

மதனஸ்ய

விபாயா:

வ்யாஜின்யா:

காமின்யா:

சந்த்ராபாயா:

ஸுந்தரஸ்ய

ப்ரஹ்மாதிபத தேவதாநாம் ஸ்தாநம்

Koviloor Digital Library

।। श्रीः ।।

।। श्रीमद्विखनस महागुरवे नमः ।।

।। विमानार्चनकल्पः ।।

விமானார்ச்சனகல்பம்

।। अथ एकादशः पठलः ।।

अथ प्राकार लक्षणं वक्ष्ये :- रक्षार्थं, मङ्गलार्थं, शोभार्थं, तत्प्रासादार्धं, त्रिपादं, समं, पादाधिकं, अर्धाधिकं वा प्रथमावरणम् । तत्समं पादाधिकं, अर्धाधिकं, पादोनद्विगुणं, द्विगुणं, त्रिगुणं, चतुर्गुणं, पञ्चगुणं, वा द्वितीयावरणम् । तस्योक्त प्रमाणेषु इष्टमानेन तृतीयावरणादि सप्तप्रकारान्तं कारयेत् । प्रासादं परितश्चतुरश्रीकृत्य तत्पादाधिकमर्धाधिकं पादोन द्विगुणं, द्विगुणं, द्विगुणार्धं, त्रिगुणार्धं, चतुर्गुणं वा मुखायामं प्रथमावरणस्य तत्परितश्चतुरश्रीकृत्यैव द्वितीयावरणादि सर्वप्राकाराणां मुखायामं प्रयोक्तव्यम् । अथवा सर्वप्राकाराणां प्रासादं परितश्चतुरश्रीकृत्यैवं मुखायामं योजयेदिति केचित् । हस्तमानं त्रिदा प्रोक्तं, अधमं, मध्यमं, उत्तममिति यथा क्रमेण त्रिपञ्च, सप्तहस्तमधमं त्रयं, नवैकादश, त्रयोदशहस्तं मध्यमं त्रयं, पञ्चदश, सप्त-दशैकोनविंशति हस्तमुत्तमं त्रयम् । एवमेव सप्तप्रकारान्तं

Koviloor Digital Library

कारयेत् । तेषां मुखायामं पूर्ववत् । मुखयोः दक्षिणे पश्चिमे, उत्तरे वा विस्तीर्णे देशे तत्तद्दिशि बाह्य प्राकारसममायामं, तत्समं त्रिपादमर्धं वा विस्तारमङ्कणं कृत्वा तस्मिन्नास्थान मण्डपं कारयेत् ।

அத ஏகாதச: படல:

பொருள்:- தண்டங்கள் கட்டிவைக்கப்பட்டுள்ளதற்குத் தென்புறத்தில் அந்தப் பக்கத்தினுடைய அங்கங்களையும், வடபுறத்தில் அதற்குரிய அங்கங்களையும் வைத்து, திக்த்வாரத்தை நோக்கி வம்ச தண்டத்தின் நுனி இருக்குமாறு செய்து; புண்யாஹவாசனம் செய்துமுடித்தவுடன் ப்ரகோஷ்ட கண்டத்தில் ப்ரதிஸரத்தை (ரக்ஷாபந்தனம் செய்து)க் கட்டி 'அஸ்திப்யோ நம' என்று அர்ச்சித்து, 'யத் வைஷ்ணவம்' என்று சொல்லி சூலங்களைப் படுக்கவைக்கவேண்டும். ஸ்ரீதேவி, பூதேவி ஆகியோருக்குரிய தண்டங்களையும் படுக்கவைத்து, மேல் போர்வையைப் போர்த்தி நான்கு திசை

Koviloor Digital Library

களிலும்) பக்கமும் நான்கு வேதங்களையும் அத்யயனம் செய்யச் சொல்லவேண்டும்.

सभ्याग्निं परिस्तीर्य हौत्रं प्रशंस्याऽऽहवनीयादीनि कृत्वा वैष्णवं विष्णुसूक्तं, पुरुषसूक्तं, आत्वाहार्षादीन् श्रीदेवत्यं, भूमिदेवत्यं च हुत्वा "अस्थिभ्यः स्वाहे" त्यष्टोत्तर शतमावर्त्ती हुत्वा सर्वदेवत्यं च हुत्वा आहवनीयादिषु पूर्ववद्धोमं हुत्वा सभ्यंविना अन्ते होमं जुहुयात् । अथवा सभ्याग्निमेकमेव कारयेदित्येके ॥

ஸப்யாக்னிம் பரிஸ்தீர்ய ஹௌத்ரம் ப்ரசம்ஸ்யா஽஽ஹவநீயாதீனி க்ருத்வா வைஷ்ணவம் விஷ்ணுஸூக்தம், புருஷஸூக்தம், ஆத்வாஹார்ஷாதீன் ஸ்ரீதேவத்யம், பூமிதேவத்யம் ச ஹுத்வா "அஸ்திப்ய: ஸ்வாஹே" த்யஷ்டோத்தரசதமாவர்த்தீ ஹுத்வா ஸர்வ-தேவத்யம் ச ஹுத்வா ஆஹவனீயாதிஷு பூர்வவத்-தோமம் ஹுத்வா ஸப்யம்விநா அந்தே ஹோமம் ஜுஹுயாத். அதவா ஸப்யாக்னி மேகமேவ காரயேதித்யேகே.

பொருள் : ஸப்யாக்னி குண்டத்திற்கு பரிசேஷனம் செய்து, ஹௌத்ர ப்ரசம்சனம் செய்து, ஆஹவனீயம் முதலான குண்டங்களில் யத்வைஷ்ணவம், விஷ்ணுஸூக்தம், புருஷஸூக்தம், ஆத்வாஹார்ஷாதீன், ஸ்ரீதைவத்யம், பூமிதைவத்யம் ஆகிய மந்த்ரங்களைச் சொல்லி ஹோமம் செய்து. "அஸ்திப்ய: ஸ்வாஹா" என்பதாக 108 முறை சொல்லி ஹோமம் செய்து, ஸர்வ தைவத்ய மந்த்ரங்களையும் சொல்லி ஹோமம் செய்து, ஆஹவனீயம் முதலான குண்டங்களில் முன்போல ஹோமம் செய்து, ஸப்யாக்னி குண்டத்தைத் தவிர மற்ற குண்டங்களில் அந்த ஹோமம் செய்து முடித்துவிட வேண்டும். பஞ்சாக்னி பக்ஷமாகச் செய்ய இயலாவிடில் ஸப்யாக்னி மட்டும் கொண்டு அனைத்தையும் செய்யவேண்டும் என்பது சிலரபிப்ராயம்.

Koviloor Digital Library

रात्रिशेषं व्यपोह्य प्रभाते स्नात्वा आलयं प्रविश्य गर्भालये पदविभागं कृत्वा तद्योग्यपदे पीठे रत्नानि विन्यसेत् । यजमानः आचार्यादिभ्यो दक्षिणां दद्यात् । अग्निं विसृज्य मूहूर्ते समनुप्राप्ते शय्या वेदिमासाद्याऽचार्यः स्थापकैस्सह शूलानसङ्करमाहृत्य शकुनसूक्तं समुच्चार्य वाद्यघोषपुरस्सरं सर्वालङ्कार संयुक्तं आलयं प्रदक्षिणीकृत्यऽभ्यन्तरं प्रविश्य विष्णुसूक्तं विष्णुगायत्रीं च जप्त्वा ब्रह्मदण्डं स्थाप्य देव्यादीनां तत्तन्मन्त्रेण तत्तत्स्थाने स्थापयेत् ।।

ராத்ரிசேஷம் வ்யபோஹ்ய ப்ரபாதே ஸ்நாத்வா ஆலயம் ப்ரவிச்ய கர்பாலயே பதவிபாகம் க்ருத்வா தத்யோக்யபதே பீடே ரத்னானி விந்யஸேத். யஜமான: ஆசார்யாதிப்யோ தக்ஷிணாம் தத்யாத். அக்னிம் விஸ்ருஜ்ய முஹூர்த்தே ஸமனுப்ராப்தே சய்யா வேதி-மாஸாத்யாऽசார்ய: ஸ்தாபகைஸ்ஸஹ சூலானஸங்கரமா-ஹ்ருத்ய சகுனஸூக்தம் ஸமுச்சார்ய வாத்யகோஷபுரஸ்ஸரம் ஸர்வாலங்கார ஸம்யுக்தம் ஆலயம் ப்ரதக்ஷிணீக்ருத்ய அப்யந்தரம் ப்ரவிச்ய விஷ்ணுஸூக்தம் விஷ்ணுகாயத்ரீம் ச ஜப்த்வா ப்ரம்மதண்டம் ஸ்தாப்ய தேவ்யாதீனாம் தத்தந்மந்த்ரேண தத்தத்ஸ்தானே ஸ்தாபயேத்.

பொருள் : இரவு முடிந்த பிறகு அதிகாலை ஸ்நானம் செய்து, ஆலயத்தை அடைந்து, கருவறையில் பதவிபாகத்தைச் செய்து, ரத்ன ந்யாஸத்திற்குரிய பதத்தில் ரத்ன ந்யாஸத்தைச் செய்ய வேண்டும். யஜமானன், ஆசார்யர், ரித்விக் ஆகியோருக்குத் தக்ஷிணை கொடுக்கவேண்டும். அக்னியை விஸர்ஜனம் செய்துவிட்டு முகூர்த்தம் வந்தவுடன் சய்யா வேதிகையை அடைந்து, ஆசார்யனானவர் ஸ்தாபகருடன்கூட சூலங்களை ஒன்றோடொன்று கலந்துவிடாமல் கொண்டுவந்து ஸகுண ஸூக்தத்தைச் சொல்லி வாத்ய கோஷங்கள் முழங்க அனைத்துவித அலங்காரங்களுடனும் ஆலயத்தை வலம்

Koviloor Digital Library

வந்து, உள்ளே சென்று விஷ்ணுஸூக்தம், விஷ்ணு காயத்ரீ ஆகியவைகளை ஜபித்து, ப்ரம்மதண்டத்தை ஸ்தாபனம் செய்யவேண்டும். தேவியர்களுக்கும் அந்தந்த மந்த்ரங்களைச் சொல்லி உரிய இடத்தில் ஸ்தாபனம் செய்யவேண்டும்.

वंश वृक्षः कटीपार्श्वोरुदण्डान् संस्थाप्य कटीदण्डाद्वक्षोदण्डादधस्ताच्च द्वयोराधारभित्तिमाश्रित्य पृष्टतस्तथा योजयेत् । आसने वक्षोदण्डादधस्तादेकमाधारं योजयेत् । अथवा भित्ति सूलं मौलिबन्धे संयोज्यऽऽसनेचाऽऽसनोपरि वंशदण्डं संस्थापयेत् ।।

வம்சவ்ருக்ஷ: கடீபார்ச்வோருதண்டான் ஸம்ஸ்தாப்ய கடீதண்டாத்வக்ஷோதண்டாததஸ்தாச்ச த்வயோராதார பித்திமாச்ரித்ய ப்ருஷ்டதஸ்ததா யோஜயேத். ஆஸனே வக்ஷோதண்டாததஸ்தாதேகமாதாரம் யோஜயேத். அதவா பித்திசூலம் மௌலிபந்தே ஸம்யோஜ்யஸ்ஸநே-சாஸ்ஸனோபரி வம்சதண்டம் ஸம்ஸ்தாபயேத்.

இடுப்பு பாகத்தின் இருபுறமும் வைக்கவேண்டிய மூங்கில் தண்டங்களை ஸ்தாபித்து இடுப்புத் தண்டத்திலிருந்து மார்பு தண்டத்திற்குக் கீழும் இரண்டு ஆதாரச் சுவரை சேர்த்துப் பின்புறம் சேர்க்கவேண்டும். அமர்ந்த திருக்கோலமா (அமைப்பு அல்லது வடிவா)கில் மார்புத் தண்டத்திற்குக் கீழ் ஒரு ஆதார தண்டத்தைச் சேர்க்கவேண்டும். அல்லது சுவருக்குரிய சூலத்தைத் தலைக்கட்டில சேர்த்து ஆஸனத்திலும் அதற்கு மேலும் மூங்கில் குச்சியை சேர்க்கவேண்டும்.

स्थानके पाददण्डौ शिलोपरि दृढं संस्थाप्य तयोः कटिदण्डं वंशदण्डं च संस्थाप्य यावत् दृढतरं तावद्योग्यं शूलं कृत्वा युक्त्या समूह्य कारयेत् ।।

Koviloor Digital Library

ஸ்தானகே பாததண்டௌ சிலோபரி த்ருடம் ஸம்ஸ்தாப்ய தயோ: கடிதண்டம் வம்சதண்டம் ச ஸம்ஸ்தாப்ய யாவத் த்ருடதரம் தாவத்யோக்யம் சூலம் க்ருத்வா யுக்த்யா ஸமூஹ்ய காரயேத்.

பொருள்: பெருமாள் நின்ற திருக்கோலமாகில் காலுக்குரிய தண்டத்தின் கல்லுக்குமேல் த்ருடமாக ஸ்தாபித்து அவைகளின் இடுப்பு தண்டத்தையும், மூங்கில் தண்டத்தையும் ஸ்தாபித்து எந்த அளவு கெட்டியாக அமைக்கமுடியுமோ அந்த அளவு சூலத்தை செய்து யுக்தியாகச் சேர்க்கவேண்டும்.

शयने स्थानकवत् द्वयोराधारं शयनोर्ध्वे संस्थाप्य तस्मिन् स्थापयेत् ।

சயன ஸ்தானகவத் த்வயோராதாரம் சயனோர்த்வே ஸம்ஸ்தாப்ய தஸ்மின் ஸ்தாபயேத்.

பொருள் : பெருமாள் கிடந்த திருக்கோலமாகில், அமர்ந்த திருக்கோலத்திற்கு செய்ததைப்போல இரண்டிற்கும் ஆதாரமாகச் சயனத்திற்குமேலே அமைத்து ஸ்தாபிக்க வேண்டும்.

पश्चाच्छिल्पिनमाहूय पूजयित्वा शिष्टं सर्वं कारयेत् । पश्चात्दृढबन्धनार्थं ताम्रपट्टैः पञ्चषट्सप्ताष्टयव विस्तारैः विस्तारात् षट्भाग घनान्वितैः तावदायतैः अतिदृढं बध्वा अष्टबन्धं निदध्यात् ।।

பச்சாத் சில்பினமாஹூய பூஜயித்வா சிஷ்டம் ஸர்வம் காரயேத். பச்சாத் த்ருடபந்தனார்தம் தாம்ர-பட்டை: பஞ்சஷட்ஸப்தாஷ்ட யவ விஸ்தாரை: விஸ்தாராத் ஷட்பாக கனான்விதை: தாவதாயதை:

Koviloor Digital Library
அதித்ருடம் பத்வா அஷ்டபந்தம் நித்தியாத்.

பொருள் : பிறகு சில்பியை அழைத்து பூஜித்து வழக்கம் அனைத்தையும் செய்யவேண்டும். பிறகு கட்டு இறுகுவதற்காக ஐந்து, ஆறு, ஏழு, எட்டு யவ தான்யத் தினளவு நீள அகலமுடையதாகவும், ஆறு பங்கு கனம் உடையதாகவும் தாமிரபட்டை செய்து, நன்கு பந்தனம் செய்து (கட்டி) அஷ்டபந்தனத்தைச் செய்யவேண்டும்.

चतुर्विंशति भागं कृत्वा श्रीवेष्टकं चतुरंशं, मृदुरुष्टं पञ्चांशं, गुग्गुल्वेकांशं, गुडमष्टांशं, सज्जरसं त्र्यंशं, धातुचूर्णं त्र्यंसं एतैस्सह गव्यंघृतं तैलं च संयोज्य शुद्धपात्रे सङ्गृह्य पाचयेत् ।

சதுர்விம்சதிபாகம் க்ருத்வா ஸ்ரீவேஷ்டகம் ச்துரம்சம், ம்ருதுருஷ்டம் பஞ்சாம்சம், குக்குல்வேகாம்சம், குடம் அஷ்டாம்சம், ஸஜ்ஜரஸம் த்ர்யம்சம், தாதுசூர்ணம் த்ர்யம்ஸம் ஏதைஸ்ஸஹ கவ்யம் க்ருதம் தைலம் ச ஸம்யோஜ்ய சுத்தபாத்ரே ஸங்க்ருஹ்ய பாசயேத்.

இருபத்து நான்கு பாகம் செய்து, குங்குலியம் நான்கு பங்கும், ம்ருதுருஷ்டம் ஐந்து பங்கும், வாசனைப் பிசின் ஒரு பங்கும், வெல்லம் எட்டு பங்கும், ஸஜ்ஜரஸம் மூன்று பங்கும், தாது சூர்ணம் மூன்று பங்கும், இவற்றுடன்கூட பசு நெய், எண்ணெயையும் சேர்த்துச் சுத்தபாத்ரத்தில் இட்டுப் பக்குவப் படுத்தவேண்டும்.

आलयाभिमुखे वा आहवनीयाग्निकुण्डं कृत्वा आघारं हुत्वा अग्नेः पश्चिमतो धान्यपीठे अष्टबन्धं सन्यस्य "मेदसे नमः" इत्यभ्यर्च्य अधिवास्य विष्णुसूक्तं पुरुषसूक्तं वैष्णवं च हुत्वा "मेदसे स्वाहेति" अष्टोत्तरशतं हुत्वा अग्निं विसृज्य शकुनसूक्तं जपन् आलयं प्रदक्षिणीकृत्य गर्भागारं प्रविश्य "अतोदेवादिना" अष्टबन्धं

Koviloor Digital Library

शूलेष्वालिप्य पश्चाच्छिल्पिना लेपयेत् । यजमानः आचार्याय दक्षिणां दद्यात् । शिल्पिनं च पूजयेत् ।।

ஆலயாபிமுகே வா ஆஹவனீயாக்னிகுண்டம் க்ருத்வா ஆகாரம் ஹுத்வா, அக்னே: பச்சிமதோ தான்யபீடே அஷ்டபந்தம் ஸந்யஸ்ய "மேதஸே நம:" இத்யப்யர்ச்ய அதிவாஸ்ய விஷ்ணுஸூக்தம் புருஷ-ஸூக்தம் வைஷ்ணவம் ச ஹுத்வா "மேதஸே ஸ்வாஹா" இதி அஷ்டோத்தரசதம் ஹுத்வா அக்னிம் விஸ்ருஜ்ய சகுனஸூக்தம் ஜபன் ஆலயம் ப்ரதக்ஷிணீக்ருத்ய கர்பாகாரம் ப்ரவிச்ய "அதோ தேவாதிநா" அஷ்டபந்தம் சூலேஷ்வாலிப்ய பச்சாத் சில்பினா லேபயேத். யஜமான: ஆசார்யாய தக்ஷிணாம் தத்யாத். சில்பினம் ச பூஜயேத்.

பொருள்: ஆலயத்திற்கு முன்பு ஆஹவனீயாக்னிகுண்டம் செய்து: அக்னிப்ரதிஷ்டை செய்து, அக்னிக்கு மேற்கில் தான்ய பீடத்தில் வஸ்த்ரத்திற்குமேல் அஷ்டபந்தனத்தை வைத்து "மேதஸே நம:" என்று அர்ச்சித்து, அதிவாஸம் செய்வித்து, விஷ்ணுஸூக்தம், புருஷஸூக்தம், வைஷ்ணவம் ஆகிய மந்த்ரங்களைச் சொல்லி ஹோமம் செய்து, "மேதஸே ஸ்வாஹா" என்பதாக 108 முறை சொல்லி ஹோமம் செய்து, அக்னியை விஸர்ஜனம் செய்து சகுனஸூக்தத்தைச் சொல்லிக் கொண்டு ஆலயத்தை வலம்வந்து கருவறையில் நுழைந்து 'அதோ தேவா' எனத்தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி அஷ்டபந்தனத்தைச் சூலங்களில் தடவி பிறகு சில்பியைக் கொண்டு சரி செய்யவேண்டும். யஜமானனானவன் ஆசார்யனுக்குத் தக்ஷிணையைக் கொடுக்கவேண்டும். சில்பிக்கும் உரிய மரியாதையைச் செய்யவேண்டும்.

पश्चात् रज्जुबन्धं कारयेत् । नालिकेरफलत्वक्तूलसारैः यवद्वयसमस्थूलमायतं रज्जुद्वयं समाहृत्य दक्षिणाग्निकुण्डं कृत्वा

Koviloor Digital Library

आघारं हुत्वा पूर्ववद्धान्यपीठे रज्जुं सन्यस्य "सिराभ्यो नमः" इत्यभ्यर्च्य़ अधिवास्य पूर्ववद्धोमं हुत्वा "सिराभ्यः स्वाहा" इति अष्टोत्तरशतमावर्त्ती हुत्वा अग्निं विसृज्य पूर्ववत् आलयं प्रदक्षिणीकृत्य अभ्यन्तरं प्रविश्य अतोदेवादिना नाभिस्थानमारभ्य सुषुम्नादि चतुर्दश नाडीनां स्थानेषु रज्जुं सन्यस्य पश्चात् शिरावन्मूर्धादि पादपर्यन्तं उभौ पार्श्वौ समावेष्ट्य ताम्रपट्टेन हस्त पादतलौ कृत्वा कार्पास तन्तुना सर्वाङ्गं समावेष्ट्य पुनस्तथा रज्जुमावेष्टयेत् । आचार्याय दक्षिणां दद्यात् । शिल्पिनं च संपूज्य पश्चात्संस्कारं कारयेत् ।।

பச்சாத் ரஜ்ஜுபந்தம் காரயேத். நாளிகேரபலத்வக்-தூலஸாரை: யவத்வயஸமஸ்தூலமாயதம் ரஜ்ஜுத்வயம் ஸமாஹ்ருத்ய தக்ஷிணாக்னிகுண்டம் க்ருத்வா ஆகாரம் ஹுத்வா பூர்வவத்தான்யபீடே ரஜ்ஜும் ஸந்யஸ்ய "ஸிராப்யோ நம:" இத்யப்யர்ச்ய அதிவாஸ்ய பூர்வ-வத்தோமம் ஹுத்வா "ஸிராப்ய: ஸ்வாஹா" இதி அஷ்டோத்தரசதமாவர்த்தீ ஹுத்வா அக்னிம் விஸ்ருஜ்ய பூர்வவத் ஆலயம் ப்ரதக்ஷிணீக்ருத்ய அப்யந்தரம் ப்ரவிச்ய அதோதேவாதினா நாபிஸ்தானமாரப்ய ஸுஷும்னாதி சதுர்தச நாடீனாம் ஸ்தானேஷு ரஜ்ஜும் ஸந்யஸ்ய பச்சாத் சிராவன்மூர்த்தாதி பாதபர்யந்தம் உபௌ பார்ச்வௌ ஸமாவேஷ்ட்ய தாம்ரபட்டேன ஹஸ்த பாத தளௌ க்ருத்வா கார்பாஸ தந்துனா ஸர்வாங்கம் ஸமாவேஷ்ட்ய புனஸ்ததா ரஜ்ஜுமாவேஷ்டயேத். ஆசார்யாய தக்ஷிணாம் தத்யாத். சில்பினம் ச ஸம்பூஜ்ய பச்சாத் ஸம்ஸ்காரம் காரயேத்.

பிறகு ரஜ்ஜு (கயிறு சுற்றுவது) பந்தனத்தைச் செய்யவேண்டும். தேங்காய் நாரினால் இரண்டு யவதான்ய அளவு பருமனுள்ள கயிறு இரண்டைக் கொண்டுவந்து, (அன்வாஹார்யாக்னி) தக்ஷிணாக்னி குண்டத்தைச் செய்து,

Koviloor Digital Library

அதில் அக்னிப்ரதிஷ்டை செய்து, முன்போலவே தான்ய பீடத்தில் கயிறு வைத்து 'ஸிராப்யோ நம:' என்பதாக அர்ச்சித்து அதிவாஸம் செய்வித்து, முன்போலவே ஹோமம் செய்து, 'ஸிராப்ய: ஸ்வாஹா' என்பதாக 108 முறை சொல்லி ஹோமம் செய்து, அக்னியை விஸர்ஜனம் செய்து, முன்போலவே ஆலயத்தை வலம்வந்து கருவறைக்குச் சென்று 'அதோ தேவா' எனத்தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி, கொப்பூழ்பாகம் துவங்கி ஸுஷும்னா முதலான 14 நாடிகளின் ஸ்தானங்களில் கயிறைவைத்துப் பிறகு நரம்புபோல தலை முதல் கால்வரை இருபுறமும் (முன்னும் பின்னும்) நன்கு சுற்றி தாமிரபட்டை கொண்டு கை, கால்களின் தளங்களை அமைத்து பருத்தி நூல் கொண்டு அனைத்து அங்கங்களிலும் நன்கு சுற்றி திரும்பவும் கயிற்றை சுற்றவேண்டும். யஜமானன் ஆசார்யனுக்குத் தக்ஷிணையைக் கொடுக்கவேண்டும். சில்பியையும் அழைத்துப் பூஜித்துப் பிறகு அடுத்த கார்யத்தைத் துவங்கவேண்டும்.

नादेयां सस्यक्षेत्रजां ह्रदजां देवायतन समीप तटाकजां पुण्यतीर्थजां अशोष्य जलाशयजां मृदं सुप्रशस्ते दिने गृहीत्वाऽभिमुखे नव वस्त्रे कटे वा प्रक्षिप्य संशोष्य शोधयित्वा नवे मृद्भाण्डे गृहीत्वा शुचौ देशे अतिवातरहिते संस्थाप्य गन्ध सहितां वालुकां चाऽऽक्षिप्य खदिर ककुभत्वक्तोय कषायेन आलोड्य एकमासं तोये परिवासयेत् ।।

நாதேயாம் ஸஸ்யக்ஷேத்ரஜாம் ஹ்ரதஜாம் தேவாயதன ஸமீப தடாகஜாம் புண்யதீர்த்தஜாம் அசோஷ்ய ஜலாசயஜாம் ம்ருதம் ஸுப்ரசஸ்தே தினே க்ருஹீத்வாऽபிமுகே நவ வஸ்த்ரே கடே வா ப்ரக்ஷிப்ய ஸம்சோஷ்ய சோதயித்வா நவே ம்ருத்பாண்டே க்ருஹீத்வா சுசௌ தேசே அதிவாதரஹிதே ஸம்ஸ்தாப்ய

Koviloor Digital Library

கந்தஸஹிதாம் வாலுகாம் சாஸகூதிப்யகதிர ககுபத்வக்-தோய கஷாயேன ஆலோட்ய ஏகமாஸம் தோயே பரிவாஸயேத்.

பொருள் :- நதி, விவசாயம் செய்யக்கூடிய இடம், மடுவில் உள்ள மண், கோவிலுக்கு அருகாமையிலுள்ள குளம், புண்யதீர்த்தம் இருக்குமிடம், வற்றாத நீர்நிலை ஆகிய இடங்களில் ஏதேனும் ஒரு இடத்திலிருந்து மண்ணை நல்ல நாளில் எடுத்துவந்து ஆலயத்திற்கு முன்பு புதிய வஸ்த்ரத்திலோ, பெரிய பாத்திரத்திலோ போட்டு நன்கு உலர்த்தி, சுத்தம் செய்து புதிய பானையில் எடுத்து; காற்று அதிகம் வீசாத சுத்தமான இடத்தில் வைத்து வாசனையுள்ள மணலையும் சேர்த்து, கருங்காலி, மரப்பட்டையை ஊறவைத்து அதில் ஏற்படும் கஷாயம் போன்ற நீருடன் சேர்த்து, ஒரு மாத காலம் ஊறவைக்கவேண்டும்.

अश्वत्थोदुम्बरप्लक्षन्यग्रोधत्वक्कषायाम्बुना सेचयित्वाऽर्धमासं वासयित्वा त्रिफलोदकेनाऽऽलोड्य मृत्तुरीयांश पाषाण चूर्णयुतं तथाऽर्धमासं वासयित्वाऽवयवसार गोधूममाषाचूर्ण संयुक्तं श्रीवेष्टकं गुग्गुलु कुन्दुकुष्ट सज्जरसानां षोडशांशं संयोज्याऽऽलोड्य-दधिमधु सर्पिपिः अतसीस्नेहेन सहितं तिलजेन सार्धं बिल्वफलसारं यथाभागं संयोज्याऽर्धमासं वासयेत् । तस्मिन् रजनीकटुक त्रय-चूर्णं तद्दशांसं संयोज्य श्लक्षणं कृत्वा तदर्धं कपित्थ निर्यास चूर्णं हरिताल कोष्टरोचना कृष्णा चन्दनागरु चूर्णं च यथालाभं सुवर्ण रजत चूर्णयुक्तं कदलीफल नालिकेरसलिलं गोक्षीरं च संयोज्य संमर्द्य नदी पर्वत सस्य क्षेत्र वल्मीक समुद्रजल गजवृष श्रृङ्गोद्भेद कुलीरावटजां मुदं च किञ्चित् समादाय शोधयित्वा चूर्णीकृत्य संयोज्य त्रिरात्रं वासयित्वा सुनक्षत्रे सुमुहूर्ते चाऽऽलयाभिमुखे गार्हपत्याग्नि कुण्डं कृत्वा आघारं हुत्वा अग्नेः

Koviloor Digital Library

पश्चिमस्यां पूर्ववत् धान्यपीठे नववस्त्रे मृदं सन्यस्य "मांसेभ्यो नमः" इति अभ्यर्च्य, अधिवास्याग्निं परिस्तीर्य महीसूक्तं भूमि देवत्यं, विष्णुसूक्तं, पुरुषसूक्तं, वैष्णवं, मुन्योन्मन्त्रांश्च हुत्वा- "मांसेभ्यः स्वाहा" इति अष्टोत्तरशतं जुहुयात् । आचार्यं पूजयेत् ।

அச்வத்தோதும்பரப்லக்ஷந்யக்ரோத த்வக்கஷாயாம்புனா ஸேசயித்வா அர்தமாஸம் வாஸயித்வா த்ரிபலோதகே-நாssலோட்ய ம்ருத்துரீயாம் ச பாஷாண சூர்ணயுதம் ததர்தமாஸம் வாஸயித்வா அவயவஸார கோதூம மாஷாசூர்ண ஸம்யுக்தம் ஸ்ரீவேஷ்டகம் குக்குலுகுந்து-குஷ்ட ஸஜ்ஜரஸானாம் ஷோடசாம்சம் ஸம்யோஜ்யா ஆலோட்ய ததி மது ஸர்பிபி: அதஸீ ஸ்நேஹேந ஸஹிதம் திலஜலேன ஸார்தம் பில்வபலஸாரம் யதாபாகம் ஸம்யோஜ்ய அர்தமாஸம் வாஸயேத். தஸ்மின் ரஜனீகடுக த்ரயசூர்ணம் தத்தசாம்ஸம் ஸம்யோஜ்ய ச்லக்ஷணம் க்ருத்வா ததர்தம் கபித்த நிர்யாஸ சூர்ணம் ஹரிதால கோஷ்டரோசனா க்ருஷ்ணா சந்தனாகரு சூர்ணம் ச யதாலாபம் ஸுவர்ண ரஜத சூர்ணயுக்தம் கதளீபல நாளிகேரஸலிலம் கோக்ஷீரம் ச ஸம்யோஜ்ய ஸம்மர்த்ய நதீபர்வத ஸஸ்ய க்ஷேத்ர வல்மீக ஸமுத்ரஜல கஜவ்ருஷ ச்ருங்கோத்பூத குலீராவடஜாம் ம்ருதம் ச கிஞ்சித் ஸமாதாய சோதயித்வா சூர்ணீக்ருத்ய ஸம்யோஜ்ய த்ரிராத்ரம் வாஸயித்வா ஸுநக்ஷத்ரே ஸுமுஹூர்த்தே சாssலயாபிமுகே கார்ஹபத்யாக்னி குண்டம் க்ருத்வா ஆகாரம் ஹுத்வா அக்னே: பச்சிமஸ்யாம் பூர்வவத் தான்யபீடே நவவஸ்த்ரே ம்ருதம் ஸந்யஸ்ய "மாம்ஸேப்யோ நம:" இதி அப்யர்ச்ய, அதிவாஸ்யாக்னிம் பரிஸ்தீர்ய மஹீஸூக்தம் பூமி தைவத்யம், விஷ்ணுஸூக்தம், புருஷஸூக்தம், வைஷ்ணவம், முந்யோர்மந்த்ராம்ச்ச ஹுத்வா "மாம்ஸேப்ய: ஸ்வாஹா" இதி அஷ்டோத்தரசதம் ஜுஹுயாத். ஆசார்யம் பூஜயேத்.

Koviloor Digital Library

பொருள்: அரசு, அத்தி, ஆலமரம் ஆகியவற்றின் பட்டைகளை ஊறவைத்துத் தோன்றிய கஷாய ஜலத்தில் இந்த மண்ணைச் சேர்த்துக் கலக்கி அரை மாதம் வைத்திருந்து, திராக்ஷை, மாதுளை, பேரீட்சை ஆகிய முப்பழ ஜலத்துடன் நைசான மணலைச் சேர்த்து, முன்போலவே அரைமாதம் வைத்திருந்து, யவதான்யத்தின் ஜலம், கோதுமை, உளுந்து ஆகியவற்றின் மாவுடன் சேர்த்து, ஸ்ரீவேஷ்டகம், குங்குலியம், குந்தகுஷ்ட, ஸஜ்ஜரஸத்துடன்16 மடங்கு சேர்த்துத் தயிர், பால் இவைகளை மிகவும் கெட்டியாக உள்ள பிசின் போன்றதான மண்ணுடன் சேர்த்து, எள் ஜலத்துடன் சேர்த்து, வில்வப் பழத்தினுடைய சதைப்பகுதியின் சாறு எவ்வளவு தேவையோ அவ்வளவு எடுத்துக்கொண்டு சேர்த்து அரைமாதம் வைத்திருக்க வேண்டும். அதில் வெண்கடுகுப் பொடியை மண்ணின் அளவிற்குப் பத்து அம்சம் சேர்த்து (பாலீஷ்) ம்ருதுவாகச் செய்து, அதில் பாதி விளாம்பழ ஓட்டினுடைய பொடியை ஹரிதாளம் (Yellowish green colour) கோரோசனை, கருஞ்சந்தன அகரு ஆகியவைகளின் பொடியையும் எவ்வளவு தேவையோ அவ்வளவு சேர்த்து, பொன், வெள்ளி ஆகியவைகளின் தூள்களையும் சேர்த்து, வாழைப்பழம் மற்றும் தேங்காய் இவைகளின் ஜலத்தையும், பசும்பாலையும் சேர்த்து நன்கு அடித்து; நதீ, மலை, விவசாயம் செய்யுமிடம், புற்று, கடல், யானை மற்றும் பசுமாடு கொம்பினால் குத்தி பெயர்த்த மண், நண்டுவளை, விண்வெளி ஆகிய இடங்களிலிருந்து கொஞ்சம் மண் கொண்டுவந்து சுத்தம் செய்து, பொடி செய்து சேர்த்து, மூன்று இரவு வைத்திருந்து நல்ல நக்ஷத்ரம், நல்ல முஹூர்த்தத்தில் ஆலயத்திற்கு முன்பு கார்ஹபத்யாக்னி குண்டம் செய்து, அதில் அக்னி ப்ரதிஷ்டை செய்து, அக்னிக்கு மேற்கில் முன்போலவே தான்யபீடத்தில் புதிய வஸ்த்ரத்திற்கு மேல் மண்ணைவைத்து, 'மாம்ஸேப்யோ நம:' என்று அர்ச்சித்து அக்னிக்குப் பரிசேஷணம் செய்து; மஹீ ஸூக்தம், பூமிதைவத்யம், விஷ்ணு ஸூக்தம், புருஷ ஸூக்தம், வைஷ்ணவம், முனிகளின் மந்த்ராங்கள் ஆகியவைகளைச் சொல்லி ஹோமம் செய்து 'மாம்ஸேப்ய:

Koviloor Digital Library

ஸ்வாஹா' என்பதாக 108 முறை சொல்லி ஹோமம் செய்து முடிக்கவேண்டும். பிறகு ஆசார்யனைப் பூஜிக்கவேண்டும்.

देवं ध्यायन् "एकाक्षरादिना" मृदमभिमृश्य मेदिन्यादीन् पारमात्मिकं च जपन् रज्जुबन्धादुपरिष्टादुत्तमाङ्गादि महाङ्गेषु मृदमालिप्य पश्चाच्छिल्पिनमाहूय पूजयित्वा हस्तेन विना सर्वाङ्गेषु करण्डिकयाऽऽलिप्य पुनरपि रज्जुं तथाऽऽबध्य शोषयित्वा पश्चान्मृदं संयोज्य तदूर्ध्वे रज्जुं न योजयेत्, तदूर्ध्वे रत्नानि सन्यसेत् । हृदये पद्मरागं, ग्रीवायं मौक्तिकं बाह्वोर्वैडूर्यं नाभौ ब्रह्ममणिं, मेट्रे सौवर्णं, पादयोः पुष्पकं, दक्षिणनयने सूर्यकान्तं, वामे चन्द्रकान्तं, दक्षिणेकर्णे वज्रं, वामे शङ्खजं, नासिकापुटयोः अमृताश्मकं, आस्ये प्रवाळं च पारमात्मिकं च जप्त्वा सन्यसेत् । मासेतीते शर्कराकल्कलं संलेपयेत् ।।

தேவம் த்யாயன் "ஏகாக்ஷராதினா" ம்ருதமபிம்ருச்ய மேதின்யாதீன் பாரமாத்மிகம் ச ஜபன் ரஜ்ஜுபந்தாது-பரிஷ்டாத் உத்தமாங்காதி மஹாங்கேஷு ம்ருதமாலிப்ய பச்சாச்சில்பினமாஹூய பூஜயித்வா ஹஸ்தேன வினா ஸர்வாங்கேஷு கரண்டிகயாऽऽலிப்ய புனரபி ரஜ்ஜும் ததாऽऽபத்ய சோஷயித்வா பச்சான்ம்ருதம் ஸம்யோஜ்ய தநூர்த்வே ரஜ்ஜும் ந யோஜயேத், தநூர்த்வே ரத்னானி ஸந்யஸேத். ஹ்ருதயே பத்மராகம், க்ரீவாயாம் மௌக்திகம் பாஹ்வோர்வைடூர்யம் நாபௌ ப்ரஹ்ம-மணிம், மேட்ரே ஸௌவர்ணம், பாதயோ: புஷ்பகம், தக்ஷிணநயனே ஸூர்யகாந்தம், வாமே சந்த்ரகாந்தம், தக்ஷிணேகர்ணே வஜ்ரம், வாமே சங்கஜம், நாஸிகா-புடயோ: அம்ருதாச்மகம், ஆஸ்யே ப்ரவாளம் ச பாரமாத்மிகம் ச ஜப்த்வா ஸந்யஸேத். மாஸேऽதீதே சர்கராகல்கலம் ஸம்லேபயேத்.

Koviloor Digital Library

பொருள் : பெருமாளை த்யானம் செய்து 'ஏகாக்ஷராதி' மந்த்ரத்தைச் சொல்லி மண்ணைத் தொட்டு, 'மேதினீ' எனத்தொடங்கும் மந்த்ரங்களையும், பாரமாத்மீகத்தையும் ஜபித்து, கயிறு கட்டியுள்ளதற்குமேல் உத்தமாங்கம் முதலான பெரிய அங்கங்களுக்கு மண்ணைத் தடவி, பிறகு சில்பியை அழைத்துப் பூஜித்து, கையால் பூசாமல் கரண்டி கொண்டு பூசி, மறுபடியும் கயிறு சுற்றி காயவைத்துத் திரும்பவும் மண் சேர்த்து, அதற்குமேல் கயிறு சேர்க்காமல் அதற்குமேல் ரத்னங்களைப் பதிக்கவேண்டும். ஹ்ருதயத்தில் பத்மராகம், கழுத்தில் முத்து, தோள்பட்டைகளில் வைடூர்யம், நாபியில் ப்ரம்ம மணி, ஆண்குறியில் தங்கம், கால்களில் புஷ்பராகம், வலது கண்ணில் ஸூர்யகாந்தம், இடது கண்ணில் சந்திரகாந்தம், வலது காதில் வைரம், இடது காதில் சங்கஜம், மூக்கு த்வாரங்களில் அம்ருதாச்மகம், வாயில் பவளம் ஆகிய கற்களைப் பாரமாத்மிக மந்த்ரத்தை ஜபித்து வைக்க (பதிக்க) வேண்டும். ஒரு மாதமான பிறகு மண் பிசினை நன்கு தடவ வேண்டும்.

अथ शर्कराग्रहणं वक्ष्ये :- पुण्यनक्षत्रे समीपे नदीतीरे वाऽन्यस्मिन् मनोरमे शुद्धेदेशे खनित्वाऽऽहृत्य प्रक्षाल्य संशोध्य चूर्णीकृत्य त्रिफलोदकेन सिञ्चन् शनैः शनैः शोषयित्वा कपित्थ निर्यास तोयेनाऽऽलोड्य कार्पासतूल संयुक्तमतिसूक्ष्मं सुश्लक्ष्णं आलोड्य आवसत्याग्निकुण्डं कृत्वा आघारं हुत्वा पूर्ववद्धान्यपीठे नव वस्त्रोपरि शर्करां विन्यस्य "रुधिराय नमः" इत्यभ्यर्च्य अधिवास्य अग्निं परिस्तीर्य वैष्णव, विष्णुसूक्तं, पुरुषसूक्तं, श्रीसूक्तं, शान्तिहोमं हुत्वा "रुधिराय स्वाहा" इति अष्टोत्तरशतं जहुयात् । विष्णवे, श्रियै, हरिण्यै, चिरायुषे, ख्यातीशाय, गरुडाय, चक्राय, शङ्खाय, भूतेभ्यः, सर्वेभ्यो देवताभ्यः स्वाहेति व्याहृत्यन्तं जहुयात् । एतत्परिषदं इति अग्निं विसृजेत् । आचार्याय दक्षिणां दद्यात्। शर्करां अग्निरिन्द्रादिनाऽभिमृश्य पुरुषसूक्तेन

Koviloor Digital Library

आलेपयेत् । पश्चाच्छिल्पिनं आहूय संपूज्य तत्कल्कं सर्वाङ्गेषु समालिप्य एवं मासं प्रतिशुष्कं संलक्ष्य अच्छिद्रं अभेद्यं तत्कल्केन तन्निर्यासाम्बुना अङ्गोपाङ्ग प्रत्यङ्गानि यथा संपूर्णानि तथा कुर्यात् । पुनः शुद्धं कार्पास तन्तुनाकृतं सूक्ष्मं वस्त्रं समाहृत्य पूर्ववत् सभ्याग्नि कुण्डं कृत्वा आघारं हुत्वा पूर्ववद्धान्यपीठे नववस्त्रे अम्बरं सन्यस्य "त्वचे नमः" इति अभ्यर्च्य अधिवास्य अग्निं परिस्तीर्य विष्णुसूक्तं, पुरुषसूक्तं, सहस्राहुतीर्हुत्वा "त्वचे स्वाहा" इति अष्टोत्तरशतं हुत्वा सर्वदेवत्यं च हुत्वा अग्निं विसृजेत् । आचार्याय दक्षिणां दद्यात् । विष्णुगायत्र्या अम्बरं प्रोक्ष्य "सोमस्य तनूरसी"ति आच्छादयेत् । शिल्पिना सुदृढं निर्विवरं समाच्छाय कल्कं प्रलेप्य पश्चाद्भूषणैः भूषयेत् । बेरशैले दारवे मौक्तिकं मृदमालिप्य तद्बेरोपरि चक्षुः श्रोत्रास्यघ्राणादि मार्गेष्वभेद्यं महाङ्गोपाङ्गेषु अभेद्यं नाधिकं यथा पूर्वं तथैव कल्केन परिकल्पयेत् । अन्यथा तद्बेरे देवो न वसेत् । चक्षुश्छिद्रे यजमानस्यान्धत्वं कर्णच्छिद्रे बधिरत्वं आस्यच्छिद्रे मूकत्वं घ्राणादिमार्गच्छिद्रे प्रमेह कुष्ठादि व्याधयो धान्यादि नाशश्च अचिरादेव भवेयुः महाङ्गोपाङ्ग प्रत्यङ्गभेदः स्थान भ्रंशो भवेत् । तस्मात्सर्वं परिहृत्यैव कारयेत् ।।

அத சர்கராக்ரஹணம் வக்ஷ்யே :- புண்யநக்ஷத்ரே ஸமீபே நதீதீரே வா஽ந்யஸ்மின் மனோரமே சுத்தேதேசே கனித்வா ஆஹ்ருத்ய ப்ரக்ஷால்ய ஸம்சோத்ய சூர்ணீ-க்ருத்ய த்ரிபலோதகேன ஸிஞ்சன் சனை: சனை: சோஷயித்வா கபித்த நிர்யாஸ தோயேனா஽஽லோட்ய கார்ப்பாஸதூல ஸம்யுக்தமதிஸூக்ஷ்மம் ஸுச்லக்ஷ்ணம் ஆலோட்ய ஆவஸத்யாக்னிகுண்டம் க்ருத்வா ஆகாரம் ஹுத்வா பூர்வவத்தான்யபீடே நவ வஸ்த்ரோபரி சர்க்கராம் விந்யஸ்ய "ருதிராய நம:" இத்யப்யர்ச்ய

Koviloor Digital Library

அதிவாஸ்ய அக்னிம் பரிஸ்தீர்ய வைஷ்ணவ, விஷ்ணுஸூக்தம், புருஷஸூக்தம், ஸ்ரீஸூக்தம், சாந்தி-ஹோமம் ஹூத்வா "ருதிராய ஸ்வாஹா" இதி அஷ்டோத்தரசதம் ஜுஹூயாத். விஷ்ணவே, ச்ரியை, ஹரிண்யை, சிராயுஷே, க்யாதீசாய, கருடாய, சக்ராய, சங்காய, பூதேப்ய:, ஸர்வாப்யோ தேவதாப்ய: ஸ்வாஹா இதி வ்யாஹருத்யந்தம் ஜுஹூயாத் . "ஏதத்பரிஷதம்" இதி அக்னிம் விஸ்ருஜேத். ஆசார்யாய தக்ஷிணாம் தத்யாத். சர்க்கராம் அக்னிரிந்த்ராதினாSபிம்ருச்ய புருஷ ஸூக்தேந ஆலேபயேத். பச்சாச்சில்பினமாஹூய ஸம்பூஜ்ய தத்கல்கம் ஸர்வாங்கேஷு ஸமாலிப்ய ஏவம் மாஸம் ப்ரதிசுஷ்கம் ஸம்லக்ஷ்ய அச்சித்ரம் அபேத்யம் தத்கல்கேன தன்னிர்யாஸாம்புனா அங்கோபாங்க ப்ரத்யங்கானி யதா ஸம்பூர்ணானி ததா குர்யாத். புன: சுத்தம் கார்ப்பாஸ தந்துனாக்ருதம் ஸூக்ஷமம் வஸ்த்ரம் ஸமாஹ்ருத்ய பூர்வவத் ஸப்யாக்னி குண்டம் க்ருத்வா ஆகாரம் ஹூத்வா பூர்வவத்தான்யபீடே நவவஸ்த்ரே அம்பரம் ஸந்யஸ்ய "த்வசே நம:" இதி அப்யர்ச்ய அதிவாஸ்ய அக்னிம் பரிஸ்தீர்ய விஷ்ணுஸூக்தம், புருஷஸூக்தம், ஸஹஸ்ராஹூதீர்ஹூத்வா "த்வசே ஸ்வாஹா" இதி அஷ்டோத்தரசதம் ஹூத்வா ஸர்வதைவத்யம் ச ஹூத்வா அக்னிம் விஸ்ருஜேத். ஆசார்யாய தக்ஷிணாம் தத்யாத். விஷ்ணு காயத்ர்யா அம்பரம் ப்ரோக்ஷ்ய, "ஸோமஸ்யதனூரஸீ"தி ஆச்சாதயேத். சில்பினா ஸூத்ருடம் நிர்விவரம் ஸமாச்சாத்ய கல்கம் ப்ரலேப்ய பச்சாத்பூஷணை: பூஷயேத். பேரசைலே தாரவே ச சர்க்கராதி நைவ யோஜயேத். பாஹ்யே மௌக்திகம் ம்ருதமாலிப்ய தத்பேரோபரி சக்ஷு: ச்ரோத்ராஸ்ய க்ராணாதி மார்கேஷ்வபேத்யம் மஹாங்கோபாங்கேஷு அபேத்யம் நாதிகம் யதா பூர்வம் ததைவ கல்கேன பரிகல்பயேத். அந்யதா தத்பேரே தேவோ ந வஸேத். சக்ஷுச்சித்ரே யஜமானஸ்யாந்தத்வம் கர்ணசித்ரே பதிரத்வம் ஆஸ்யச்சித்ரே மூகத்வம், க்ராணாதி மார்கச்சித்ரே

Koviloor Digital Library

ப்ரமேஹ குஷ்ட்டாதி வ்யாதயோ தான்யாதி நாசச்ச அசிராதேவ பவேயு: மஹாங்கோபாங்க ப்ரத்யங்க-பேதை: ஸ்தான ப்ரம்சோ பவேத். தஸ்மாத் ஸர்வம் பரிஹ்ருத்யைவ காரயேத்.

பொருள் : மணல் க்ரஹிக்கும் (எடுக்கும்) முறையைக் கூறுகிறேன். நல்ல நக்ஷத்திரத்தில், அருகிலோ, நதிக் கரையிலோ, வேறு அழகான சுத்தமான இடத்திலோ வெட்டி எடுத்துவந்து நன்கு அலம்பி, சுத்தமான பிறகு பொடிசெய்து த்ரிபலோதகத்தில் மூழ்கச்செய்து கொஞ்சம் கொஞ்சமாக உலர்த்தி, விளா மரப்பட்டையை ஊறவைத்த ஜலத்தோடு சேர்த்து, ஆவஸ்ஸத்யாக்னிகுண்டம் செய்து, அக்னி ப்ரதிஷ்டைசெய்து, முன்போலவே தான்யபீடத்தில் புதிய வஸ்த்ரத்திற்குமேல் மண்ணைவைத்து 'ருதிராய நம:' என்று சொல்லி அர்ச்சித்து, அதிவாஸம் செய்வித்து, அக்னியை பரிசேஷணம் செய்து; வைஷ்ணவம், விஷ்ணுஸூக்தம், புருஷஸூக்தம், ஸ்ரீஸூக்தம், சாந்திஹோமம் செய்து, 'ருதிராய ஸ்வாஹா' என்பதாக 108 முறை சொல்லி ஹோமம் செய்ய வேண்டும். விஷ்ணவே, ச்ரியை, ஹரிண்யை, சிராயுஷே, க்யாதீசாய, கருடாய, சக்ராய, சங்காய, பூதேப்ய: ஸர்வாப்யோ தேவதாப்ய: ஸ்வாஹா என்பதாகச் சொல்லி வ்யாஹ்ருதி ஹோமம்வரை செய்யவேண்டும். 'ஏதத் பரிஷதம்' என்பதாகச் சொல்லி அக்னியை விஸர்ஜனம் செய்ய வேண்டும். ஆசார்யனுக்குத் தக்ஷிணையைக் கொடுக்க வேண்டும். மண்ணை 'அக்னிரிந்த்ரா' எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி தொட்டு புருஷஸூக்தத்தைச் சொல்லி பூசவேண்டும். பிறகு சில்பியை அழைத்துப் பூஜித்து, மண் பிசினை அனைத்து அங்கங்களிலும் தடவி இவ்வாறு ஒரு மாதம் உலரவைத்துத் தனியாகப் பிரிக்கமுடியாத அளவு கெட்டியாக இருக்குமாறு இந்த மண்பிசின் கொண்டு அங்க உபாங்க ப்ரத்யங்கங்கள் அனைத்தும் முழுமையாக அமையுமாறு செய்யவேண்டும். மறுபடியும் சுத்தமான பருத்தியினால் செய்யப்பட்ட மெல்லிய துணியைக் கொண்டு முன்போலவே ஸப்யாக்னிகுண்டம் அமைத்து, அக்னி

Koviloor Digital Library

ப்ரதிஷ்டை செய்து, முன்போலவே தான்யபீடத்தில் புதிய வஸ்த்ரத்திற்குமேல் இந்த துணியை வைத்து 'த்வசே நம:' என்று அர்ச்சித்து அதிவாஸம் செய்வித்து, அக்னி பரிசேஷணம் செய்து, விஷ்ணுஸூக்தம், புருஷஸூக்தம் ஆகிய இரண்டு ஸூக்தங்களையும் சொல்லி, ஆயிரம் ஆஹுதி ஹோமம் செய்து, 'த்வசே ஸ்வாஹா' என்பதாக 108 முறை சொல்லி ஹோமம் செய்து, ஸர்வதைவத்ய ஹோமத்தையும் செய்து அக்னியை விஸர்ஜனம் பண்ணவேண்டும். ஆசார்யனுக்குத் தக்ஷிணையைக் கொடுக்கவேண்டும். விஷ்ணு காயத்ரியைச் சொல்லி துணியை ப்ரோக்ஷித்து 'ஸோமஸ்யதனூரஸி' எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி போர்த்தவேண்டும். சில்பியைக் கொண்டு சுருக்கமில்லாமல் நன்றாக ஒட்டுமாறுமூடி மேல் பசையைத் தடவி பிறகு ஆபரணங்களாலே அலங்கரிக்கவேண்டும். பேரம் கல்லாகவோ, மரமாகவோ இருந்தால் மண்பசை போன்றவை எதுவும் சேர்க்கக்கூடாது. வெளியில் மண் தடவி அந்த பேரத்திற்குமேல் கண், காது, மூக்கு முதலிய அங்க உபாங்கங்கள் தனியாகப் பிரிக்கமுடியாத அளவு கெட்டியாக முன்போலவே குறைவாகவோ அதிகமாகவே இல்லாமல் எப்படி முன்பு பூசப்பட்டுள்ளதோ அப்படி பூசி, பிறகு மண் பிசினைத் தடவவேண்டும். அவ்வாறு செய்யாவிடில் அந்த பேரத்தில் பெருமாள் வசிக்கமாட்டார். கண் பாகத்தில் பிளவு ஏற்பட்டால் யஜமானனுக்குக் குருட்டுத் தன்மையும், காது பாகத்தில் பிளவு ஏற்பட்டால் செவிட்டுத்தனமும், வாய்ப் பகுதியில் பிளவு ஏற்பட்டால் ஊமைத்தன்மையும், மூக்கு முதலிய பாகங்களில் பிளவு ஏற்பட்டால் மேஹ, குஷ்டம் முதலிய வ்யாதிகளும், தான்யம் முதலானவற்றிற்கு நாசமும் உடனடியாக ஏற்படும். மஹாங்க, உபாங்க, ப்ரத்யங்கம் ஆகிய இடங்களில் பிளவு ஏற்பட்டால் இடநாசமும் ஏற்படும். எனவே அனைத்தையும் விலக்கிச் செய்யவேண்டும்.

अथ वर्णसंस्कारं वक्ष्ये :-- देवं युगानां क्रमेण श्वेतस्वर्ण श्यामाञ्जनवर्णं सर्वेषु स्यामवर्णमेव कारयेत् । सर्व वर्णान्

Koviloor Digital Library

सङ्गृह्य पृथक् पृथक् पात्रे कपित्थ निर्यासाम्बुना संपेष्य गृहीत्वा पौण्डरीकाग्नि कुण्डं कृत्वा आघारं हुत्वा पूर्ववत् धान्यपीठे नववस्त्रोपरि वर्णान् सन्यस्य "जीवाय नमः" इत्यभ्यर्च्य अधिवास्य अग्निं परिस्तीर्य वैष्णवं विष्णुसूक्तं, पुरुषसूक्तं पारमात्मिकं पार्षदं हुत्वा "जीवाय स्वाहा" इत्यष्टोत्तरशतं जुहोति "हिरण्यगर्भ" इति वर्णमभिमृश्य आत्मसूक्तं जप्त्वा अतो देवादिना हेमपात्रे वर्णं गृहीत्वा तूर्यघोषणं कारयित्वा विष्णुसूक्तं, पुरुषसूक्तं च जप्त्वा तूलिकाग्रे वर्णमादाय "सहस्रशीर्षा" इति देवस्य ललाटे संलेपयेत् । आचार्यं संपूजयेत् । पुण्याहं वाचयित्वा अग्निं परिस्तीर्य शान्तिहोमं हुत्वा अग्निं विसृज्य पश्चात् शिल्पिनं संपूज्य तेन तत्तदङ्गिनं वर्णं संलेपयेत् । अत्यन्तं दर्शनीयं यथोक्त विधिना संलेप्य पश्चादेवमेवं संस्कारं कृत्वा सुवर्ण सहितं वर्णं संलेपयेत् । तस्माच्छक्तियुतं भवतीति विज्ञायते ।।

।। इति श्रीवैखानसे मरीचिप्रोक्ते विमानार्चनकल्पे शूलस्थापन विधिः नाम अष्टादशः पटलः ।।

அத வர்ணஸம்ஸ்காரம் வக்ஷ்யே :-- தேவம் யுகானாம் க்ரமேண ச்வேதஸ்வர்ண ச்யாமாஞ்ஜனவர்ணம் ஸர்வேஷு ச்யாமவர்ணமேவ காரயேத். ஸர்வ வர்ணான் ஸங்க்ருஹ்ய ப்ருதக் ப்ருதக் பாத்ரே கபித்த நிர்யாஸாம்புனா ஸம்பேஷ்ய க்ருஹீத்வா பௌண்டரீகாக்னி குண்டம் க்ருத்வா ஆகாரம் ஹுத்வா பூர்வவத் தான்யபீடே நவவஸ்த்ரோபரி வர்ணான் ஸந்யஸ்ய "ஜீவாய நம:" இத்யப்யர்ச்ய அதிவாஸ்ய அக்னிம் பரிஸ்தீர்ய வைஷ்ணவம் விஷ்ணுஸூக்தம், புருஷஸூக்தம் பாரமாத்மிகம் பார்ஷதம் ஹுத்வா "ஜீவாய ஸ்வாஹா" இத்யஷ்டோத்தரசதம் ஜுஹோதி "ஹிரண்யகர்ப" இதி வர்ணமபிம்ருஸ்ய ஆத்மஸூக்தம்

Koviloor Digital Library

ஜப்த்வா அதோ தேவாதினா ஹேமபாத்ரே வர்ணம் க்ருஹீத்வா தூர்யகோஷணம் காரயித்வா விஷ்ணு ஸூக்தம், புருஷஸூக்தம் ச ஜப்த்வா தூலிகாக்ரே வர்ணமாதாய "ஸஹஸ்ரசீர்ஷா" இதி தேவஸ்ய லலாடே ஸம்லேபயேத். ஆசார்யம் ஸம்பூஜயேத். புண்யாஹம் வாசயித்வா அக்னிம் பரிஸ்தீர்ய சாந்திஹோமம் ஹுத்வா அக்னிம் விஸ்ருஜ்ய பச்சாத் சில்பினம் ஸம்பூஜ்ய தேன தத்ததங்கினம் வர்ணம் ஸம்லேபயேத். அத்யந்தம் தர்சனீயம் யதோக்த விதினா ஸம்லேப்ய பச்சாதேவமேவம் ஸம்ஸ்காரம் க்ருத்வா ஸுவர்ண ஸஹிதம் வர்ணம் ஸம்லேபயேத். தஸ்மாச்சக்தியுதம் பவதீதி விக்ஞாயதே.

॥ இதி ஸ்ரீவைகானஸே மரீசிப்ரோக்தே விமானார்ச்சனகல்பே
சூலஸ்தாபன விதி: நாம அஷ்டாதச: படல: ॥

பொருள் : வர்ண ஸம்ஸ்காரத்தைக் கூறுகிறேன். பெருமாளுக்கு யுகத்தின் முறைப்படி வெளுப்பு, மஞ்சள், மேகவர்ணம், கருப்பு என்பதாக நான்கு வர்ணங்கள் சொல்லப்பட்டுகிறது. இவைகளில் மேகச்யாமள வர்ணத் தையே செய்யவேண்டும். அனைத்து வர்ணங்களையும் கொண்டுவந்து தனித்தனியாக வைத்துக்கொண்டு, அதில் விளாமரத்து நீரைக் கலந்து எடுத்து பௌண்டரீகாக்னி குண்டம் செய்து, அக்னி ப்ரதிஷ்டை செய்து, முன்போலவே தான்ய வேதிகையில் புது வஸ்த்ரத்தில் வர்ணங்களை வைத்து "ஜீவாய நம:" என்பதாக அர்ச்சித்து அதிவாஸம் செய்வித்து அக்னி பரிசேஷணம் செய்து, வைஷ்ணவம், விஷ்ணுஸூக்தம், புருஷஸூக்தம், பாரமாத்மிகம், பார்ஷதம் ஆகிய மந்த்ரங்களைச் சொல்லி ஹோமம் செய்து, "ஜீவாய ஸ்வாஹா" என்பதாக 108 முறை சொல்லி ஹோமம் செய்து "ஹிரண்யகர்ப" எனத்தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி வர்ணத்தைத் தொட்டு ஆத்ம ஸூக்தத்தைச் சொல்லி, மேலும் "அதோ தேவா" எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி ஹேம (தங்க) பாத்திரத்தில் வர்ணத்தை க்ரஹித்துத் தூர்ய

Koviloor Digital Library

வாத்யத்தை வாசிக்கச் செய்து, விஷ்ணுஸூக்தம், புருஷஸூக்தம் ஆகியவைகளை ஜபித்து, ப்ரஷ்ஷின் நுனியில் வர்ணத்தை எடுத்துக்கொண்டு, 'ஸஹஸ்ரசீர்ஷா' எனத் தொடங்கும் மந்த்ரத்தைச் சொல்லி, பெருமாளின் நெற்றிப் பகுதியில் பூசவேண்டும். ஆசார்யனை நன்கு பூஜிக்கவேண்டும். புண்யாஹவாசனம் செய்து, சாந்தி ஹோமம் செய்து, அக்னி விஸர்ஜனம் பண்ணவேண்டும். பிறகு சில்பியை நன்கு பூஜித்து அவரைக் கொண்டு அந்தந்த அங்கத்திற்குரிய வர்ணங்களை அடிக்க (பூச) வேண்டும். நன்கு கவனித்துச் சொல்லப்பட்ட முறைப்படி அடித்து முடித்த பிறகு தங்கம் கலந்த வர்ணத்தை அடிக்கவேண்டும். அதனால் சக்தியானது அதிகரிக்கிறது.

இவ்வாறு ஸ்ரீவைகாநஸத்தில் மரீசி மஹரிஷியால் சொல்லப்பட்ட விமானார்ச்சன கல்பத்தில் சூலஸ்தாபன விதி: என்பதாக பதினெட்டாவது படலம் முற்றும்.

Koviloor Digital Library

।। अथ एकोनविंशः पठलः ।।

अथ ध्रुवबेरोक्तविधिं वक्ष्ये :-- तत्रिविधं स्थानकमासनं शयनं चेति । पुनस्तदेकैकं चतुर्विधं स्यात् । योगं वीरं भोगमाभिचारिकमिति । योगार्थं योगमार्गं, भोगार्थं भोगं, वीरार्थं वीरमार्गं, शत्रुजयार्थमाभिचारिकं कारयेत् । ग्रामाद्बाह्ये विविक्तेदेशे नदीतीरे तत्सङ्गमे पर्वते वने वनपार्श्वे वा योगस्थानकं, तद्बाह्ये वा वीरस्थानकं, वनगिरिजल दुर्गे राष्ट्रान्ते शत्रुदिङ्मुखे च आभिचारिकं भवति ।।

॥ அத ஏகோனவிம்ச படல: ॥

அத த்ருவபேரோக்தவிதிம் வக்ஷ்யே :-- தத்ரிவிதம் ஸ்தானகமாஸநம் சயனம் சேதி. புநஸ்ததேகைகம் சதுர்விதம் ஸ்யாத். யோகம் வீரம் போகமாபிசாரிகமிதி. யோகார்த்தம் யோகமார்கம், போகார்த்தம் போகம், வீரார்த்தம் வீரமார்கம், சத்ருஜயார்தமாபிசாரிகம் காரயேத். க்ராமாத்பாஹ்யே விவிக்தேதேசே நதீதீரே தத்ஸங்கமே பர்வதே வனே வனபார்ச்வே வா யோகஸ்தானகம், தத்பாஹ்யே வா வீரஸ்தானகம், வனகிரிஜல துர்கே ராஷ்ட்ராந்தே சத்ருதிங்முகே ச ஆபிசாரிகம் பவதி.

பத்தொன்பதாவது படலம்

பிறகு த்ருவபேர விதியைக் கூறுகிறேன் :- அது மூன்று வகைப்படும். ஸ்தானகம் (நின்ற நிலை), ஆஸனம் (அமர்ந்த நிலை), சயனம் (படுத்த நிலை) என்பன. மேலும் அவை ஒவ்வொன்றும் நான்கு வகைப்படும். யோகம், போகம், வீரம், ஆபிசாரிகம் என்பன. யோகத்திற்கு யோகமூர்த்தியையும், போகங் களைப்பெற போகமூர்த்தியையும், வீரத்தைப்பெற வீர

Koviloor Digital Library

மூர்த்தியையும், எதிரிகளை வெல்வதன் பொருட்டு ஆபிசாரிக மூர்த்தியையும் அமைக்கவேண்டும். இவற்றைக் கிராமங்களின் வெளியிலும், குறிப்பிட்ட இடத்திலும், ஆற்றங்கரை, அதன் சேருமிடம் ஆகிய இடங்களிலும், மலையிலும், காட்டிலும், காடுகளின் பக்கங்களிலும் யோகஸ்தானகமூர்த்தியையும், அதற்கு வெளியில் வீரஸ்தானக மூர்த்தியையும், காடு, மலை, நீர்நிலை (கோட்டை அரசின்) தேசத்தின் முடிவிலும் (எல்லையிலும்) எதிரியின் திசையை நோக்கி ஆபிசாரிக மூர்த்தியையும் ஸ்தாபிக்கவேண்டும்.

विमानं नलिनकं विमलाकृति सर्वतोभद्रं, नन्द्यावर्तं, श्रीप्रतिष्टितं, स्वस्तिभद्रं, पद्माकारं, वृत्तगेहं, उद्योगपद्मं, योग-कान्तमित्यादि समचतुरश्रमायताश्रं, वृत्तं, वृत्तायतं स्थानकस्य ।

விமானம் நளினகம் விமலாக்ருதி ஸர்வதோபத்ரம், நந்த்யாவர்த்தம், ஸ்ரீப்ரதிஷ்டிதம், ஸ்வஸ்திபத்ரம், யபத்மாகாரம், வ்ருத்தகேஹம், உத்யோகபத்மம், யோக-காந்தமித்யாதி ஸமசதுரச்ரமாயதாச்ரம், வ்ருத்தம், வ்ருத்தாயதம் ஸ்தானகஸ்ய.

பொருள் : விமானமானது நளினகம், சுத்தமானதான ஆக்ருதியுடனும், ஸர்வதோபத்ரம், நந்த்யாவர்த்தம், ஸ்ரீப்ரதிஷ்டிதம், ஸ்வஸ்திபத்ரம், பத்மாகாரம், வ்ருத்தகேஹம், உத்யோகபத்மம், யோககாந்தம் போன்ற வகையினதாக சமசதுரமாகவோ, செவ்வகமாகவோ, வட்டமாகவோ, நீள்வட்டமாகவோ அமைப்பது ஸ்தானகமூர்த்திகளுக்கு (நின்றநிலை மூர்த்தங் களுக்கு) ஏற்றதாகும்.

अष्टाङ्गं सर्वतोभद्रं, महापद्मं, वृत्तभद्रं (पद्मं), चतुर्मुखदिशा स्वस्तिकं, महापद्मं चतुस्फुटं, पर्वताकारं, खण्डहर्म्यं उद्योगपद्मं समचतुरश्रं समवृत्तं वा आसनस्य ।

Koviloor Digital Library

அஷ்டாங்கம் ஸர்வதோபத்ரம், மஹாபத்மம், வ்ருத்தபத்ரம் (பத்மம்), சதுர்முகதிசா ஸ்வஸ்திகம், மஹாபத்மம் சதுஸ்புடம், பர்வதாகாரம், கண்டஹர்ம்யம் உத்யோகபத்மம் ஸமசதுரச்ரம் ஸமவ்ருத்தம் வா ஆஸனஸ்ய.

பொருள் : அஷ்டாங்கம் ஸர்வதோபத்ரம், மஹாபத்மம், வ்ருத்தபத்ரம் (பத்மம்), சதுர்முகதிசா ஸ்வஸ்திகம், மஹாபத்மம் சதுஸ்புடம், பர்வதாகாரம், கண்டஹர்ம்யம் உத்யோகபத்மம் போன்றவகை விமானங்கள் சமசதுரமாகவோ, சமவட்டமாகவோ அமைப்பது ஆஸன (அமர்ந்தநிலை) மூர்த்திகளுக்கு ஏற்றவையாகும்.

स्वस्तिकं वृत्तभद्रं वृत्तगेहं अवेदिकं प्रेक्षागृहं महाराजच्छन्दं श्रीप्रतिष्टितं, शनैर्योगं, मातृखण्डं, गणिका विशालमेवमादी न्यायताश्राणि वर्तुलायतानि वा शयनस्य ।।

ஸ்வஸ்திகம் வ்ருத்தபத்ரம் வ்ருத்தகேஹம் அவேதிகம் ப்ரேக்ஷாக்ருஹம் மஹாராஜச்சந்தம் ஸ்ரீப்ரதிஷ்டிதம், சனைர்யோகம், மாத்ருகண்டம், கணிகா விசாலமேவமாதீனி ஆயதாச்ராணி வர்த்துலாயதானி வா சயனஸ்ய.

பொருள் : ஸ்வஸ்திகம் வ்ருத்தபத்ரம் வ்ருத்தகேஹம் அவேதிகம் ப்ரேக்ஷாக்ருஹம் மஹாராஜச்சந்தம் ஸ்ரீப்ரதிஷ்டிதம், சனைர்யோகம், மாத்ருகண்டம், கணிகாவிசாலம் இவ்வகை விமானங்கள் செவ்வகவடிவிலோ, நீள்வடிவிலோ உள்ளவை (படுத்தநிலை) சயனமூர்த்திக்கு ஏற்றவையாகும்.

स्थानके विमाने स्थानकभेरं आसनेचासनं शयने शयनं सर्वत्र स्थानकमासनं यानकं वा, शयने शयनं कर्त्तव्यम् ।

Koviloor Digital Library

अन्ययोः शयनं नैवकल्पयेत् । शयनागारद्वार विस्तारं पादयोरन्तरं तप्तादोदयाष्टांशोनं द्वारोत्सेधं, एवं आसनागारे स्थानके वा कारयेदित्येके ।।

ஸ்தானகே விமானே ஸ்தானகபேரம் ஆஸனே-சாஸநம் சயனே சயனம் ஸர்வத்ர ஸ்தானகமாஸனம் யானகம் வா, சயனே சயனம் கர்த்தவ்யம். அந்யயோ: சயனம் நைவகல்பயேத். சயனாகாரத்வார விஸ்தாரம் பாதயோரந்தரம் தப்தாதோதயாஷ்டாம்சோனம் த்வாரோத்ஸேதம், ஏவம் ஆஸனாகாரே ஸ்தானகே வா காரயேதித்யேகே.

பொருள் : நின்றநிலை மூர்த்தியின் விமானத்தில் நின்றநிலைப் படிமங்களையும், அமர்ந்தநிலை மூர்த்தியின் விமானத்தில் அமர்ந்தநிலைப் படிமமும், கிடந்தநிலை மூர்த்தியின் விமானத்தில் படுத்தநிலைப் படிமங்களையும் அமைக்க வேண்டும். மற்ற நின்றநிலை, அமர்ந்தநிலை உள்ள இரு வகை மூர்த்திகளின் விமானங்களில் படுத்தநிலையில் படிமங்களை ஒருபொழுதும் செய்யவேகூடாது. சயன மூர்த்தியின் கருவறை வாயிலின் அகலமான (வாயில் தூண்கள்) இரு பாதங்களின் இடைவெளியாகிய நீளத்தில் இருகம்பங்களின் எட்டில் ஒருபங்குக் குறைத்து, ஏழு பங்கானது அவ்வாயிலின் உயரமாகும். இவ்வாறே ஆஸன, ஸ்தானக (இருந்தநிலை, நின்றநிலை) மூர்த்திகளின் கருவறைக்கும் என்பது சிலர் கருத்து.

यानके सर्वविमानं ध्रुवबेरेष्विष्टंमानं विनिश्चित्य सलक्षणं बेरं कृत्वा गर्भागारे कृते पदे दैविके स्थानकं यानकञ्च किञ्चित् मानुषमाश्रित्य दैविकेचासनं किञ्चिद्दैवमाश्रित्य मानुषांशे शयनं संस्थापयेत् । प्राग्द्वारं सर्वसम्पत्कारं, पाश्चिमद्वारं कीर्तिदं, दक्षिणद्वारं जयदं, उत्तरद्वारं ज्ञानदं प्राक्शीर्षकं शान्तिकं, पश्चिम-

Koviloor Digital Library

शीर्षं पौष्टिकं, दक्षिणशीर्षं जयदं, उत्तरशीर्षमाभिचारिकम् । ग्रामाद्दक्षिणे शयनं उत्तरद्वारं चेत् प्राक्शीर्षं पश्चिमे प्राक्द्वारं चेद्दक्षिण शीर्षं, उत्तरे दक्षिणे द्वारं चेत् पश्चिमशीर्षं प्राच्यां पश्चिमद्वारं चेत् दक्षिणशीर्षमेव कारयेत् । स्थानकासन शयनानि ग्रामप्रेक्षाण्येव कारयेत् ।।

யானகே ஸர்வவிமானம் த்ருவபேரேஷ்விஷ்டம் மானம் விநிச்சித்ய ஸலக்ஷணம் பேரம் க்ருத்வா கர்பாகாரே க்ருதே பதே தைவிகே ஸ்தானகம் யாநகஞ்ச கிஞ்சிந்மானுஷமாச்ரித்ய தைவிகேசாஸனம் கிஞ்சித்-தைவமாச்ரித்ய மானுஷாம்சே சயனம் ஸம்ஸ்தாபயேத். ப்ராக்த்வாரம் ஸர்வஸம்பத்காரம், பச்சிமத்வாரம் கீர்த்திதம், தக்ஷிணத்வாரம் ஜயதம், உத்தரத்வாரம் ஞானதம், ப்ராக்சீர்ஷகம் சாந்திகம், பச்சிமசீர்ஷம் பௌஷ்டிகம், தக்ஷிணசீர்ஷம் ஜயதம், உத்தரசீர்ஷம் ஆபிசாரிகம். க்ராமாத்தக்ஷிணே சயானம், உத்தரத்வாரம் சேத் ப்ராக் சீர்ஷம் பச்சிமே ப்ராக்த்வாரம் சேத்தக்ஷிண சீர்ஷம், உத்தரே தக்ஷிணேத்வாரம் சேத் பச்சிமசீர்ஷம் ப்ராச்யாம் பச்சிம த்வாரம் சேத் தக்ஷிண சீர்ஷமேவ காரயேத். ஸ்தாநகாஸந சயனானி க்ராம ப்ரேக்ஷான்யேவ காரயேத்.

பொருள் : யானக மூர்த்திக்கு எல்லாவகை விமானங்களும் த்ருவ பேரத்தில் எடுக்கத்தக்க அளவைகளின் தன் இஷ்டமான அளவைத் தீர்மானித்து லக்ஷணங்களோடு கூடியதாகப் படிமத்தை அமைத்துக் கருவறையில் செய்யப்பட்ட பதத்தில், தெய்வீகபதத்தில் ஸ்தானகமூர்த்தியையும், யானகமூர்த்தி யையும், சிறிதளவு மானுஷபதத்தை ஒட்டி தைவிகபதத்தில் ஆஸனமூர்த்தியையும், சிறிதளவு தைவிகபதத்தை ஒட்டியாவது மானுஷபதத்தில் சயனமூர்த்தியையும் ஸ்தாபிக்கவேண்டும். கருவறை வாயிலானது கிழக்கு முகமாயின் எல்லா செல்வங் களையும்

Koviloor Digital Library

தரும். மேற்கு நோக்கிய வாயில் புகழையும், தெற்கு முகமான வாயில் வெற்றியையும், வடக்கு நோக்கிய வாயில் ஞானத்தையும் (அறிவையும்), கிழக்குத் திக்கில் தலையை வைத்துப்படுத்திருந்தால் சாந்தியையும், மேற்கில் வைத்திருந்தால் புஷ்டியையும், தெற்கே தலையை வைத்திருந்தால் வெற்றியையும், வடக்கில் வைத்திருந்தால் ஆபிசாரிகமாகவும் எதிரிகளின் அழிவிற்கும் ஆகும். சயனமூர்த்தியை, கிராமத்தின் தெற்கே, வடக்கு வாயிலாயின் கிழக்கே தலை உள்ளவாறும், மேற்கே கிழக்கு வாயிலாயின் தெற்கே தலையுடனும், வடக்கு தெற்கு நோக்கிய வாயிலாயின் மேற்கே தலையுடன், கிழக்கே மேற்கு வாயிலாயின் தெற்குத் திசையிலேயே தலைவைத்தவாறும் அமைக்கவேண்டும். ஸ்தானகம், ஆஸனம், சயனம் ஆகிய மூவகை மூர்த்திகளையும் கிராமத்தை நோக்கியவாறே ஸ்தாபிக்கவேண்டும்.

॥ योग त्रैविध्यम् ॥

देवेशं श्यामवर्णं चतुर्भुजं, शङ्खचक्रधरं अभयदक्षिणहस्तं, वरद कट्यवलम्बित वामहस्तं, दक्षिणे च एकजानुना समासीनं भृगुं, तथा मार्कण्डेयं, तथैव भूमि पुण्यौ वा, दक्षिणेभित्ति पार्श्वे हेमाभं चतुर्भुजमक्षमाला कमण्डलुधराऽभय कट्यवलम्बित हस्तं, स्तिथं ब्रह्माणं उत्तराभिमुखं उत्तरे भित्तिमूलेपार्श्वे श्वेताभं चतुर्भुजं मृगपरशुधरं, अभयं कट्यवलम्बितहस्तं शङ्करं दक्षिणाभिमुखं, स्थितमेव कारयेत् । तदुत्तमं योग स्थानकम् । ब्रह्म शङ्कराभ्यां हीनं मध्यमं, पूजकमुनिभ्यां हीनमधमम् ॥

॥ யோக த்ரைவித்யம் ॥

தேவேசம் ச்யாமவர்ணம் சதுர்புஜம், சங்கசக்ரதரம் அபயதக்ஷிணஹஸ்தம், வரதகட்யவலம்பித வாம-

Koviloor Digital Library

ஹஸ்தம், தக்ஷிணே ச ஏகஜாநுனா ஸமாஸீனம் ப்ருகும், ததா மார்க்கண்டேயம், ததைவ பூமி புண்யௌ வா, தக்ஷிணே பித்திபார்ச்வே ஹேமாபம் சதுர்புஜமக்ஷமாலா கமண்டலுதராऽபய கட்யவலம்பித ஹஸ்தம், ஸ்திதம் ப்ரம்மாணம், உத்தராபிமுகம் உத்தரே பித்திமூலே பார்ச்வே ச்வேதாபம் சதுர்புஜம் ம்ருகபரசுதரம், அபயம் கட்யவலம்பிதஹஸ்தம் சங்கரம் தக்ஷிணாபிமுகம், ஸ்திதமேவ காரயேத். தது்தமம் யோக ஸ்தானகம். ப்ரஹ்ம சங்கராப்யாம் ஹீனம் மத்யமம், பூஜகமுநிப்யாம் ஹீனமதமம்.

யோகமூர்த்தியின் மூன்றுவகைகள்

பொருள் : பகவானை கருநீல நிறம், நான்கு கைகள், சங்கு, சக்கரத்தைத் தாங்கியும், அபயமாகத் தன் வலது கரத்தையும், வரதமாகவோ இடுப்பைப் பிடித்த இடது தன் கரத்தையோ உடையவராகவும், தெற்கே ஒரு முழங்காலில் அமர்ந்த ப்ருகுவையும், அவ்வாறே மார்க்கண்டேயரையும், அவ்வாறே பூமி புண்யா இருவரையுமோ, தெற்கே சுவரின் பக்கத்தில் தங்கநிறம் நான்கு கைகளில் அக்ஷமாலை (ஜபமாலை), கமண்டலு இந்த இரண்டை மேலிருகைகளிலும் அபயமாயும், இடுப்பைப் பிடித்ததாகவுள்ள இருகைகளை உடையவராய் நின்றநிலையில் பிரம்மாவை வடக்கு நோக்கியவாறும், வடக்கே பக்கச் சுவரில் வெண்ணிறம், நான்கு கைகள் கொண்டு அவற்றில் மான், மழு இவற்றையும்; அபயம், இடுப்பைப் பிடித்தவாறும் சங்கரரை தெற்கு நோக்கியவாறும் நின்றநிலையில் அமைக்க வேண்டும். அவ்வாறு அமைத்தல் மிகவும் உகந்த நின்ற நிலையிலுள்ள யோக மூர்த்தியாகும். ப்ரம்மா, சங்கரர் ஆகிய இருவருமின்றி அமைப்பது மத்யமமாகும். ப்ருகு, மார்க்கண்டேயர் ஆகிய இருவருமின்றி அமைப்பது அதமமாகும்.

Koviloor Digital Library

।। भोग त्रैविध्वम् ।।

देवं चतुर्भुजं श्यामभं शङ्कचक्रधरं अभयवरद दक्षिणहस्तं कट्यवलम्बित वामहस्तं, तथा ब्रह्मेशौ दक्षिणेश्रियं देवीं रुग्माभं सुस्थिर दक्षिणपादां किञ्चित्कुञ्चित वामपादां धृतकमल दक्षिण हस्तां प्रसारित वामकरां देवं किञ्चित्समीक्ष्य स्थितां वामे हरिणीं श्यामाभां प्रसारित दक्षिणहस्तां धृतोत्पल वामहस्तां संस्थित वामपादां किञ्चित्कुञ्चित दक्षिणपादां देवं किञ्चित्समीक्ष्य स्थितां कारयेत् । देव्योर्हस्तपादौ विपरीतौ वा कारयेत् । कुड्यकौतुकयोर्मध्ये दक्षिणे भृगुं दक्षिणेन जानुनासीनं वामेनोत्कटिकमासिनां सपद्मवामहस्तं दक्षिणोरु निहित दक्षिणकरं, वामे पुराणं वामेन जानुनासीनं दक्षिणेनोत्कटिकमासीनं सपद्मदक्षिणहस्तं वामोरुविन्यस्त वामकरं कारयेत् । एवमासयित्वा हस्तौ संपुटौ वा कारयेत् । भित्यूर्ध्वभागे माया संह्लादिनीभ्यां व्याजकमुनिभ्यां तुम्बुरु नारदाभ्यां किन्नरमिथुनाभ्यां यक्षविद्याधराभ्यां सनक सनत्कुमाराभ्यां, सूर्यचन्द्राभ्यां युक्तमुत्तमं भोगस्थानकं, तुम्बुरुनारदाभ्यां यक्ष विद्याधराभ्यां हीनं मध्यमम् । सनक सनत्कुमाराभ्यामादित्य चन्द्राभ्यां पूजक मुनिभ्यां हीनमधमम् ।।

॥ போக த்ரைவித்வம் ॥

தேவம் சதுர்புஜம் ச்யாமாபம் சங்கசக்ரதரம் அபய-வரத தக்ஷிணஹஸ்தம் கட்யவலம்பித வாமஹஸ்தம், ததா ப்ரம்மேசௌ தக்ஷிணேச்ரியம் தேவீம் ருக்மாபம் ஸுஸ்திர தக்ஷிணபாதாம் கிஞ்சித்குஞ்சித வாமபாதாம் த்ருதகமல தக்ஷிணஹஸ்தாம் ப்ரஸாரித வாமகராம்

Koviloor Digital Library

தேவம் கிஞ்சித்ஸமீக்ஷ்ய ஸ்திதாம் வாமே ஹரிணீம் ச்யாமாபாம் ப்ரஸாரித தக்ஷிணஹஸ்தாம் த்ருதோத்பல வாமஹஸ்தாம் ஸம்ஸ்தித வாமபாதாம் கிஞ்சித்குஞ்சித தக்ஷிணபாதாம் தேவம் கிஞ்சித்ஸமீக்ஷ்ய ஸ்திதாம் காரயேத். தேவ்யோர்ஹஸ்தபாதௌ விபரீதௌ வா காரயேத். குட்யகௌதுகயோர்மத்யே தக்ஷிணே ப்ருகும் தக்ஷிணேன ஜாநுநாஸீநம் வாமேனோத்கடிகமாஸீநம் ஸபத்மவாமஹஸ்தம் தக்ஷிணோரு நிஹித தக்ஷிணகரம், வாமே புராணம் வாமேனஜாநுநாஸீநம் தக்ஷிணேன உத்கடிகமாஸீநம் ஸபத்மதக்ஷிணஹஸ்தம் வாமோரு விந்யஸ்த வாமகரம் காரயேத். ஏவமாஸயித்வா ஹஸ்தௌ ஸம்புடௌ வா காரயேத். பித்யூர்த்வபாகே மாயா ஸம்ஹ்லாதினீப்யாம் வ்யாஜகமுநிப்யாம் தும்புரு நாரதாப்யாம் கின்னரமிதுனாப்யாம் யக்ஷவித்யாதராப் யாம் ஸனக ஸனத்குமாராப்யாம், சூர்ய சந்த்ராப்யாம் யுக்தமுத்தமம் போக ஸ்தானகம். தும்புரு நாரதாப்யாம் யக்ஷ வித்யாதராப்யாம் ஹீனம் மத்யமம். ஸனக ஸனத்குமாராப்யாமாதித்ய சந்த்ராப்யாம் பூஜக முநிப்யாம் ஹீனமதமம்.

மூன்றுவகை போகமூர்த்திகள்

பொருள் : பகவானை நான்கு கைகளுடனும், கருநீல நிறத்துடனும், சங்கு சக்ரத்தைத் தாங்கியும், அபயம் அல்லது வரதமாக உள்ள தன் வலது கரத்துடனும், இடுப்பைப் பற்றிய அல்லது சின்முத்திரையுடன் உள்ள தன் இடது கரத்துடனும், அவ்வாறே (இருபுறமும்) ப்ராம்மாவையும், சங்கரரையும் உடையவராகவும், தென்புறத்தில் லக்ஷ்மீதேவி (ஸ்ரீதேவி)யை பொன்னிறத்தவளாயும், நன்கு ஊன்றிய வலது காலுடனும், சிறிது வளைந்த இடது காலுடனும், தன் வலது கரத்தில் தாமரையைப் பிடித்தவளாயும், நீட்டிய இடது தன் கரத்த வளாயும் பெருமாளைச் சிறிது பார்த்தவாறு நிற்பவளாயும், இடதுபக்கம் பூமிதேவியை கருநீல (பச்சை) நிறத்தவளாயும், நீட்டிய வலதுகரத்துடன், நீலோத்பலம் தாங்கிய இடது

Koviloor Digital Library

கரத்துடனும், நன்கு ஊன்றிய இடது காலுடனும், சிறிது வளைந்த வலது காலுடனும், பெருமாளை சிறிது பார்ப்பவளாயும் அமைக்கவேண்டும். தேவிகளின் கை, கால்களை மாறுபட்ட முறையிலாவது அமைக்கலாம். சுவர், கௌதுகர் இவ்விரண்டின் நடுவில் தெற்கில் ப்ருகுவையும், வலது முழங்காலில் அமர்ந்தவராயும், இடதுகால் மண்டியிட்டு அமர்ந்தவராயும், இடதுகையில் தாமரையும், வலக்கையைத் தொடையில் வைத்திருப்பவராயும், இடதுபுறத்தில் (வடக்கில்) புராணரை இடது முழங்காலில் அமர்ந்தவராயும், வலது காலை மண்டியிட்டு அமர்ந்தவராயும், வலது கையில் தாமரையும், இடக்கையைத் தொடையில் வைத்திருப்பவராயும் அமைத்தல் வேண்டும். இவ்வாறு அமர்த்தி கைகளைக் கூப்பியவாறும் (அஞ்சலி ஹஸ்தமுடையதாகவும்) அமைக்கலாம். சுவரின் மேற்பகுதியில் மாயா, ஸம்ஹ்லாதினீ ஆகிய இருவரையும், வ்யாஜகமுனிகளையும், தும்புரு, நாரதர்களோடும், இரு கின்னரர்களோடும், யக்ஷவித்யாதரர்களோடும், ஸனகர், ஸனத்குமாரர்களோடும், சூரிய-சந்திரர்களோடும் அமைப்பது உத்தம போக ஸ்தானமாகும். தும்புரு, நாரதர்களோடும், யக்ஷ, கின்னரர்களோடும் இல்லாது அமைக்கப்பெற்றதுமான போக ஸ்தானகம் மத்யமமாகும். ஸனகர், ஸனத்குமாரர்களோடும், சூரிய-சந்திரர்களோடும், ப்ருகு, மார்க்கண்டேயர்களுடனும் இல்லாமல் அமைக்கப்படுவது அதமமாகும்.

॥ वीर त्रैविध्यम् ॥

देवं श्यामाभं चतुर्भुजं शङ्खचक्रधरं कारयेत् । दक्षिणवामयोः ब्रह्मेशानाभ्यां भृगु पुण्याभ्यां किष्किन्ध सुन्दराभ्यां व्याजकमुनिभ्यां सनक सनत्कुमाराभ्यां सूर्यचन्द्राभ्यां युक्तमुत्तमं वीरस्थानकम् । किष्किन्ध सुन्दराभ्यां सनक सनत्कुमाराभ्यां हीनं मध्यमम् । आदित्य चन्द्राभ्यां पूजकक्षिति (मुनि)भ्यां हीनमधमम् ।

Koviloor Digital Library

॥ வீர த்ரைவித்யம் ॥

தேவம் ச்யாமாபம் சதுர்புஜம் சங்கசக்ரதரம் காரயேத். தக்ஷிணவாமயோ: ப்ரம்மேசானாப்யாம் ப்ருகு புண்யாப்யாம் கிஷ்கிந்த ஸுந்தராப்யாம் வ்யாஜக-முனிப்யாம் ஸனக ஸனத்குமாராப்யாம் ஸூர்ய-சந்த்ராப்யாம் யுக்தமுத்தமம் வீரஸ்தாநகம். கிஷ்கிந்த ஸுந்தராப்யாம் ஸனக ஸனத்குமாராப்யாம் ஹீனம் மத்யமம். ஆதித்ய சந்த்ராப்யாம் பூஜகக்ஷிதி (முநி)ப்யாம் ஹீநமதமம்.

வீரம் மூன்று வகைப்படும்

பொருள் : பெருமாளை கருநீல நிறமுடனும், நான்கு கைகளுடனும், சங்கு சக்கரம் தாங்கியவராயும் அமைக்க வேண்டும். வலது, இடது பக்கங்களில் முறையே ப்ரம்மா, ஈசானரோடும், ப்ருகு புண்யரோடும் கிஷ்கிந்த ஸுந்தரரோடும், வ்யாஜக முனிகளோடும், ஸனகர், ஸனத்குமாரரோடும், ஸூர்ய, சந்த்ரரோடும் கூடியவர் உத்தமமான வீரஸ்தானகமூர்த்தியாகும். கிஷ்கிந்த, ஸுந்தரரோடும், ஸனக-ஸனத்குமாரரோடும் இல்லாமல் அமைப்பது மத்யமமான மூர்த்தியாகும். ஸூர்ய-சந்த்ரர்கள், ப்ருகு, மார்க்கண்டேயர் இவர்கள் நீங்கலாக அமைப்பது அதமமான வீரஸ்தானக மூர்த்தியாகும்.

॥ आभिचारिक स्थानकम् ॥

एवं द्विभुजं चतुर्भुजं वा धूम्रवर्णं श्यामाधरं शुष्काङ्गं तमोगुणान्वितमूर्ध्व नेत्रं, ब्रह्मादि देवैर्वर्जितं, पैशाचपदस्थं, आद्राद्यनुक्त नक्षत्रे शर्वर्यां चरराशौ स्थापितं विमानं च लक्षणहीनं कारयेत्। एतदाभिचारिक स्थानकम् स्यात् ।

Koviloor Digital Library

|| ஆபிசாரிக ஸ்தானகம் ||

ஏவம் த்விபுஜம் சதுர்புஜம் வா தூம்ரவர்ணம் ச்யாமாதரம் சுஷ்காங்கம் தமோகுணாந்விதமூர்த்வ நேத்ரம், ப்ரஹ்மாதி தேவைர்வர்ஜிதம், பைசாசபதஸ்தம், ஆத்ராத்யநுக்த நக்ஷத்ரே சர்வர்யாம் சரராசௌ ஸ்தாபிதம் விமானம் ச லக்ஷணஹீனம் காரயேத். ஏததாபிசாரிக ஸ்தானகம் ஸ்யாத்.

ஆபிசாரிக ஸ்தானகமூர்த்தி

பொருள்: இவ்வாறாக (முன்கூறியவாறு) இருகைகள் அல்லது நான்கு கைகளுள்ளவாறு பழுப்பு (தூம்ர) வர்ணத்தோடு கூடிய திருமேனியும், கறுத்த உதடும், மெலிந்த அவயவமும், தமோகுணத்தோடு கூடியவராயும், மேல் நோக்கிய கண்களோடும், ப்ரம்மா முதலிய தேவர்கள் நீங்கலாகவும், கருவறையின் பைசாச பதத்தில் ஸ்தாபிக்கப்பட்டதும், திருவாதிரை முதலான கூறப்படாத நக்ஷத்திரத்தில், இரவில் சரராசியில் ஸ்தாபிக்கப்பட்டதும், விமானம் உள்ளவாறு லக்ஷணமில்லாமலும் செய்யவேண்டும். இவ்வாறான மூர்த்தி ஆபிசாரிக ஸ்தானகமாகும்.

|| पीठ परिमाणम् ||

स्थानकस्य पीठोच्चं बेरोदयं द्वारोदयं वा अष्टभागं षट्भागं वा कृत्वा एकांशं भुवङ्गसमं अध्यर्धं द्विगुणं वा समावृत्तं पद्माकारं देवपादं परितश्चतुरङ्गुलं षडङ्गुलं अष्टाङ्गुलं वा देहलब्धाङ्गुलेन नीत्वा तदूर्ध्वं षोडशदलैर्युक्तं कारयेत् । तस्मात् एकाङ्गुलहीनं देव्योः पीठं कारयेत् । अथवा कौतुकस्यार्चा-पीठस्य पश्चिमभागं देव मानुष पैशाच पदान्तं पीठोत्सेधमानेन समस्थलं कृत्वा तदूर्ध्वं देवीभ्यां सह देवं यथोक्तदेशे संस्थाप्य तत्स्थले कौतुकादीन् संस्थापयेत् ।

Koviloor Digital Library

॥ பீட பரிமாணம் ॥

ஸ்தானகஸ்ய பீடோச்சம் பேரோதயம் த்வாரோதயம் வா அஷ்டபாகம் ஷட்பாகம் வா க்ருத்வா ஏகாம்சம் புவங்கஸமம் அத்யர்தம் த்விகுணம் வா ஸமாவ்ருத்தம் பத்மாகாரம் தேவபாதம் பரிதச்சதுரங்குலம் ஷடங்குலம் அஷ்டாங்குலம் வா தேஹலப்தாங்குலேன நீத்வா ததூர்த்வம் ஷோடசதளைர்யுக்தம் காரயேத். தஸ்மாத் ஏகாங்குலஹீனம் தேவ்யோ: பீடம் காரயேத். அதவா கௌதுகஸ்யார்சாபீடஸ்ய பச்சிமபாகம் தேவ மாநுஷ பைசாச பதாந்தம் பீடோத்ஸேதமானேன ஸமஸ்தலம் க்ருத்வா ததூர்த்வம் தேவீப்யாம் ஸஹ தேவம் யதோக்ததேசே ஸம்ஸ்தாப்ய தத்ஸ்தலே கௌதுகாதீன் ஸம்ஸ்தாபயேத்.

பீடத்தின் அளவு

பொருள் : நின்றநிலை மூர்த்தியின் பீடத்தின் உயரமான பீடத்தின் உயரத்தையோ, வாயிலின் உயரத்தையோ எட்டு பங்காகவோ, ஆறு பங்காகவோ செய்து ஒரு பங்கை புவங்கத்திற்குச் சமமாகவோ, பாதியாகவோ, இரு மடங்காகவோ கொண்டு சமமான வட்டமான பத்ம வடிவமாகவும், பகவானின் திருவடியைச் சுற்றிலும் நான்கு அங்குலம், ஆறு அங்குலம், எட்டு அங்குலமோ தேக லப்தாங்குலத்தினாலே தள்ளி இருப்பதாயும், அதன்மேல் பதினாறு இதழ்களோடு கூடியதாகவும் அமைத்தல் வேண்டும். அதைக்காட்டிலும் ஓர் அங்குலம் குறைந்ததாக் தேவிகளின் பீடமானது அமைக்கப்படவேண்டும். அல்லது கௌதுகத்தின் மூல பேரத்தினுடைய மேற்குத் திசை பாகத்தை தேவபதம், மானுஷபதம், பைசாசபதம் வரையில் பீடத்தின் உயர அளவையினால் சமமான இடமாகச் செய்து அதற்குமேல் இரு தேவிகளுடன் கூடிய பகவானைச் சொல்லப்பெற்ற இடத்தில் ஸ்தாபித்து அந்த இடத்தில் கௌதுகம் முதலிய மூர்த்திகளை ஸ்தாபிக்கவேண்டும்.

Koviloor Digital Library

॥ योगासनस्योत्तमत्वादिकम् ॥

अथ योगस्थानं वक्ष्ये - देवं श्वेताभं चतुर्भुजं पीतवाससं जटामौलिं श्वेतपद्मे समासीनं ऊर्ध्वस्थ दक्षिणपादं अधस्ताद्वाम पादं, अङ्कविन्यस्त वामकरं शङ्खचक्रहितापरभुजं श्वेतवस्त्रोत्तरीयं सोपवीतं कुण्टलाङ्गद हाराद्याभरणान्वितं ईषन्निमीलित लोचनं च भित्ति पार्श्वे दक्षिणे ब्रह्माणं उत्तरे शङ्करं ऊर्ध्वभागे चन्द्रादित्यौ सनक सनत्कुमारौ कौतुकाद्दक्षिण वामयोः भृगुमार्कण्डेयौ तथा महिमार्कण्डेयौ वा कारयेत् । एतदुत्तमं योगासनम् । चन्द्रादित्याभ्यां संनक सनत्कुमाराभ्यां हीनं मध्यमम् । भृगुमार्कण्डेयाभ्यां हीनमधमम् ॥

॥ யோகாஸனஸ்யோத்தமத்வாதிகம் ॥

அத யோகஸ்தானம் வக்ஷ்யே - தேவம் ச்வேதாபம் சதுர்புஜம் பீதவாஸஸம் ஜடாமௌலிம் ச்வேதபத்மே ஸமாஸீனம் ஊர்த்வஸ்த தக்ஷிணபாதம் அதஸ்தாத்வாம பாதம், அங்கவிந்யஸ்த வாமகரம் சங்கசக்ரஹிதாபரபுஜம் ச்வேதவஸ்த்ரோத்தரீயம் ஸோபவீதம் குண்டலாங்கத ஹாராத்யாபரணான்விதம் ஈஷன்னிமீலித லோசநம் ச பித்தி பார்ச்வே தக்ஷிணே ப்ரம்மாணம் உத்தரே சங்கரம் ஊர்த்வபாகே சந்த்ராதித்யௌ ஸனக ஸனத்குமாரௌ கௌதுகாத்தக்ஷிண வாமயோ: ப்ருகு மார்கண்டேயௌ ததா மஹிமார்கண்டேயௌ வா காரயேத். ஏததுத்தமம் யோகாஸனம். சந்த்ராதித்யாப்யாம் ஸனக ஸனத்குமாராப்யாம் ஹீனம் மத்யமம். ப்ருகுமார்கண்டேயாப்யாம் ஹீனமதமம்.

Koviloor Digital Library

யோகமூர்த்தியின் உத்தமத்வம் முதலியன

பிறகு யோகஸ்தானமூர்த்தியைப் பற்றிக் கூறுகிறேன்:–

பகவானை வெண்ணிறத்தோடும், நான்கு கைகளுடனும், மஞ்சள் ஆடையோடும், ஜடாமுடியோடும், வெண்தாமரையில் அமர்ந்தவராகவும், மேலே வலது காலையும், கீழே இடது காலையும் கொண்டவராகவும், மடியில் வைக்கப்பட்ட இடது கையை உடையவராகவும், சங்கு சக்கரங்களற்ற மேலிரு ஹஸ்தங்களை உடையவராகவும், (திருவேங்கயமுடையான்) வெண்மையான ஆடையையும், உத்தரீயமும் உடையவராகவும், யக்ஞோபவீதம் அணிந்தவராகவும், பக்கச் சுவரில் தெற்கில் ப்ரம்மாவையும், வடக்கே சங்கரனையும், மேல் பாகத்தில் சந்த்ர, சூரியர்களையும், ஸனக ஸனத்குமாரர் களையும், கௌதுகமூர்த்தியின் தெற்கிலும் வடக்கிலும் ப்ருகு மார்க்கண்டேயர்களையோ, அவ்வாறே மஹி (பூமிதேவி யையும்), மார்க்கண்டேயர்களையோ (உடையவர்களாகவும்) அமைக்கவேண்டும். இவ்வாறானது உத்தமமான யோகாஸன மூர்த்தியாகும். சந்த்ர, சூரியர்கள், ஸனக ஸனத்குமாரர்கள் இல்லாதது அதமமாகும்.

।। भोगासनस्योत्तमत्वादिकम् ।।

देवं सिह्मासने समासीनं श्यामाङ्गं चतुर्भुजं शङ्खचक्रधरं अभयवरद दक्षिणहस्तं स्वाङ्ककटिविन्यस्य सिह्मकर्ण वामहस्तं प्रसारित दक्षिणपादं कुञ्चित वामपादं दक्षिणे श्रियं देवीं वामपादमाकुञ्च्य दक्षिणं प्रसार्यसिह्मासने समासीनां वामपार्श्वे महीं देवीं दक्षिणं पादं आकुञ्च्य वामं प्रसार्य सिह्मासने समासीनां एतयोर्वाम दक्षिणकरौ पद्मोत्पलधरौ अन्यौ सिह्मासने निहितौ सिह्मकर्णौ वा तद्विपरीतौ वा देवं देव्योरन्तरभागं तालं यवद्वयं तत्तुरीयांशाधिकं हीनं वा दक्षिणोत्तरयोः ब्रह्म शङ्करौ तथाऽऽसीनौ

Koviloor Digital Library

भृगुमार्कण्डेयौ च एकजानुक्रमेणाऽऽसीनौ अन्यत्सर्वं भोगस्थानकवत् अपरभित्तिपार्श्वे माया संह्लादिनीभ्यां व्याजिनीभ्यां तुम्बुरुनारदाभ्यां किन्नरमिथुनाभ्यां यक्ष विद्याधराभ्यां सनक सनत्कुमाराभ्यां सूर्यचन्द्राभ्यां, एवं क्रमेण समायुक्तमुत्तमम् । भोगासनं तुम्बुरु नारदाभ्यां किन्नरमिथुनाभ्यां यक्ष विद्याधराभ्यां हीनं मध्यमम् । सनक सनत्कुमाराभ्यां आदित्यचन्द्राभ्यां पूजक मुनिभ्यां हीनमधमम् ॥

॥ போகாஸநஸ்யோத்தமத்வாதிகம் ॥

பொருள் : தெற்கில் நீலநிற சரீரத்தை உடையவரும், சிவப்புநிற ஆடையைத் தரித்தவரும், சென்றுகொண்டு இருக்குமாறு உள்ள யானைக் கொடியை உடையவரும், எருமையை வாஹனமாக உடையவரும், பரணீ நக்ஷத்திரத்தில் தோன்றியவரும், பகாரத்தைப் பீஜாக்ஷரமாக உடையவரும், சுகாங்கியின் பதியும், மணியொலியுடன் கூடியவருமான யமனை, 'யமாய நம:, தர்மராஜாய நம:, ப்ரேதேசாய நம:, மத்யஸ்தாய நம:' என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

नैऋत्यां नीलाभः रक्ताम्बरधरः शूलीभौतिकाख्येभ वाहनः कृकलासध्वजो मूलजः सम्मोहिनीपतिः पकारबीजः पणवरवः निऋतिः, "आरम्भाधिपतिं, नीलं, निऋतिं, सर्वरक्षोधिपतिं" इति ।।

நைருத்யாம் நீலாப: ரக்தாம்பரதர: சூலீபௌதிகாக்யேப வாஹன: க்ருகலாஸத்வஜோ மூலஜ: ஸம்மோஹிநீபதி: பகாரபீஜ: பணவரவ: நிர்ருதி:, "ஆரம்பாதிபதிம், நீலம், நிர்ருதிம், ஸர்வரக்ஷோதிபதிம்" இதி.

பொருள் : நிர்ருதி திக்கில் கருத்த சரீரத்தை உடையவரும், சிவந்தநிற ஆடையை அணிந்தவரும், சூலத்தைத் தரித்திருப்பவரும், பௌதிகன் என்ற பெயருடைய யானையை வாகனமாக உடையவரும், (ஓணான்) பல்லியைக் கொடியாக உடையவரும், மூல நக்ஷத்திரத்தில் பிறந்தவரும், ஸம்மோஹினியின் பதியும், பகாரத்தைப் பீஜாக்ஷரமாக உடையவரும், பணவ வாத்ய கோஷத்துடன் கூடியவருமான நிர்ருதியை, 'ஆரம்பாதிபதயே நம:, நீலாய நம:, நிர்ருதயே நம:, ஸர்வரக்ஷாதிபதயே நம:' என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

वारुण्यां नीलवर्णो रक्तवस्त्रधरः पाशीसिंहध्वजो वारुणजः सुप्रतीकेभवाहनः अञ्जनापतिः वकारबीजः दुर्दुररवो वारुणो, "वारुणं, प्रचेतसं, रक्ताम्बरधरं, यादसांपतिं" इति ।।

Koviloor Digital Library

வாருண்யாம் நீலவர்ணோ ரக்தவஸ்த்ரதர: பாசீஸிம்ஹத்வஜோ வாருணஜ: ஸுப்ரதீகேபவாஹன: அஞ்ஜநாபதி: வகாரபீஜ: துர்துரரவோ வாருணோ, "வாருணம், ப்ரசேதஸம், ரக்தாம்பரதரம், யாதஸாம்பதிம்" இதி.

பொருள் : வருண பாகத்தில் (மேற்கில்) கருத்த நிறமுடையவரும், சிவப்பு வஸ்த்ரம் தரித்தவரும், கல்லாலான ஸிம்ஹத்தைக் கொடியாக உடையவரும், சதய நக்ஷத்திரத்தில் பிறந்தவரும், ஸுப்ரதீகம் என்ற வகை யானையை வாஹனமாக உடையவரும், அஞ்ஜனாதேவியின் கணவனும், "வ" என்ற எழுத்தை பீஜாக்ஷரமாக உடையவரும், துர்துர வாத்யத்தின் சப்தத்தோடு கூடியவருமான வருணனை, "வருணாய நம:, ப்ரசேதஸே நம:, ரக்தாம்பரதராய நம:, யாதஸாம்பதயே நம:" என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

वायव्ये कनकाभस्सिताम्बरधरो गजवाहनः वायुजो वेणुध्वजः कुमुद्वतीपतिः दण्डभृत् यकार बीजः शङ्खरवो वायुः, "जवनं, भूतात्मकं, वायुं, उदानं" इति ।।

வாயவ்யே கனகாபஸ்ஸிதாம்பரதரோ கஜவாஹன: வாயுஜோ வேணுத்வஜ: குமுத்வதீபதி: தண்டப்ருத் யகார பீஜ: சங்கரவோ வாயு:, "ஜவனம், பூதாத்மகம், வாயும், உதானம்" இதி.

பொருள் : வாயு திக்கில் தங்கம் போன்ற நிறமுடைய சரீரமுடையவரும், வெண்மையான வஸ்த்தரத்தை உடுத்திய வரும், யானையை வாஹனமாக உடையவரும், ஸ்வாதீ நக்ஷத்திரத்தில் பிறந்தவரும், புல்லாங்குழலைக் கொடியாக உடையவரும், குமுத்வதியின் பதியும், தண்டத்தை வைத்திருப்பவரும், யகாரத்தைப் பீஜாக்ஷரமாக உடையவரும், சங்கத்வனியுடன் கூடியவருமான வாயுவை, " ஜவனாய நம:, பூதாத்மகாய நம:, வாயவே நம:, உதானாய நம:," என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

Koviloor Digital Library

उत्तरे सितवर्णः श्यामाम्बरधरो दण्डी पुष्पकवाहनः कृकलास ध्वजः काकरबीजो यवनलापतिः धनिष्टाजो मृदङ्गरवः कुबेरः, "कुबेरं, धन्यं, पौलस्त्यं, यक्षराजं" इति ।।

உத்தரே ஸிதவர்ண: ச்யாமாம்பரதரோ தண்டி புஷ்பகவாஹன: க்ருகலாஸத்வஜ: காகரபீஜோ யவனலாபதி: தனிஷ்டாஜோ ம்ருதங்கரவ: குபேர:, "குபேரம், தன்யம், பௌலஸ்த்யம், யக்ஷராஜம்" இதி.

பொருள் : வடக்கில் வெளுப்பான சரீரத்தை உடையவரும், சாம்பல்நிற ஆடை உடுத்தியவரும், தண்டத்தை உடையவரும், புஷ்பக விமானத்தை வாஹனமாக உடையவரும், பல்லியைக் கொடியாக உடையவரும், "க" என்ற எழுத்தை பீஜாக்ஷரமாக உடையவரும், யவனலாவின் பதியும், தனிஷ்டா நக்ஷத்திரத்தில் தோன்றியவரும், ம்ருதங்க வாத்ய த்வனியுடன் கூடியவருமான குபேரனை, "குபேராய நம:, தன்யாய நம:, பௌலஸ்த்யாய நம:, யக்ஷராஜாய நம:" என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

ऐशान्यां पाटल्याभस्सिताम्बरधरो वृषध्वज वाहनः जटामौलिश्चतुर्भुजः त्रिनेत्रः शूलपाणिः शकारबीजः आर्द्राजः पार्वतीशो डमर ध्वनिरीशानः "ईशानं, ईश्वरं, देवं, भवं" इति ।।

ஐசான்யாம் பாடல்யாபஸ்ஸிதாம்பரதரோ வ்ருஷத்வஜ வாஹன: ஜடாமௌலிச்சதுர்புஜ: த்ரிநேத்ர: சூலபாணி: சகாரபீஜ: ஆர்த்ராஜ: பார்வதீசோ டமர த்வனிரீசான: "ஈசானம், ஈச்வரம், தேவம், பவம்" இதி..

பொருள்: ஈசான பாகத்தில் வெளுத்த சிவந்த நிறமுடைய சரீரத்தை உடையவரும், வெளுப்பான உடையணிந்தவரும், காளையைக் கொடியாகவும், வாஹனமாகவும் உடையவரும், ஜடாமுடியுடன் கூடியவரும், நான்கு கைகளும், மூன்று

Koviloor Digital Library

கண்ணும், சூலத்தைக் கையில் கொண்டவரும் சகாரத்தைப் பீஜாக்ஷரமாக உடையவரும், திருவாதிரை நக்ஷத்திரத்தில் பிறந்தவரும், பார்வதியின் கணவனும், உடுக்கைச் சப்தத்துடன் கூடியவருமான ஈசானனை, 'ஈசானாய நம:, ஈச்வராய நம:, தேவாய நம:, பவாய நம:" என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

इन्द्रादयोवाष्टावभ्यन्तरमुखा एतेष्वनिरुद्धं त्रिविक्रमं वामनं च विना ध्रुवेस्थिते स्थितान् आसीनेत्वासीनान् शयने, यानके च तत्तत्कौतुकवत् ध्यायन् अर्चयेत् ।।

இந்த்ராதயோவாஷ்டாவப்யந்தரமுகா ஏதேஷு அனிருத்தம் த்ரிவிக்ரமம் வாமனம் ச வினா த்ருவேஸ்திதே ஸ்திதான், ஆஸீனேத்வாஸீனான் சயனே, யானகே ச தத்தத்கௌதுகவத் த்யாயன் அர்ச்சயேத்.

பொருள்: இந்திரன் முதலான அஷ்டதிக்பாலர்களும் பெருமாளைப் பார்த்தவாறும், இவைகளில் அநிருத்தன், த்ரிவிக்ரமன், வாமனன் ஆகியோர்களைத்தவிர த்ருவ பேரமானது நின்ற திருக்கோலமாகில் அஷ்டதிக்பாலகர்களும் நின்றுகொண்டிருக்குமாறு த்யானித்தும், அமர்ந்த திருக்கோல மாகில் அமர்ந்திருப்பதாகவும், கிடந்த; வாகனத்தின்மேல் செல்லுமாறு இருப்பின் கௌதுக மூர்த்தியைப் போலவும் த்யானித்து அர்ச்சிக்கவேண்டும்.

।। श्रीभूचतुर्नामानि ।।

देवस्य दक्षिणे रुग्माभा क्षौमाम्बरधरा पद्महस्ता कक्ष्याबद्धघनस्तनी ललाटोपरि पुष्पचूडान्विता मुकुट हारादि सर्वाभरणभूषित श्रीवत्सादि बीजा फल्गुणोत्तरजा ध्वनिरवा श्रीः, "श्रियं, धृतिं, पवित्रीं, प्रमोदायिनीं" इति ।।

Koviloor Digital Library

|| ஸ்ரீபூசதுர்நாமானி ||

தேவஸ்ய தக்ஷிணே ருக்மாபா க்ஷௌமாம்பரதரா பத்மஹஸ்தா கக்ஷ்யாபத்தகனஸ்தனீ லலாடோபரி புஷ்பசூடாந்விதா மகுட ஹாராதி ஸர்வாபரணபூஷித ஸ்ரீவத்ஸாதி பீஜா பல்குணோத்தரஜா த்வனிரவா ஸ்ரீ:, "ச்ரியம், த்ருதிம், பவித்ரீம், ப்ரமோதாயினீம்" இதி.

ஸ்ரீதேவி - பூமிதேவி ஆகியோரின் சதுர்நாமங்கள்

பொருள் : பெருமாளுக்குத் தெற்குப்புறத்தில் தங்கநிறம் போன்ற சரீரத்தை உடையவளாகவும், பட்டாடை அணிந்தவளும், தாமரையைக் கையில் தரித்திருப்பவளும், கச்சை கட்டிய பருத்த ஸ்தனங்களை உடையவளும், நெற்றிக்குமேல் வந்துவிழும் சூடாமணியை உடையவளும், மகுடம், ஹாரம் முதலிய ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவளும், ஸ்ரீவத்ஸத்தின் முதல் எழுத்தை பீஜாக்ஷரமாக உடையவளும், உத்தரபல்குனி நக்ஷத்திரத்தில் பிறந்தவளும், த்வனியுடன் கூடியவளுமான ஸ்ரீதேவியை, "ச்ரியை நம:, த்ருத்யை நம:, பவித்ர்யை நம:, ப்ரமோதாயிந்யை நம:" என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

वामे श्यामाभा रक्ताम्बरधरा रक्तोत्पलधरा मकुटादि सर्वाभरण संयुक्ता वैशाख रेवतीजाता लक्ष्मी पूर्वाक्षराधिपा शङ्खरवा भूमिः, "हरिणीं, पौष्णीं, क्षौणीं, महीं" इति ।।

வாமே ச்யாமாபா ரக்தாம்பரதரா ரக்தோத்பலதரா மகுடாதி ஸர்வாபரண ஸம்யுக்தா வைசாக ரேவதீஜாதா லக்ஷ்மீ பூர்வாக்ஷராதிபா சங்கரவா பூமி:, "ஹரிணீம், பௌஷ்ணீம், க்ஷௌணீம், மஹீம்" இதி.

பொருள் : பெருமாளுக்கு இடக்கைப்புறம் நீலநிறம் போன்ற சரீரத்தை உடையவளும், சிவப்புநிற ஆடை

Koviloor Digital Library

அணிந்தவளும், சிவப்புநிற உத்பலபுஷ்பத்தை வைத்திருப்பவளும், மகுடம் முதலிய ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவளும், வைகாசிமாத ரேவதீ நக்ஷத்திரத்தில் பிறந்தவளும் லக்ஷ்மியின் முன்னெழுத்தைப் பீஜாக்ஷரமாக உடையவளும், சங்கத்வனியுடன் கூடியவளுமான பூமிதேவியை, 'ஹரிண்யை நம:, பௌஷ்ண்யை நம:, மஹ்யை நம:, ' என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

।। पुरुषादि देवीनां चतुर्नामानि ।।

पुरुषादीनां देवीनां श्रीभूम्योरिवेति विज्ञायते ।।

॥ புருஷாதி தேவீநாம் சதுர்நாமாநி ॥

புருஷாதீனாம் தேவீனாம் ஸ்ரீபூம்யோரிவேதி விக்ஞாயதே.

புருஷன் முதலான பெருமாளின், தேவிகளுடைய சதுர்நாமங்கள் (நான்கு பெயர்கள்)

பொருள் : புருஷன் முதலான பெருமாளின் தேவியர்களுக்கு, ஸ்ரீதேவி, பூதேவியைப் போலவே சதுர்நாமங்கள் சொல்லிக்கொள்ளவேண்டும்.

।। कर्मार्चास्थाने प्रथमावरण देवाः ।।

कर्मार्चास्थाने पीठे प्राच्यां प्राङ्मुखः सुभद्रः पूर्ववत् ।।

॥ கர்மார்ச்சாஸ்தானே ப்ரதமாவரணே தேவா: ॥

கர்மார்ச்சாஸ்தானே பீடே ப்ராச்யாம் ப்ராங்முக: ஸுபத்ர: பூர்வவத்.

V-24

Koviloor Digital Library

கர்மார்ச்சாஸ்தானத்தில் முதல் ஆவரண தேவதைகள்

(கௌதுக பேரார்ச்சாஸ்தானத்தினுடைய) கர்மார்ச்சாஸ்தானத்தினுடைய பீடத்தின் கிழக்கில், கிழக்கு முகமாக ஸுபத்ரனை முன்சொல்லியுள்ளதுபோல அர்ச்சிக்கவேண்டும்.

आग्नेय्यां प्राङ्मुखः सुवर्णपीताम्बरधरः सकला विश्वाभ्यां युक्तः सर्वः, "सर्वं, विश्वं, सर्वाधारं, विश्वेश्वरं " इति ।।

ஆக்னேய்யாம் ப்ராங்முக: ஸுவர்ணபீதாம்பரதர: ஸகலா விச்வாப்யாம் யுக்த: ஸர்வ:, "ஸர்வம், விச்வம், ஸர்வாதாரம், விச்வேச்வரம்" இதி.

பொருள் : அக்னி திக்கில் கிழக்குமுகமாக தங்கப் பட்டாடை உடுத்தியவரும், ஸகலா-விச்வா என்ற இரு தேவியர்களுடன் கூடியவருமான ஸர்வனை, "ஸர்வாய நம:, விச்வாய நம:, ஸர்வாதாராய நம:, ஸர்வேச்வராய நம:" என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

दक्षिणे दक्षिणाभिमुखो हयात्मकः श्वेताभः पीतवासा हयाननः इलाविश्वाभ्यां सहितो, "हयात्मकं, देवेशं, सर्वानन्दं, सनातनं," इति ।।

தக்ஷிணே தக்ஷிணாபிமுகோ ஹயாத்மக: ச்வேதாப: பீதவாஸா ஹயானன: இளாவிச்வாப்யாம் ஸஹிதோ, "ஹயாத்மகம், தேவேசம், ஸர்வானந்தம், ஸநாதனம்," இதி.

பொருள் : தெற்கில், தெற்குமுகமாக ஹயாத்மகனை வெளுத்த சரீரத்தை உடையவராகவும், மஞ்சள்நிற வஸ்த்ரத்தை தரித்தவரும், குதிரை முகமுடையவரும், இளா-விச்வா என்ற

Koviloor Digital Library

இருதேவியர்களுடன் கூடியிருப்பவரை, 'ஹயாத்மகாய நம:, தேவேசாய நம:, ஸர்வாநந்தாய நம:, ஸநாதனாய நம:' என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

नैऋत्यां पश्चिमाभिमुखः सितवर्णः श्यामाम्बरधरः शुद्धा विमलाभ्यां युक्तः सुखावहः "सुखावहं, सुकेशं, सुमुखं, सुरप्रियं" इति ।।

நைருத்யாம் பச்சிமாபிமுக: ஸிதவர்ண: ச்யாமாம்பரதர: சுத்தா-விமலாப்யாம் யுக்த: ஸுகாவஹ: "ஸுகாவஹம், ஸுகேசம், ஸுமுகம், ஸுரப்ரியம்" இதி.

பொருள் : நிர்ருதி திக்கில், மேற்குமுகமாக வெளுத்த சரீரத்தை உடையவரும், சாம்பல்நிற ஆடையுடுத்தியவரும், சுத்தா-விமலா என்ற இரு தேவியர்களுடன் இருப்பவருமான ஸுகாவஹரை, 'ஸுகாவஹாய நம:, ஸுகேசாய நம:, ஸுமுகாய நம:, ஸுரப்ரியாய நம:' என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

पश्चिमे पश्चिमाभिमुखो रामदेवः कनकाभो नीलाम्बरधरः ब्राह्मी-विजयाभ्यां युक्तः, "रामदेवं, महाबलं, महाभद्रं, परशुपाणिं" इति ।।

பச்சிமே பச்சிமாபிமுகோ ராமதேவ: கனகாபோ நீலாம்பரதர: ப்ராம்மீ-விஜயாப்யாம் யுக்த;, "ராமதேவம், மஹாபலம், மஹாபத்ரம், பரசுபாணிம்" இதி.

பொருள் : மேற்கில், மேற்குமுகமாகத் தங்கம் போன்ற சரீரத்தை உடையவரும், தாமரை போன்ற வஸ்த்ரத்தைத் தரித்திருப்பவரும், ப்ராம்மீ-விஜயா என்ற பெயருடைய இருதேவியர்களுடன் கூடியிருப்பவருமான ராமதேவரை, 'ராமதேவாய நம:, மஹாபலாய நம:, மஹாபத்ராய நம:, பரசுபாணயே நம:' என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

Koviloor Digital Library

वायव्ये पश्चिमाभिमुखः किंशुकपुष्पाभः सिताम्बरधरः सुभगा सुमुखीभ्यां युक्तः संवहः, "संवहं, सर्वतेजोमयं, आनन्दं, सर्वरूपिणं" इति ।।

வாயவ்யே பச்சிமாபிமுக; கிம்சுகபுஷ்பாப: ஸிதாம்பரதர; ஸுபகா ஸுமுகீப்யாம் யுக்த: ஸம்வஹ:, "ஸம்வஹம், ஸர்வதேஜோமயம், ஆனந்தம், ஸர்வருபிணம்" இதி.

பொருள் : வாயு திக்கில், மேற்குமுகமாக கிம்சுக புஷ்பம் போன்ற சரீரத்தை உடையவரும், வெளுப்பான ஆடை தரித்தவரும், ஸுபகாஸுமுகி என்ற இரு தேவியர்களுடன் கூடியிருப்பவருமான ஸம்வஹனை, 'ஸம்வஹாய நம:, ஸர்வதேஜோமயாய நம:, ஆனந்தாய நம:, ஸர்வருபிணே நம:,' என்பதாக அர்ச்சிக்க வேண்டும்.

उत्तरे च उत्तराभिमुखः पुण्यः पूर्ववत् ।।

உத்தரே ச உத்தராபிமுக: புண்ய: பூர்வவத்.

பொருள் : வடக்கில், வடக்குமுகமாக புண்யனை முன்போலவே அர்ச்சிக்கவேண்டும்.

ऐशान्यां प्राङ्मुखोऽग्निवर्णः सिताम्बरधरः सुमता जननीभ्यां युक्तः सुवहः, "सुवहं, सुकृतं, विज्ञानं, देवमयं" इति ।।

ஐசான்யாம் ப்ராங்முகோsக்நிவர்ண: ஸிதாம்பரதர: ஸுமதா ஜனனீப்யாம் யுக்த: ஸுவஹ:, "ஸுவஹம், ஸுக்ருதம், விக்ஞானம், தேவமயம்" இதி.

பொருள் : ஈசான திக்கில், கிழக்குமுகமாக சிவந்தநிறமான சரீரத்தை உடையவரும், ஸுமதா-ஜனனீ என்ற

Koviloor Digital Library

இருதேவியர்களுடன் கூடியவருமான ஸுவஹனை. "ஸுவஹாய நம:, ஸுக்ருதாய நம:, விக்ஞானாய நம:, தேவமயாய நம:" என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

सुभद्रादीनां अनुक्तं सर्वं विष्णोरिवेति विज्ञायते ।।

ஸுபத்ராதீனாம் அனுக்தம் ஸர்வம் விஷ்ணோரிவேதி விக்ஞாயதே.

ஸுபத்ரன் முதலான சொல்லப்படாதவர்களுக்கு பெருமாளைப்போலவே அர்ச்சிக்கவேண்டும்.

।। द्वितीयावरण देवाः ।. (मित्रादीनां लक्षणं च)

द्वितीयावरणे गजवाहनः श्वेताभः स्रुवध्वजो मित्रेशो मित्रः, रुरुवाहनः अग्निवर्णो जुहुध्वजः सतीशोऽत्रिः गजवाहनः कनकाभः सवारिकलशध्वजः शुभेश्वरः शिवः, वायुवाहनः, प्रवालाभो वेदध्वजः शुद्धेशो विश्वः, सर्वेरक्ताम्बरधरा भेरीरवा रोहिणीजा तन्नामाद्यक्षर बीजाश्च एतान् पीठान्ते प्रागादि बहिर्मुखान् अर्चयेत् ।।

॥ த்விதீயாவரண தேவா: ॥

(மித்ராதீனாம் லக்ஷணம் ச)

த்விதீயாவரணே கஜவாஹன: ச்வேதாப; ஸ்ருவத்வஜோ மித்ரேசோ மித்ர:, ருருவாஹந: அக்னிவர்ணோ ஜுஹுத்வஜ: ஸதீசோ஽த்ரி: கஜவாஹன: கனகாப: ஸவாரிகலசத்வஜ: சுபேச்வர: சிவ:, வாயுவாஹன:, ப்ரவாலாபோ வேதத்வஜ: சுத்தேசோ விச்வ:, ஸர்வேரக்தாம்பரதரா பேரீரவா ரோஹிணீஜா தன்னாமாத்யக்ஷர பீஜாச்ச ஏதான் பீடாந்தே ப்ராகாதி பஹிர்முகான் அர்ச்சயேத்.

Koviloor Digital Library

இரண்டாவது ஆவரணதேவதைகள்

(மித்ரன் முதலானவர்களின் லக்ஷணம்)

பொருள் : இரண்டாவது ஆவரணத்தில் யானையை வாகனமாக உடையவரும், வெளுத்த சரீரத்தை உடையவரும், ஸ்ருவத்தைக் கொடியாக உடையவரும், மித்ரேசனுமான மித்ரனையும், மானை வாஹனமாக உடையவரும், சிவந்த சரீரத்தை உடையவரும், ஜுஹுவைக் கொடியாக உடையவரும், ஸதீசனுமான அத்ரியையும், யானையை வாஹனமாக உடையவரும், தங்கத்திற்கொப்பான சரீரத்தையுடையவரும், நீர் நிரம்பிய கலசத்தைக் கொடியாக உடையவரும், சுபேச்வரனுமான சிவனையும், வாயுவை வாகனமாக உடையவரும், பவளம் போன்ற சரீரத்தையுடையவரும், வேதத்தைக் கொடியாக உடையவரும், சுத்தேசனுமான விச்வன் ஆகிய அனைவரையும் சிவப்பு வஸ்த்ரம் தரித்தவர்களாகவும், பேரீ வாத்யத்துடன் கூடியவர்களாகவும், ரோஹிணீ நக்ஷத்திரத்தில் தோன்றியவர்களாகவும், அவரவர்களின் பெயரினுடைய முதல் எழுத்தை பீஜாக்ஷரமாகக் கொண்டவர்களாகவும், பீடத்தின் கடைசியில் இவர்கள் அனைவரும் கிழக்கு முதலான நான்கு திசைகளிலும் வெளிமுகமாகப் பார்த்திருக்குமாறு த்யானித்து அர்ச்சிக்கவேண்டும்.

हेमाभः सनातनः कुन्दाभः सनन्दनः, गुञ्जाभः सनत्कुमारः, स्फटिकाभः सनकश्च सर्वे श्यामाम्बरधराः पद्मवाहनाः कूर्चध्वजाः ब्रह्मचारिणः नामाद्याक्षरबीजाः पुष्पजाः शङ्खनादरवाश्च एतानाग्नेयादि कोणेषु बहिर्मुखानर्चयेत् ।।

ஹேமாப: ஸனாதன: குந்தாப: ஸநந்தன:, குஞ்ஜாப: ஸனத்குமார:, ஸ்படிகாப: ஸனகச்ச ஸர்வே ச்யாமாம்-பரதரா: பத்மவாஹனா: கூர்ச்சத்வஜா: ப்ரஹ்மசாரிண:

Koviloor Digital Library

நாமாத்யாக்ஷரபீஜா: புஷ்யஜா: சங்கநாதரவாச்ச ஏதானாக்னேயாதி கோணேஷு பஹிர்முகானர்ச்சயேத்.

பொருள் : தங்க நிறத்திற்கொப்பான சரீரத்தை உடையவராக ஸனாதனன், மல்லிகைபோன்ற வெளுப்பான சரீரத்தை உடையவராக ஸநந்தனனையும், மாநிறமுடையவராக ஸனத்குமாரரையும், ஸ்படிகம் போன்று வெளுப்பான சரீரத்தை உடையவராக ஸனகனையும்; அனைவரும் சாம்பல்நிற ஆடை அணிந்தவர்களாகவும், தாமரையை வாகனமாக உடையவர்களாகவும், ப்ரம்மசாரிகளாகவும், அவரவர்களின் பெயருடைய முதல் எழுத்தை பீஜாக்ஷரமாக உடையவர்களாகவும், சங்கநாதத்துடன் கூடியவர்களாகவும், அக்னி முதலான நான்கு திக்குகளிலும் வெளிமுகமாகப் பார்த்திருக்குமாறு அர்ச்சிக்கவேண்டும்.

।। मित्रादीनां चतुर्नाम ।।

मित्रं लोकहितं विश्वात्मानं कपिवरं, अत्रिं, त्रिधागतिं, तृतीयात्मकं, वेदमूर्तिं; शिवं, मुनिवरं, शुद्धं, सुयोक्तारं; विश्वं, भूतनायकं, जगद्वीक्षणं, सर्वमातृकं; सनातनं, मुनीन्द्रं, ब्रह्मसम्भवं, निष्ठानकं; सनन्दनं, गुरुं, सर्वपूज्यं, मन्त्रज्ञं; सनत्कुमारं, ज्योतिरीशं, निरुद्वेगं, अक्रोधं; सनकं, नियन्तारं, धर्मज्ञं, धर्मचोदितं इति ।।

॥ மித்ராதீனாம் சதுர்நாம ॥

மித்ரம் லோகஹிதம் விச்வாத்மானம் கபிவரம்; அத்ரிம், த்ரிதாகதிம், த்ருதீயாத்மகம், வேதமூர்த்திம்; சிவம், முனிவரம், சுத்தம், ஸுயோக்தாரம்; விச்வம், பூதநாயகம், ஜகத்வீக்ஷணம், ஸர்வமாத்ருகம்; ஸனாதனம், முனீந்த்ரம், ப்ரம்மஸம்பவம், நிஷ்டானகம்; ஸனந்தநம்,

Koviloor Digital Library

குரும், ஸர்வபூஜ்யம், மந்த்ரக்ஞும்; ஸனத்குமாரம், ஜ்யோதிரீசம், நிருத்வேகம், அக்ரோதம்; ஸனகம், நியந்த்தாரம், தர்மக்ஞும், தர்மசோதிதம் இதி.

மித்ரன் முதலானவர்களுக்கான சதுர்நாமங்கள்

பொருள் : மித்ரம், லோகஹிதம், விச்வாத்மானம், கபிவரம்; அத்ரிம், த்ரிதாகதிம், த்ருதீயாத்மகம், வேதமூர்த்திம்; சிவம், முனிவரம், சுத்தம், ஸுயோக்த்தாரம்; விச்வம், பூதநாயகம், ஜகத்வீக்ஷணம், ஸர்வமாத்ருகம்; ஸனாதனம், குரும், ஸர்வபூஜ்யம், மந்த்ரக்ஞும்; ஸனத்குமாரம், ஜ்யோதிரீசம், நிருத்வேகம், அக்ரோதம்; ஸனகம், நியந்த்தாரம், தர்மக்ஞும், தர்மசோதிதம் என்பதாக சதுர்நாமங்கள்.

।। तृतीयावरण देवाः ।।

तृतीयावरणे इन्द्रादीन् दक्षिणे श्रियं वामे हरिणीं च पूर्ववदर्चयेत् ।।

॥ த்ருதீயாவரண தேவா: ॥

த்ருதீயாவரணே இந்த்ராதீன் தக்ஷிணே ச்ரியம் வாமே ஹரிணீம் ச பூர்வவதர்சயேத்.

மூன்றாவது ஆவரண தேவதைகள்

பொருள் : மூன்றாவது ஆவரணத்தில் இந்த்ரன் முதலான அஷ்டதிக்பாலகர்களையும், தெற்குப்புறத்தில் ஸ்ரீதேவியையும்; வடக்குப்புறத்தில் பூமிதேவியையும் முன்போலவே அர்ச்சிக்கவேண்டும்.

Koviloor Digital Library

।। ब्रह्मादिलक्षणम् ।।

दक्षिणे भित्तिपार्श्वे रुग्माभो हंसवाहनः कमण्डलु-ध्वजोऽभिजिज्जात सावित्रीपतिः उकारबीजो वेदरवो ब्रह्मा - "ब्रह्माणं, प्रजापतिं, पितामहं, हिरण्यगर्भं" इति ।।

॥ ப்ரம்மாதிலக்ஷணம் ॥

தக்ஷிணே பித்திபார்ச்வே ருக்மாபோ ஹம்ஸ-வாஹண: கமண்டலுத்வஜோऽபிஜிஜ்ஜாத ஸாவித்ரீபதி:, உகாரபீஜோ வேதரவோ ப்ரஹ்மா - "ப்ரம்மாணம், ப்ரஜாபதிம், பிதாமஹம், ஹிரண்யகர்பம்" இதி.

ப்ரம்மன் முதலான தேவர்களின் லக்ஷணம்

பொருள்: தென்புறச் சுவற்றில் தங்கம்போன்ற நிறமுடைய சரீரத்தை உடையவரும், அன்னப்பறவையை வாஹனமாக உடையவரும், கமண்டலுவைக் கொடியாக உடையவரும், ச்ரவண நக்ஷத்திரத்தில் தோன்றியவரும், ஸாவித்ரியின் பதியும், 'உ' என்ற எழுத்தைப் பீஜாக்ஷரமாக உடையவரும், வேத சப்தத்தோடு கூடியவருமான ப்ரம்மனை - 'ப்ரம்மணே நம:, ப்ரஜாபதயே நம:, பிதாமஹாய நம:, ஹிரண்யகர்பாய நம:' என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

सुवर्णाभः ब्रह्मचारी रक्ताम्बरधरः, पद्मवाहनः, कूर्चध्वजः, शङ्खरवः, मकारबीजः, मार्कण्डेयः - "मार्कण्डेयं, पुण्यं, पुरातनं, अमितं" इति ।।

ஸுவர்ணாப: ப்ரம்மசாரீ ரக்தாம்பரதர:, பத்மவாஹன:, கூர்சத்வஜ:, சங்கரவ:, மகாரபீஜ:, மார்கண்டேய:- "மார்கண்டேயம், புண்யம், புராதனம், அமிதம்" இதி.

Koviloor Digital Library

பொருள் : தங்கநிறம் போன்ற சரீரத்தை உடையவரும், ப்ரம்மசாரியும், சிவப்புநிற ஆடை உடுத்தியவரும், பத்மத்தை வாஹனமாக உடையவரும், கூர்ச்சத்தைக் கொடியாக உடையவரும், சங்கத்வனியுடன் கூடியவரும், "ம" என்ற எழுத்தை பீஜாக்ஷரமாக உடையவருமான மார்க்கண்டேயரை, "மார்க்கண்டேயாய நம:, புண்யாய நம:, புராதனாய நம:, அமிதாய நம:" என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

वामेभित्तिपार्श्वे श्वेताभो व्याघ्रचर्माम्बरधरः परशुमृगधरः चतुर्भुजो वृषध्वज वाहनः डमरुध्वनिः मकारबीजः आर्द्राजः उमापतिः गङ्गाधरो, "गङ्गाधरं, वृषवाहनं, अष्टमूर्तिं, उमापतिं" इति ।।

வாமேபித்திபார்ச்வே ச்வேதாபோ வ்யாக்ர-சர்மாம்பரதர: பரசு ம்ருகதர: சதுர்புஜோ வ்ருஷத்வஜ-வாஹன: டமருத்வனி: மகாரபீஜ: ஆர்த்ராஜாத: உமாபதி: கங்காதரோ, "கங்காதரம், வ்ருஷவாஹனம், அஷ்ட-மூர்த்திம், உமாபதிம்" இதி.

பொருள் : வடக்குச் சுவற்றில் சாம்பல் நிறமான சரீரத்தை உடையவரும், புலித்தோலை ஆடையாக அணிந்தவரும், மான், மழு தரித்தவரும், நான்கு கைகளுள்ளவரும், காளையைக் கொடியாகவும், வாஹனமாகவும் உடையவரும் உடுக்கையின் த்வனியுடன் கூடியவரும், "ம" என்ற எழுத்தைப் பீஜாக்ஷரமாக உடையவரும், திருவாதிரை நக்ஷத்திரத்தில் தோன்றியவரும், பார்வதியின் கணவனுமான கங்காதரனை, "கங்காதராய நம:, வ்ருஷவாஹனாய நம:, அஷ்டமூர்த்தயே நம:, உமாபதயே நம:" என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

अग्निवर्णः शुक्लाम्बरधरः पद्मवाहनः कमण्डलुध्वजो रोहिणीजः शङ्खरवो नामाद्याक्षरबीजः ख्यातीशः पद्मापिता, "पद्मापितरं, धातृनाथं, ख्यातीशं, भृगुं" इति ।।

Koviloor Digital Library

அக்னிவர்ண: சுக்லாம்பரதர: பத்மவாஹன:, கமண்டலு த்வஜோ, ரோஹிணீஜ: சங்கரவோ நாமாத்யக்ஷரபீஜ: க்யாதீச: பத்மாபிதா, "பத்மாபிதரம், தாத்ருநாதம், க்யாதீசம், ப்ருகும்" இதி.

பொருள் : சிவந்த நிறமுடையவரும், வெளுப்பான ஆடை அணிந்தவரும், பத்மத்தை வாஹனமாக உடையவரும், கமண்டலுவைக் கொடியாக உடையவரும், ரோஹிணீ நக்ஷத்திரத்தில், தோன்றியவரும், சங்கத்வனியுடன் கூடியவரும், அவரது பெயரின் முதல் எழுத்தையே பீஜாக்ஷரமாக உடையவராகவும், க்யாதீசருமான பத்மா பிதாவை, 'பத்மபித்ரே நம:, தாத்ருநாதாய நம:, க்யாதீசாய நம:, ப்ருகவே நம:' என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

।। धात्रादीनां लक्षणम् ।।

दक्षिणे गन्धर्वस्थाने वेणुवर्णो रथकेतुः सन्धिनीश उदङ्मुखो धाता; वामे गन्धर्वस्थाने शुकपत्राभो गजवाहनः सर्पध्वजो ऊर्ध्वेशो दक्षिणामुखो विधाता; द्वार दक्षिणे शिराः ऊर्ध्वमुखो नीलवर्णो वृषभ वाहनोऽग्निकेतुः प्रीतीशो भुवङ्गभृतिं पूजनाद्यर्चनाकालादन्येन लघ्व्योपरि शिरःस्थाने पूजयेत् । तदुपरि शुक्लाभः तुरगवाहनः श्वेतकेतुः भरणीशः उदारः अधोमुखः पतङ्गः द्वारदक्षिणभागे सुवर्णाभो गजवाहनो वृषध्वजो बलेशः वामे सुवर्णाभः रथवाहनः शङ्खध्वजः धरणीशोऽवाक्शिरा वरुणः एते नामाद्यक्षर-बीजाश्शङ्खरवा आश्वायुज्यां हस्तजश्च ।।

॥ தாத்ராதீனாம் லக்ஷணம் ॥

தக்ஷிணே கந்தர்வஸ்தானே வேணுவர்ணோ ரதகேது: ஸந்தினீச உதங்முகோ தாதா; வாமே கந்தர்வ-

Koviloor Digital Library

ஸ்தானே சுகபத்ராபோ கஜவாஹன: ஸர்பத்வஜோ ஊர்த்வேசோ தக்ஷிணாமுகோ விதாதா; த்வார தக்ஷிணே சிரா: ஊர்த்வமுகோ நீலவர்ணோ வ்ருஷப வாஹனோ அக்னிகேது: ப்ரீதீசோ புவங்கப்ருதிம் பூஜனாத்யர்ச்சனா-காலாதன்யேன லக்வ்யோபரி சிர:ஸ்தானே பூஜயேத். ததுபரி சுக்லாப: துரகவாஹன: ச்வேதகேது: பரணீச: உதார: அதோமுக: பதங்க:; த்வாரதக்ஷிணபாகே ஸுவர்ணாபோ கஜவாஹனோ வ்ருஷத்வஜோ பலேச:; வாமே ஸுவர்ணாப: ரதவாஹன: சங்கத்வஜ: தரணீசோ அவாக்சிரா வருண: ஏதே நாமாத்யக்ஷரபீஜாச்சங்கரவா ஆச்வாயுஜ்யாம் ஹஸ்தஜச்ச.

தாத்ராதிகளின் லக்ஷணம்

பொருள்: வாயிலின் தெற்கு காலில் கந்தர்வஸ்தானத்தில் மூங்கில் போன்ற நிறமுடையவரும், ரதத்தைக் கொடியாக உடையவரும், ஸந்தினீசனும், வடக்குமுகமாக இருப்பவருமாக தாதாவையும்; வாயிலின் (வடக்குப் பகுதியில்) வடக்கில் கந்தர்வஸ்தானத்தில் கிளியைப் போன்று பச்சைநிற சரீரத்தை உடையவரும், யானையை வாகனமாக உடையவரும், பாம்பைக் கொடியாக உடையவரும், ஊர்த்வாவின் பதியும், தெற்குமுகமாக இருப்பவருமாக விதாதாவையும்; வாயிலின் தெற்குப்புறம் தலைவைத்துப் படுத்தவாறும், மேல்நோக்கிய முகத்தை உடையவரும், கருத்த சரீரத்தை உடையவரும், காளையை வாஹனமாக உடையவரும், அக்னியைக் கொடியாக உடையவரும், ப்ரீதீசனுமான புவங்க ப்ருதியை பூஜாகாலம் தவிர மற்ற நேரங்களில் தாண்டக்கூடாது. அர்ச்சனா காலங்களில் தவறாது சிரஸ் பாகத்தில் பூஜிக்கவேண்டும். அதற்குமேல் வெளுப்பான சரீரத்தை உடையவரும், குதிரையை வாஹனமாக உடையவரும், வெள்ளைநிறக் கொடியை உடையவரும், பரணியில் தோன்றியவரும், மேலே இருப்பவரும், கீழ்நோக்கிய முகமுடையவராகத் திகழ்பவருமான பதங்கனையும்; தெற்குப் பாகத்திலிருக்கும் கதவில் தங்கநிறம் போன்றவரும்,

Koviloor Digital Library

யானையை வாஹனமாக உடையவரும், காளையைக் கொடியாக உடையவரும், பலத்தின் அதிபதியுமான பதிரனையும்; வடக்குப் பாகத்திலிருக்கும் கதவில் தங்கநிறம் போன்றவரும், ரதத்தை வாஹனமாக உடையவரும், சங்கைக் கொடியாக உடையவரும், தரணியின் அதிபதியும், தலையைமேலே உடையவராகத் திகழ்பவருமான வருணன் மற்றும் முன்சொன்ன தேவதைகளும் ஆகிய அனைவருக்கும் அவரவர்களுடைய பெயரின் முதல் எழுத்தை பீஜாக்ஷரமாக உடையவர்களாகவும், சங்க த்வனியுடன் கூடியவர்களாகவும், ஐப்பசி மாதத்தில், ஹஸ்த நக்ஷத்திரத்தில் தோன்றியவர் களாகவும் அர்ச்சிக்கவேண்டும்.

।। धात्रादीनां चतुर्नामानि ।।

धातारं डम्बिनं सनिलं गन्धर्वं विधातारं कीनाशं मूरुण्डं न्यर्णं (भृतिं) भुवङ्गं उत्सङ्गं [1]भृतिं, पीठं पतङ्गं उत्करं अपदानं कपर्दिनं पतिरं बल्लितं मध्यस्थं वङ्खिनं वरुणं तेजिनं दंसिनं तरस्विनं इति कवाटं यत्रास्ति तत्रार्चयेत् ।।

---

1. भृतिं - புவங்கனின் சதுர்நாமாக்களில் மூன்றாவது நாமாவளியாகக் கொள்ளவேண்டும். ஆனால் இன்றுவரை அச்சாகியுள்ள நூல்கள் அனைத்திலும் 'விதாதாரத்தின்' சதுர்நாமாக்களோடு ஐந்தாவதாக உள்ளது. தற்போது சரியான இடத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஆதாரம்:- ஸ்ரீவைகானஸ பகவத் சாஸ்த்ர ஆராய்ச்சி நூலகம், Plot. No. 8, A. S. M. Colony, மருத்துவக் கல்லூரி (அஞ்சல்), தஞ்சாவூர்-613 004. சுவடி எண். 106-இல் 104-வது ஏடு பின்புறத்தில் தெளிவாக உள்ளது. இந்தச் சுவடியை ஸ்ரீவில்லிபுத்தூர் வாஸு பட்டர் என்பவர் அன்பளிப்பாக மேற்படி நூலகத்திற்கு அளித்துள்ளார்.

Koviloor Digital Library

தாதாரம் டம்பினம் ஸனிலம் கந்தர்வம்; விதாதாரம் கீனாசம் மூருண்டம் ந்யர்ணம்; புவங்கம் உத்ஸங்கம் ப்ருதிம், பீடம்; பதங்கம் உத்கரம் அபதாநம் கபர்தினம்; பதிரம் பல்லிதம் மத்யஸ்தம் வங்க்கிநம்; வருணம் தேஜினம் தம்ஸிநம் தரஸ்வினம் இதி கவாடம் யத்ராஸ்தி தத்ரார்சயேத்.

தாதா முதலானவர்களுடைய சதுர்நாமாங்கள்

தாதாராய நம:, டம்பினாய நம:, ஸனிலாய நம:, கந்தர்வாய நம:; விதாதாராய நம:, கீனாசாய நம:, மூருண்டாய நம:, ந்யர்ணாய நம:; புவங்காய நம:, உத்ஸங்காய நம:, ப்ருதவே நம:, பீடாய நம:, பதங்காய நம:, உத்கராய நம:, அபதானாய நம:, கபர்தினே நம:, பதிராய நம:, பல்லிதாய நம:, மத்யஸ்தாய நம:, வங்க்கினேய நம:, வருணாய நம:, தேஜினே நம:, தம்ஸினே நம:, தரஸ்வினே நம: என்பதாக ("தாதாரம், விதாதாரம், புவங்கம், பதங்கம், பதிரம் வருணம்") இந்த ஆறு தேவதைகளையும் எங்கெங்கெல்லாம் நுழைவாயில் உள்ளதோ அங்கெங்கெல்லாம் அர்ச்சிக்க வேண்டும்.

।। आलयबाह्ये न्यक्षादिदेवाः ।।

आलयस्य बहिः पार्श्वे प्राग्द्वारमध्ये प्राङ्मुखो दूर्वाङ्कुरवर्णो हेमाम्बरधरः प्रज्ञाप्तीशो दण्डपाणिः श्येनध्वजवाहनो रोहिणीजो न्यक्षाद्यक्षरबीजो, "न्यक्षं, दधीत्यकं, पीवरं, आर्यकं" इति ।।

॥ ஆலயபாஹ்யே ந்யக்ஷாதி தேவா: ॥

ஆலயஸ்ய பஹி: பார்ச்வே ப்ராக்த்வாரமத்யே ப்ராங்முகோ தூர்வாங்குரவர்ணோ ஹேமாம்பரதர: ப்ரக்ஞாப்தீசோ தண்டபாணி: ச்யேனத்வஜவாஹனோ ரோஹிணிஜோ ந்யக்ஷாத்யக்ஷரபீஜோ, "ந்யக்ஷம், ததீத்யகம், பீவரம், ஆர்யகம்" இதி.

பொருள் : ஆலயத்திற்கு வெளியில் கிழக்கு வாயிலுக்கு நடுவில் கிழக்குமுகமாக இருப்பவரும், வெளிர்பச்சை (அருகம்புல் முளைபோன்ற) நிறமுடைய சரீரத்தை உடையவரும், தங்கநிறம் போன்ற ஆடை அணிந்தவரும், ப்ரக்ஞாப்தீசனும், தண்டத்தைக் கையிலுடையவரும், கழுகைக் கொடியாகவும், வாகனமாகவும் உடையவரும், ரோஹிணி நக்ஷத்திரத்தில் தோன்றியவரும், தனது பெயரின் முதல் எழுத்தையே பீஜாக்ஷரமாகக் கொண்டவருமான ந்யக்ஷனை, "ந்யக்ஷாய நம:, தத்த்யகாய நம:, பீவராய நம:, ஆர்யகாய நம:" என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

दक्षिणे दक्षिणामुखो रक्तवर्णस्सिताम्बरधरः उत्साधिनीपतिः दण्डधरः पिण्डिपालध्वजो हयवाहनः मखोद्भवः स्रुक्ध्वजो विश्वाद्यक्षरबीजो विवस्वान्, "विवस्वन्तं, भरतं, विश्वकर्माणं, मरीचिमन्तं" इति ।।

தக்ஷிணே தக்ஷிணாமுகோ ரக்தவர்ணஸ்ஸி-தாம்பரதர: உத்ஸாதினீபதி: தண்டதர: பிண்டிபாலத்வஜோ ஹயவாஹன: மகோத்பவ: ஸ்ருக்த்வஜோ விச்வாத்யக்ஷர பீஜோ விவஸ்வான், "விவஸ்வந்தம், பரதம், விச்வகர்மாணம், மரீசிமந்தம்" இதி.

பொருள் : தெற்கில், தெற்குமுகமாக சிவந்த நிறமுடையவராகவும், வெளுப்பான ஆடை அணிந்தவரும், உத்ஸாதினியின் பதியும், தண்டத்தைத் தரித்திருப்பவரும், பிண்டிபாலத்வஜரும், குதிரையை வாஹனமாக உடையவரும், மக நக்ஷத்திரத்தில் தோன்றியவரும், ஸ்ருக்கைக் கொடியாக உடையவரும், "வி" என்ற எழுத்தை பீஜாக்ஷரமாக உடையவருமான விவஸ்வானை "விவஸ்வதே நம:, பரதாய நம:, விச்வகர்மணே நம:, மரீசிமதே நம:" என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

Koviloor Digital Library

पश्चिमे पश्चिमाभिमुखो शरभान्त ध्वनिः पुष्पाम्बरधरः कपोतवाहनः धूमकेतुः ज्वालायुधो विशाखाजो मेघरवो नामात् अक्षरबीजो मित्रो, "मित्रं, त्वरं, राजिष्वन्तं, रमणकं" इति ।।

பச்சிமே பச்சிமாபிமுகோ சரபாந்த த்வனி: புஷ்பாம்பரதர: கபோதவாஹன: தூமகேது: ஜ்வாலாயுதோ விசாகாஜோ மேகரவோ நாமாத்யக்ஷரபீஜோ மித்ரோ, "மித்ரம், த்வரம், ராஜிஷ்வந்தம், ரமணகம்" இதி.

பொருள் : மேற்கில், மேற்குமுகமாக சரபத்தின் த்வனியை உடையவரும், புஷ்பத்தை ஆடையாக உடுத்தியவரும், புறாவை வாகனமாக உடையவரும், புகையைக் கொடியாக உடையவரும், ஜ்வாலையை ஆயுதமாக உடையவரும், விசாக நக்ஷத்திரத்தில் தோன்றியவரும், மேகத்வனியுடன் கூடியவரும், தனது பெயரின் முதல் எழுத்தைப் பீஜாக்ஷரமாக உடைய வருமான மித்ரனை, "மித்ராய நம:, த்வராய நம:, ராஜிஷ்வதே நம:, ரமணகாய நம:" என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

उत्तरे उत्तराभिमुखो हेमाभः पुष्पाम्बरधरः मृगवाहनः महिषद्वजो मूलाजो दण्डपाणिः वाणीपतिः वेदरवः क्षत्ताऽऽद्यक्षरबीजः क्षत्ता, "क्षत्तारं, महीधरं, उर्वरोहं, शेवधिं" इति ।।

உத்தரே உத்தராபிமுகோ ஹேமாப: புஷ்பாம்பரதர: ம்ருகவாஹன: மஹிஷத்வஜோ மூலாஜோ தண்டபாணி: வாணிபதி: வேதரவ: க்ஷத்தாऽऽத்யக்ஷரபீஜ: க்ஷத்தா, "க்ஷத்தாரம், மஹீதரம், உர்வரோஹம், சேவதிம்" இதி.

பொருள் : வடக்கில், வடக்குமுகமாக தங்கம்போன்ற நிறமுடையவரும், புஷ்பத்தை ஆடையாக உடுத்தியவரும், மானை வாஹனமாக உடையவரும், எருமையைக் கொடியாக

Koviloor Digital Library

உடையவரும், மூல நக்ஷத்திரத்தில் தோன்றியவரும், தண்டத்தைத் தரித்திருப்பவரும், வாணியின் பதியும், வேத சப்தத்தோடு கூடியவரும், தனது பெயரின் முதல் எழுத்தையே பீஜாக்ஷரமாக உடையவருமான க்ஷத்தாவை, "க்ஷத்தாராய நம:, மஹீதராய நம:, உர்வரோஹாய நம:, சேவதயே நம:" என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

।। प्रथमद्वार देवता ।।

प्रथमद्वार दक्षिणे श्वेतवर्णः शुक्लाम्बरधरः स्रुक् ध्वजः गजवाहनो रोहिणीजः सन्ध्यानाथः शङ्खरवः यन्त्रिकायुधः मकाराद्यक्षर बीजो मणिको, "मणिकं, महाबलं, विमलं, द्वारपालकं" इति ।।

॥ ப்ரதமத்வார தேவதா ॥

ப்ரதமத்வார தக்ஷிணே ச்வேதவர்ண: சுக்லாம்பரதர: ஸ்ருக்த்வஜ: கஜவாஹனோ ரோஹிணீஜ: ஸந்த்யாநாத: சங்கரவ: யந்த்ரிகாயுத: மகாராத்யக்ஷர பீஜோ மணிகோ, "மணிகம், மஹாபலம், விமலம், த்வாரபாலகம்" இதி.

முதல் வாயிலின் இரு த்வாரதேவதைகள்

பொருள் : முதல் வாயிலின் தெற்குப்புறத்தில் வெளுப்பான நிறமுடையவரும், தூய (வெளுப்பான) வஸ்த்ரம் தரித்தவரும், ஸ்ருக்கைக் கொடியாக உடையவரும், யானையை வாஹனமாக உடையவரும், ரோஹிணீ நக்ஷத்திரத்தில் பிறந்தவரும், ஸந்த்யாவின் கணவனும், சங்கத்வனியுடன் கூடியவரும், சாவியை ஆயுதமாக உடையவரும், மகாரத்தை பீஜாக்ஷரமாக உடையவருமான மணிகனை, "மணிகாய நம:, மஹாபலாய நம;, விமலாய நம:, த்வாரபாலகாய நம:" என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

Koviloor Digital Library

वामे तस्यपत्नी कनकाभा सिताम्बरधरा पुष्पहस्ता सौम्यजा शुकस्वररवा सकारबीजा सन्ध्या, "सन्ध्यां, प्रभावतीं, ज्योतिरूपां, दृढव्रतां" इति ।।

வாமே தஸ்யபத்னீ கனகாபா ஸிதாம்பரதரா புஷ்பஹஸ்தா ஸௌம்யஜா சுகஸ்வரரவா ஸகாரபீஜா ஸந்த்யா, "ஸந்த்யாம், ப்ரபாவதீம், ஜ்யோதிருபாம், த்ருடவ்ரதாம்" இதி.

பொருள் : வடக்கில் மணிகனுடைய பத்னீ - தங்கநிறம் போன்றவளும், வெளுப்பான ஆடை அணிந்தவளும், புஷ்பத்தைக் கையில் வைத்திருப்பவளும், ம்ருகசீர்ஷ நக்ஷத்திரத்தில் தோன்றியவளும், சப்தத்தைப் போன்ற குரலுடையவளும், ஸகாரத்தைப் பீஜாக்ஷரமாக உடைய வளுமான ஸந்த்யாவை. 'சந்த்யாயை நம:, ப்ரபாவத்யை நம:, ஜ்யோதிருபாயை நம:, த்ருடவ்ரதாயை நம:" என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

।। मुखमण्डपद्वार देवता ।।

मुखमण्डप द्वारदक्षिणे स्फटिकाभो हेमाम्बरधरो रुरुवाहनः कुशध्वजो विधिजो दिव्येशो नानाद्यक्षरबीजो दण्डधरः चतुर्भुजो वेदरवो विखना, "विखनसं, तपोयुक्तं, सिद्धिदं, सर्वदर्शनं" इति ।

॥ முகமண்டபத்வார தேவதா ॥

முகமண்டப த்வாரதக்ஷிணே ஸ்படிகாபோ ஹேமாம்பரதரோ ருருவாஹன: குசத்வஜோ விதிஜோ திவ்யேசோ நாமாத்யக்ஷரபீஜோ தண்டதர: சதுர்புஜோ வேதரவோ விகனா, "விகனஸம், தபோயுக்தம், ஸித்திதம், ஸர்வதர்சனம்" இதி.

Koviloor Digital Library

முகமண்டப வாயிலின் இரு த்வாரதேவதைகள்

பொருள்: முகமண்டப வாயிலின்தெற்குப்புறத்தில், ஸ்படிகம் போன்ற சரீரத்தையுடையவரும், தங்கநிறமுடைய வஸ்த்ரத்தைத் தரித்தவரும், மானை வாஹனமாக உடையவரும், தர்பையைக் (குசம்) கொடியாக உடையவரும், ச்ரவண நக்ஷத்திரத்தில் தோன்றியவரும், திவ்யேசனும், தனது பெயரின் முதலெழுத்தை பீஜாக்ஷரமாகக் கொண்டவரும், தண்டத்தைத் தரித்திருப்பவரும், நான்கு கைகளுடையவரும், வேதத்வனியுடையவருமான விகனஸரை, 'விகனஸே நம:, தபோயுக்தாய நம:, ஸித்திதாய நம:, ஸர்வதர்சனாய நம:' என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

वामे रुरुवाहनः कूर्चध्वजः ताराद्यक्षरबीजः सन्धिनीशो वेदरवो दण्डधरो द्विभुजः पुष्यसंभवः तापसः, "तापसं, सिद्धिराजं, सर्वदोषविवर्जितं, सहस्राश्वमेधिनं" इति ।।

வாமே ருருவாஹன: கூர்ச்சத்வஜ: தாராத்யக்ஷரபீஜ: ஸந்தினீசோ வேதரவோ தண்டதரோ த்விபுஜ: புஷ்யஸம்பவ: தாபஸ:, "தாபஸம், ஸித்திராஜம், ஸர்வதோஷவிவர்ஜிதம், ஸஹஸ்ராச்வமேதினம்" இதி.

பொருள் : வடக்கில் மானை வாஹனமாக உடையவரும், கூர்ச்சத்தைக் கொடியாக உடையவரும், தாரா என்ற பதத்தின் முதல் எழுத்தைப் பீஜாக்ஷரமாக உடையவரும், ஸந்தினியின் தலைவனும், வேதத்வனியை உடையவரும், தண்டத்தை தரித்திருப்பவரும், இரண்டு கைகளுடையவரும், புஷ்ய நக்ஷத்திரத்தில் தோன்றியவருமான தாபஸனை, 'தாபஸாய நம:, ஸித்திராஜாய நம:, ஸர்வதோஷவிவர்ஜிதாய நம:, ஸஹஸ்ராச்வமேதினே நம:' என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

Koviloor Digital Library

।। प्रथमावरण द्वारदेवते ।।

प्रथमावरण द्वारदक्षिणे अग्निवर्णः शुक्लाम्बरधरः कूर्मवाहनः शरध्वजः संमोदिनीपतिः नामाद्यक्षरबीजः प्रोष्टपाज्जातः दण्डपाणिः सिंहरवः किष्किन्धः, " किष्किन्धं, बहुमर्दिनं, बहुसेनं, दृढव्रतं " इति ।।

॥ ப்ரதமாவரண த்வாரதேவதே ॥

ப்ரதமாவரண த்வாரதக்ஷிணே அக்னிவர்ண: சுக்லாம்பரதர: கூர்மவாஹன: சரத்வஜ: ஸம்மோதினீபதி: நாமாத்யக்ஷரபீஜ: ப்ரோஷ்டபாஜ்ஜாத: தண்டபாணி: ஸிம்ஹரவ: கிஷ்கிந்த:, "கிஷ்கிந்தம், பஹுமர்த்தினம், பஹுஸேனம், த்ருடவ்ரதம்" இதி..

முதல் ப்ராகாரத்தினுடைய வாயிலின் இருதேவதைகள்

பொருள் : முதல் ஆவரணத்தின் வாயிலின் தென்புறம் அக்னியின் நிறமுடையவரும், வெளுப்பான ஆடை உடுத்திய வரும், ஆமையை வாஹனமாக உடையவரும், அம்பைக் கொடியாக உடையவரும், ஸம்மோதினியின் பதியும், தனது பெயரின் முதல் எழுத்தை பீஜாக்ஷரமாக உடையவரும், பூர்வப்ரோஷ்டபதா நக்ஷத்திரத்தில் பிறந்தவரும், தண்டத்தை தரித்திருப்பவரும், ஸிம்ஹ த்வனி உடையவருமான கிஷ்கிந்தனை, "கிஷ்கிந்தாய நம:, பஹுமர்த்தனாய நம:, பஹுஸேனாய நம:, த்ருடவ்ரதாய நம:" என்பதாக அர்ச்சிக்க வேண்டும்.

वामे श्वेताभो रक्ताम्बरधरः कूर्मवाहनः शरध्वजो विशोकापतिः वेणुदण्डायुधः तीर्थाद्यक्षरबीजो आर्द्राजो मेघरवः तीर्थः, "तीर्थं, उद्वाहकं, सर्वयोग्यं, उदावहं" इति ।।

Koviloor Digital Library

வாமே ச்வேதாபோ ரக்தாம்பரதர: கூர்மவாஹன: சரத்வஜோ விசோகாபதி: வேணுதண்டாயுத: தீர்தாத்யக்ஷரபீஜோ ஆர்த்ராஜோ மேகரவ: தீர்த்த:, "தீர்த்தம், உத்வாஹகம், ஸர்வயோக்யம், உதாவஹம்" இதி.

பொருள்: வடக்கில் வெளுப்பான சரீரத்தை உடையவரும், சிவப்புநிற ஆடை உடுத்தியவரும், ஆமையை வாஹனமாக உடையவரும், அம்பைக் கொடியாக உடையவரும், விசோகாவின் பதியும், மூங்கில் குச்சியை ஆயுதமாக உடையவரும், தனது பெயரின் முதலெழுத்தை பீஜாக்ஷரமாக உடையவரும், திருவாதிரை நக்ஷத்திரத்தில் தோன்றியவரும், மேகத்வனியை உடையவருமான தீர்த்தனை, "தீர்த்தாய நம:, உத்வாஹகாய நம:, ஸர்வயோக்யாய நம:, உதாவஹாய நம:" என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

।। द्वितीयावरण द्वारदेवते ।।

द्वितीयावरण द्वारदक्षिणे च उत्तराभिमुखः प्रवालाभः एकदन्तः कण्ठादूर्ध्वं गजाकारो वामनः कुशध्वजो वेणुकङ्कत वाहनः शङ्खरवः चतुर्भुजः कदलीफलहस्तः आर्द्रापतिः श्रविष्टाजो वक्रतुण्डः, "वक्रतुण्डं, एकदंष्ट्रं, विकटं, विनायकं" इति ।।

த்விதீயாவரண த்வார தேவதே

த்விதீயாவரண த்வாரதக்ஷிணே ச உத்தராபிமுக: ப்ரவாலாப: ஏகதந்த: கண்ட்டாதூர்த்வம் கஜாகாரோ வாமன: குசத்வஜோ வேணுகங்கத வாஹன: சங்கரவ: சதுர்புஜ: கதளீபலஹஸ்த: ஆர்த்ராபதி: ச்ரவிஷ்டாஜோ வக்ரதுண்ட:, "வக்ரதுண்டம், ஏகதம்ஷ்ட்ரம், விகடம், விநாயகம்" இதி.

Koviloor Digital Library

இரண்டாவது ஆவரணத்தினுடைய வாயிலின் இருதேவதைகள்

பொருள்: வடக்குமுகமாக பவளம் போன்ற நிறமுடையவரும், ஏகதந்தனும், கழுத்துக்குமேல் யானையின் உருவத்தை உடையவனும், குள்ளமானவனும், தர்பத்தை (कुशम्)க் கொடியாக உடையவனும், மூஞ்சூறு வாகனனும், சங்கொலிக்கொப்பான குரலை உடையவனும், நான்கு கைகள் உடையவனும், வாழைப்பழத்தைக் கையிலுடையவனும், ஆருத்ராவின் பதியும், ச்ரவிஷ்டா நக்ஷத்திரத்தில் தோன்றியவனுமான வக்ரதுண்டனை, 'வக்ரதுண்டாய நம:, ஏகதம்ஷ்ட்ராய நம:, விகடாய நம:, விநாயகாய நம:' என்பதாக அர்ச்சிக்க வேண்டும்.

उत्तरे शङ्खवर्णो नीलाम्बरधरः किरिटी सिंहासनो समासीनः द्विभुजो जवनीपतिः सार्पजो हस्ततालरवः शेषाद्यक्षरबीजः सागरध्वज वाहनो नवभिः सप्तभिः पञ्चभिः वा पृष्टोद्गतैः फणैः समाच्छादित मौलिः नागराजः, "नागराजं, सहस्रशीर्षं, अनन्तं, शेषं" इति ।।

உத்தரே சங்கவர்ணோ நீலாம்பரதர: கிரிட ஸிம்ஹாஸனோ ஸமாஸீன: த்விபுஜோ ஜவனீபதி: ஸார்பஜோ ஹஸ்ததாளரவ: சேஷாத்யக்ஷரபீஜ: ஸாகரத்வஜ வாஹனோ நவபி: ஸப்தபி: பஞ்சபி: வா ப்ருஷ்டோத்கதை: பணை: ஸமாச்சாதித மௌலி: நாகராஜ:, "நாகராஜம், ஸஹஸ்ரசீர்ஷம், அனந்தம், சேஷம்" இதி.

பொருள் : வடக்கில் வெளுப்பான நிறமுடையவரும், கருப்புநிற ஆடை அணிந்தவரும், கிரீடம் அணிந்த வரும், ஸிம்ஹாஸனத்தில் அமர்ந்திருப்பவரும், இரு கைகளை உடையவரும், ஜவனீ பதியும், ஆயில்ய நக்ஷத்திரத்தில் பிறந்தவரும், கையொளிக்கு ஒப்பான சப்தத்தை உடையவரும், தனது பெயரின் முதல் எழுத்தை பீஜாக்ஷரமாக உடையவரும்,

Koviloor Digital Library

ஸமுத்ரத்தைக் கொடியாகவும், வாஹனமாகவும் உடையவரும், ஒன்பது, ஏழு, ஐந்து இவைகளில் ஏதாவது ஒரு எண்ணிக்கையில் தலையின்மேல் (குடைபோன்று) மறைத்தவாறு அமைந்திருக்கும் பாம்பின் படத்தோடு கூடியவருமான நாகராஜனை, 'நாகராஜாய நம:, ஸஹஸ்ரசீர்ஷாய நம:, அனந்தாய நம:, சேஷாய நம:' என்பதாக அர்ச்சிக்க வேண்டும்.

।। तृतीयावरण द्वार देवते ।।

तृतीयावरणे द्वारदक्षिणे शङ्खाभो नीलाम्भरधरो भूताकारः शुद्धापतिः पद्मद्वजवाहनो हस्ताभ्यां शङ्खं दधानो वारुणः शङ्खादि बीजः शङ्खरवः शङ्खनिधिः, "शङ्खनिधिं, वरं, धनदं, मौक्तिकोद्भवं" इति ।।

॥ த்ருதீயாவரண த்வார தேவதே ॥

த்ருதீயாவரணே த்வாரதக்ஷிணே சங்காபோ நீலாம்பரதரோ பூதாகார: சுத்தாபதி: பத்மத்வஜவாஹனோ ஹஸ்தாப்யாம் சங்கம் ததானோ வாருண: சங்காதி பீஜ: சங்கரவ: சங்கநிதி:, "சங்கநிதிம், வரம், தனதம், மௌக்திகோத்பவம்" இதி.

மூன்றாவது ஆவரணத்தினுடைய வாயிலின் இரு தேவதைகள்

பொருள் : மூன்றாவது ஆவரணத்தின் வாயிலின் தெற்கில் சங்கு போன்ற வெளுத்த சரீரத்தை உடையவரும், கருத்த ஆடை அணிந்தவரும், பருத்த சரீரத்தை உடையவரும், சுத்தாவின் பதியும், பத்மத்தை கொடியாகவும்-வாஹனமாகவும் உடையவரும், கைகளில் சங்கைத் தரித்திருப்பவரும், வாருணனும், தனது பெயரின் முதல் எழுத்தை பீஜாக்ஷரமாக

Koviloor Digital Library

உடையவருமான சங்கநிதியை, "சங்கநிதயே நம:, வராய நம:, தனதாய நம:, மௌக்திகோத்பவாய நம:" என்பதாக அர்ச்சிக்க வேண்டும்.

वामे रक्ताभो जपाम्बरधरो विशुद्धेशो हस्ताभ्यां पद्मं दधानः पद्मध्वजवाहनः प्रोष्टपाज्जातः सिंहनादरवः पद्माद्यक्षरबीजः पद्मनिधिः, "पद्मनिधिं, वरं, रक्ताभं, भूतनायकं" इति ।।

வாமே ரக்தாபோ ஜபாம்பரதரோ விசுத்தேசோ ஹஸ்தாப்யாம் பத்மம் ததான: பத்மத்வஜவாஹன: ப்ரோஷ்டபாஜ்ஜாத: ஸிம்ஹநாதரவ: பத்மாத்யக்ஷரபீஜ: பத்மநிதி:, "பத்மநிதிம், வரம், ரக்தாபம், பூதநாயகம்" இதி.

பொருள் : வடக்கில் சிவந்த சரீரத்தை உடையவரும், செம்பருத்தி புஷ்பம் போன்று சிவந்த ஆடையை உடுத்தி இருப்பவரும், விசுத்தேசனும், கைகளில் தாமரையைத் தாங்கியிருப்பவரும், பத்மத்தைக் கொடியாகவும், வாஹன மாகவும் உடையவரும், ப்ரோஷ்டபதா நக்ஷத்திரத்தில் தோன்றியவரும், சிம்மக்குரலுடையவரும், தனது பெயரின் முதலெழுத்தைப் பீஜாக்ஷரமாக உடையவருமான பத்மநிதியை, "பத்மநிதயே நம:, வராய நம:, ரக்தாபாய நம:, பூதநாயகாய நம:" என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

।। चतुर्थावरणद्वार देवते ।।

चतुर्थावरणे द्वारदक्षिणे, रक्ताभः, श्वेताम्बरधरो, नागचूलिक मस्तकः, उद्देश्यकरो, भामिनीशः, तुरगवाहनो, अहिध्वजो, भेरीरवः, तुकारबीजो, हस्तजः, तुहिणः, "तुहिणं, दैत्यराजं, विष्णुभक्तं, गदाधरं" इति ।।

Koviloor Digital Library

॥ சதுர்தாவரணத்வார தேவதே ॥

சதுர்த்தாவரணே த்வாரதக்ஷிணே, ரக்தாப:, ச்வேதாம்பரதரோ, நாகசூலிக மஸ்தக:, உத்தேஸ்யகரோ, பாமினீச:, துரகவாஹனோ, அஹித்வஜோ, பேரீரவ:, துகாரபீஜோ, ஹஸ்தஜ:, துஹிண:, "துஹிணம், தைத்யராஜம், விஷ்ணுபக்தம், கதாதரம்" இதி.

நான்காவது ஆவரணத்தினுடைய வாயிலின் இரு தேவதைகள்

பொருள் : நான்காவது ஆவரணத்தினுடைய வாயிலின் தெற்குப்புறத்தில் சிவந்த சரீரத்தை உடையவரும், வெளுத்த ஆடையை அணிந்தவரும், நாகத்தைக் கிரீடமாக உடையவரும், உத்தேச்ய* கரத்தை உடையவரும், பாமினியின் கணவனும், குதிரையை வாஹனமாக உடையவரும், பாம்பைக் கொடியாக உடையவரும், பேரீ சப்தத்தோடு கூடியவரும், "து" என்ற எழுத்தை பீஜாக்ஷரமாக உடையவரும், ஹஸ்தா நக்ஷத்திரத்தில் தோன்றியவருமான துஹிணனை, "துஹிணாய நம:, தைத்யராஜாய நம:, விஷ்ணுபக்தாய நம:, கதாதராய நம:" என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

वामे श्यामाभो रक्ताम्बरधरो नाग चूलिकमस्तकः उद्देश्यकरः सुधापतिः व्याघ्रवाहनः सर्पध्वजो झल्लरीरवो हस्तजो बल्यादिबीजो बलिन्दो, "दैतेयं, महावीर्यं, बलिन्दं, शूलपाणिं" इति ।।

வாமே ச்யாமாபோ ரக்தாம்பரதரோ நாக சூலிகமஸ்தக: உத்தேச்யகர: ஸுதாபதி: வ்யாக்ரவாஹன: ஸர்ப்பத்வஜோ ஜல்லரீரவோ ஹஸ்தஜோ பல்யாதிபீஜோ பலிந்தோ, "தைதேயம், மஹாவீர்யம், பலிந்தம், சூலபாணிம்" இதி.

---

* ஆள்காட்டி விரலைமட்டும் நீட்டி, மற்ற விரல்களை மடித்திருக்கும் நிலைக்கு உத்தேச்யகரம் என்று பெயர்.

Koviloor Digital Library

வடக்கில் நீலநிறமுடைய சரீரத்தை உடையவரும். சிவப்புநிற ஆடை உடுத்தியவரும், நாகத்தைக் கிரீடமாக உடையவரும், உத்தேச்ய கரத்தை உடையவரும், ஸுதாபதியும், புலியை வாகனமாக உடையவரும், பாம்பைக் கொடியாக உடையவரும், ஜல்லரீ சப்தத்தோடு கூடியவரும், ஹஸ்தா நக்ஷத்திரத்தில் தோன்றியவரும், 'ப' என்ற எழுத்தை பீஜாக்ஷரமாக உடையவருமான பலிந்தனை, "தைதேயாய நம:, மஹாவீர்யாய நம:, பலிந்தாய நம:, சூலபாணயே நம:" என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

।। पञ्चमावरणद्वारदेवते ।।

पञ्चमावरणे द्वारदक्षिणे रक्ताभो नीलाम्बरधरो शिरसि खड्गधरो वायुवाहनो अनलध्वजो घोररवो स्वातीजो बलेशः खकारबीजो नन्दको, " नन्दकं, खड्गं, पापहरं, दैत्यनाशनं " इति ।।

॥ பஞ்சமாவரணத்வாரதேவதே ॥

பஞ்சமாவரணே த்வாரதக்ஷிணே ரக்தாபோ நீலாம்பரதரோ சிரஸி கட்கதரோ வாயுவாஹனோ அனலத்வஜோ கோரரவோ ஸ்வாதீஜோ பலேச: ககாரபீஜோ நந்தகோ, "நந்தகம், கட்கம், பாபஹரம், தைத்யநாசனம்" இதி.

ஐந்தாவது ஆவரணத்தினுடைய வாயிலின் இருதேவதைகள்

பொருள் : ஐந்தாவது ஆவரணத்தினுடைய வாயிலின் தெற்குப் பாகத்தில் சிவந்த சரீரத்தை உடையவரும், கருப்பு ஆடை அணிந்தவரும், தலையில் கத்தியைத் தரித்திருப்பவரும், வாயுவை வாஹனமாக உடையவரும்,

Koviloor Digital Library

(நெருப்பை) அக்னியைக் கொடியாகக் கொண்டவரும், கோரமான சப்தத்தோடு கூடியவரும், ஸ்வாதீ நக்ஷத்திரத்தில் தோன்றியவரும், பலேசனும், "க" என்ற எழுத்தை பீஜாக்ஷரமாக உடையவருமான நந்தகனை, 'நந்தகாய நம:, கட்காய நம:, பாபஹராய நம:, தைத்யநாசாய நம:' என்பதாக அர்ச்சிக்க வேண்டும்.

वामे पञ्चवर्णैर्युक्तं श्वेताम्बरधरं नपुंसकं शिरसि चापधरं मेघवाहनं शरध्वजं महानादरवं विशाखजं शाकारबीजं शाङ्र्गः, "शाङ्र्गं, धनुर्वरं, शत्रुहन्तारं, वरायुधं" इति ।।

வாமே பஞ்சவர்ணைர்யுக்தம் ச்வேதாம்பரதரம் நபும்ஸகம் சிரஸி சாபதரம் மேகவாஹனம் சரத்வஜம் மஹ்ாநாதரவம் விசாகஜம் சாகாரபீஜம் சார்ங்க:, "சார்ங்கம், தனுர்வரம், சத்ருஹந்தாரம், வராயுதம்" இதி.

பொருள் : வடக்கில் ஐந்து வர்ணங்களுடன் கூடியவரும், வெண்மையான ஆடை அணிந்தவரும், நபும்ஸகரும், தலையில் வில்லை அணிந்தவரும், மேகத்தை வாஹனமாக உடையவரும், அம்பைக் கொடியாக உடையவரும்,நல்ல குரல்வளமுடையவரும், விசாக நக்ஷத்திரத்தில் தோன்றியவரும் சகாரத்தை பீஜாக்ஷரமாக உடையவருமான சார்ங்கனை, 'சார்ங்காய நம:, தனுர்வராய நம:, சத்ருஹந்த்ரே நம:, வராயுதாய நம:' என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

।। षष्ठावरणद्वारदेवते ।।

षष्ठावरणे द्वारदक्षिणे श्वेताभो नीलवासाश्शिरसी शङ्खभृत् दण्डायुधो नन्देशो रोहिणीजो वियद्गतिध्वजो हंसवाहनः कण्डशब्दरवो नामाद्यक्षरबीजः शङ्खचूली, "शङ्खचूलिनं, वृक्षदण्डं, श्वेताभं, घोररूपिणं" इति ।।

Koviloor Digital Library

॥ ஷஷ்டாவரணத்வாரதேவதே ॥

ஷஷ்டாவரணே த்வாரதக்ஷிணே ச்வேதாபோ நீலவாஸாச்சிரஸீ சங்கபருத் தண்டாயுதோ நந்தேசோ ரோஹிணீஜோ வியத்கதி த்வஜோ ஹம்ஸவாஹன: கண்டசப்தரவோ நாமாத்யக்ஷரபீஜ: சங்கசூலி, "சங்க-சூலினம், வ்ருக்ஷதண்டம், ச்வேதாபம், கோரரூபிணம்" இதி.

ஆறாவது ஆவரணத்தினுடைய வாயிலின் இருதேவதைகள்

பொருள் : ஆறாவது ஆவரணத்தின் வாயிலின் தெற்குப் பக்கத்தில் வெண்மையான சரீரத்தை உடையவரும், கருப்பு ஆடை அணிந்தவரும், சிரஸில் சங்கை வைத்திருப்பவரும், தண்டத்தை ஆயுதமாக உடையவரும், நந்தேசனும், ரோஹிணீ நக்ஷத்திரத்தில் தோன்றியவரும், அன்னப் பறவையைக் கொடியாக உடையவரும், அன்னத்தை வாகனமாக உடையவரும், கடுமையான குரலுடையவரும், தனது பெயரின் முதலெழுத்தை பீஜாக்ஷரமாக உடையவருமான சங்கசூலியை, 'சங்கசூலினே நம:, வ்ருக்ஷதண்டாய நம:, ச்வேதாபாய நம:, கோரரூபிணே நம:' என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

वामे रक्ताभः श्वेताम्बरधरः शिरसि चक्रधरः पाशदण्डभृत् मेघनादरवो धूमकेतुः तुष्टीशः प्रवृत्तवाहनः चकारबीजः चक्रचूली, "चक्रचूलिनं, महानादं, उग्रतापं, भयानकं" इति ।।

வாமே ரக்தாப: ச்வேதாம்பரதர: சிரஸி சக்ரதர: பாசதண்டப்ருத் மேகநாதரவோ தூமகேது: துஷ்டீச: ப்ரவ்ருத்தவாஹன: சகாரபீஜ: சக்ரசூலீ, "சக்ரசூலினம், மஹாநாதம், உக்ரதாபம், பயாநகம்" இதி.

பொருள்: வடக்கில் சிவந்த சரீரத்தை உடையவரும், வெண்மையான ஆடை அணிந்தவரும், சிரஸில் சக்ரம் தரித்தவரும், பாசம், தண்டம் இரண்டையும் கொண்டவரும்,

Koviloor Digital Library

மேகத்வனிக்கு ஈடான குரலுடையவரும், தூமத்தைக் கொடியாக உடையவரும், துஷ்டியின் ஈசனும், உருண்டை வடிவத்தை வாகனமாக உடையவரும், சகாரத்தைப் பீஜாக்ஷரமாக உடையவருமான சக்ரசூலியை, "சக்ரசூலினே நம:, மஹாநாதாய நம:, உக்ரதாபாய நம:, பயானகாய நம:" என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

।। सप्तमावरण देवते ।।

सप्तमावरणे द्वारदक्षिणे हेमाभो रक्तवस्त्रधरः चतुर्भुजः उद्देश्य दण्डधरः दक्षिणहस्तः अपसव्यकट्यवलम्बित वामहस्तः उग्रवेग-समन्वितो दंष्ट्राभ्यां युक्तः किञ्चिद्वारं समीक्ष्यस्तिथः प्रियापतिः सिह्मवाहनो मेघरवो धूमकेतुः मूलोद्भवः नामाद्यक्षरबीजः चण्डः, "चण्डं, उग्रं, भयानकं, द्वारपालकं" इति ।।

॥ ஸப்தமாவரண தேவதே ॥

ஸப்தமாவரணே த்வாரதக்ஷிணே ஹேமாபோ ரக்தவஸ்த்ரதர: சதுர்புஜ: உத்தேச்ய தண்டதர: தக்ஷிண-ஹஸ்த: அபஸவ்யகட்யவலம்பித வாமஹஸ்த: உக்ரவேக ஸமந்விதோ தம்ஷ்ட்ராப்யாம் யுக்த: கிஞ்சித்வாரம் ஸமீக்ஷ்யஸ்தித: ப்ரியாபதி: ஸிஹ்மவாஹனோ மேகரவோ தூமகேது: மூலோத்பவ: நாமாத்யக்ஷரபீஜ: சண்ட:, "சண்டம், உக்ரம், பயாநகம், த்வாரபாலகம்" இதி.

ஏழாவது ஆவரணத்தினுடைய வாயிலின் இருதேவதைகள்

பொருள்: ஏழாவது ஆவரணத்தினுடைய வாயிலின் தென்புறத்தில் தங்கம்போன்ற சரீரத்தை உடையவரும், சிவப்புநிற ஆடை அணிந்திருப்பவரும், நான்கு கைகள் உடையவரும், தனது வலதுகையை உத்தேச்யகரமாக

Koviloor Digital Library

உடையவரும், இடது கையினால் அப்ரதக்ஷிணமாக இடுப்பில் சுற்றியவாறு வைத்திருப்பவரும், உக்ரமாக இருப்பவரும், வேகத்துடன் கூடியவரும், கோரைப்பற்களை உடையவரும், கொஞ்சம் வாயிலை நோக்கியவாறு பார்வையை உடையவரும், ப்ரியாவின் பதியும், ஸிம்ஹத்தை வாஹனமாக உடையவரும், மேகத்வனியை உடையவரும், தூமத்தை (புகையை)க் கொடியாக உடையவரும், தனது பெயரின் முதலெழுத்தை பீஜாக்ஷரமாக உடையவருமான சண்டனை, "சண்டாய நம:, உக்ராய நம:, பயானகாய நம:, த்வாரபாலகாய நம:" என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

वामे श्यामाभः श्वेताम्बरधरः सुमुखीपतिः अन्यत्सर्वं चण्डवत् प्रचण्डः, "प्रचण्डं, भीमं, घोररूपं, द्वाराधिपं" इति ।।

வாமே ச்யாமாப: ச்வேதாம்பரதர: ஸுமுகீபதி: அந்யத்ஸர்வம் சண்டவத் ப்ரசண்ட: "ப்ரசண்டம், பீமம், கோரரூபம், த்வாராதிபம்" இதி.

பொருள் : வடக்கில் சாம்பல் நிறமுடைய சரீரத்தை உடையவரும், வெண்மையான ஆடை அணிந்தவரும், ஸுமுகியின் பதியும், சண்டனைப்போல் மற்ற அனைத்து விஷயங்களையும், உடையவருமான ப்ரசண்டனை, "ப்ரசண்டாய நம:, பீமாய நம:, கோரரூபாய நம:, த்வாராதிபதயே நம:" என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

।। विष्वक्सेन स्वरूप स्थलनिर्णयञ्च ।।

उदक् प्राकारपार्श्वे, विमानपार्श्वे वा कुबेरैशान्ययोर्मध्ये दक्षिणाभिमुखः सिंहासने समासीनोऽग्निवर्णः पीतवासः श्रीवत्सञ्च ब्रह्मसूत्रञ्च विना हरिवत् भूषणैर्युक्तो द्विभुजः पुष्पपाणिः शक्तिदण्डभृद्वा, जयापतिः श्रृङ्गकेतुः पुष्परथवाहनः

Koviloor Digital Library

पूर्वाषाडोद्भवः पुष्परवो विद्यादि बीजो विष्वक्सेनो, "विष्वक्सेनं, शान्तं, हरं, अमितं" इति ।।

॥ விஷ்வக்ஸேன ஸ்வரூப ஸ்தலநிர்ணயஞ்ச ॥

உதக் ப்ராகாரபார்ச்வே, விமானபார்ச்வே வா குபேரை-சான்யயோர்மத்யே தக்ஷிணாபிமுக: ஸிம்ஹாஸனே ஸமாஸீநோऽக்நிவர்ண: பீதவாஸ: ஸ்ரீவத்ஸஞ்ச ப்ரஹ்ம-ஸூத்ரஞ்ச வினா ஹரிவத் பூஷணைர்யுக்தோ த்விபுஜ: புஷ்பபாணி: சக்திதண்டப்ருத்வா, ஜயாபதி: ச்ருங்ககேது: புஷ்பரதவாஹன: பூர்வாஷாடோத்பவ: புஷ்பரவோ வித்யாதி பீஜோ விஷ்வக்ஸேனோ, "விஷ்வக்ஸேநம், சாந்தம், ஹரம், அமிதம்" இதி.

விஷ்வக்ஸேனருடைய ஸ்வரூபமும் அவருக்குரிய இட நிர்ணயமும்

பொருள் : வடக்கு ப்ராகாரத்திற்கு அருகிலோ, விமானத்திற்கு அருகிலோ, குபேரனுக்கும், ஈசானனுக்கும் நடுவில் தெற்குமுகமாக, ஸிம்ஹாஸனத்தில் அமர்ந்திருப் பவராகவும், அக்னியின் நிறத்தை ஒத்தவரும், மஞ்சள்நிற ஆடையணிந்தவரும், ஸ்ரீவத்ஸம், ப்ரம்மஸூத்ரம் தவிர மற்ற அனைத்துத் திருவாபரணங்களையும் அணிந்திருப் பவரும், ஓரிருகைகளால் சங்கு, சக்ரம் தரித்திருப்பவரும், மற்ற இருகைகளால் புஷ்பத்தையோ, சக்தி தண்டத் தையோ கொண்டவரும், ஜயாதிபதியும், புஷ்பக விமானத்தை வாஹனமாக உடையவரும், பூர்வாஷாடா நக்ஷத்திரத்தில் தோன்றியவரும், புஷ்ப சப்தத்தோடு கூடியவரும், தனது பெயரின் முதல் எழுத்தை பீஜாக்ஷரமாக உடையவருமான விஷ்வக்ஸேனரை, "விஷ்வக்ஸேனாய நம:, சாந்தாய நம:, ஹராய நம:, அமிதாய நம:" என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

Koviloor Digital Library

।। श्रीभूतस्थानादि ।।

प्रथमावरणस्य चतुर्भागात् त्रिभागे सोपानमध्ये वा श्वेताभो रक्ताम्बरधरः बहिर्मुखः ब्रह्मचारी दण्डायुधः सिंहध्वजवाहनः फाल्गुणे भरणी (रोहिणी) जातः कुम्भशब्दरवो भूताद्यक्षरबीजो श्रीभूतः, "श्रीभूतं, श्वेतवर्णं, वैष्णवं, मुखपालिनं" इति ।।

॥ ஸ்ரீபூதஸ்தாநாதி ॥

ப்ரதமாவரணஸ்ய சதுர்பாகாத் த்ரிபாகே ஸோபாநமத்யே வா ச்வேதாபோ ரக்தாம்பரதர: பஹிர்முக: ப்ரஹ்மசாரீ தண்டாயுத: ஸிம்ஹத்வஜவாஹன: பால்குணே பரணீ (ரோஹிணீ) ஜாத: கும்பசப்தரவோ பூதாத்யக்ஷரபீஜோ ஸ்ரீபூத:, "ஸ்ரீபூதம், ச்வேதவர்ணம், வைஷ்ணவம், முகபாலினம்" இதி.

ஸ்ரீபூதத்தினுடைய இடம்

பொருள் : முதல் ஆவரணத்தில் நான்கு பாகத்திலிருந்து மூன்றாவது பாகத்திலோ அல்லது முதல் ஆவரணத்தினுடைய படிக்கு உள்ளடங்கியவாறோ, வெளுப்பான சரீரத்தை உடைய வரும், சிவந்த ஆடை அணிந்தவரும், வெளிநோக்கியவாறு முகமுடையவரும், ப்ரம்மசாரியும், தண்டத்தை ஆயுதமாக உடையவரும், ஸிம்ஹத்தைக் கொடியாகவும்-வாஹனமாகவும், உடையவரும், பங்குனி மாத பரணீ நக்ஷத்திரத்தில் தோன்றிய வரும், கும்ப சப்தத்திற்கொப்பான குரலை உடையவரும், 'ப' என்ற எழுத்தை பீஜாக்ஷரமாக உடையவருமான ஸ்ரீபூதனை, 'ஸ்ரீபூதாய நம:, ச்வேதவர்ணாய நம:, வைஷ்ணவாய நம:, முகபாலினே நம:' என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

Koviloor Digital Library

।। गरुडस्थानादि ।।

द्वितीयावरणे हाटकाभः शुकपिञ्छाम्बरधरः झल्लरी मेखलायुधः किङ्किणीजालयुतः सर्वाभरण भूषितः उपर्युपरिच्छन्नभिः बन्धूकनिभाभिः तिसृभिः चूडाभिर्युक्तः श्यामः त्रिशीर्ष सुमुख भुजकेन कृतछन्नवीरः किरीटवान् पञ्चवर्णमिश्रितः भुजगाभ्यां युक्तः छन्दोमयः पक्षद्वययुतो गुञ्जाभनेत्रो हृदये अञ्जलि संयुक्तः अभयतो वा द्विभुजः स्वात्युद्भवः चूडध्वजो विशोकेशो वायुवाहनः तुण्डायुधः पक्षघातरवो गणाद्यक्षरबीजो गरुडो, "गरुडं, पक्षिराजं, सुवर्णं, खगाधिपं" इति ।।

॥ கருடஸ்தான்ாதி ॥

த்விதீயாவரணே ஹாடகாப: சுகபிஞ்சாம்பரதர: ஜல்லரீ மேகலாயுத: கிங்கிணீஜாலயுத: ஸர்வாபரணபூஷித: உபர்யுபரிச்சன்னபி: பந்தூகநிபாபி: திஸ்ருபி: சூடாபிர்யுக்த: ச்யாம: த்ரிசீர்ஷ ஸுமுகபுஜகேன க்ருதசன்னவீர: கிரீடவான் பஞ்சவர்ணமிச்ர: புஜகாப்யாம் யுக்த: சந்தோமய: பக்ஷத்வயயுதோ குஞ்ஜாபநேத்ரோ ஹ்ருதயே அஞ்ஜலி ஸம்யுக்த: அபயதோ வா த்விபுஜ: ஸ்வாத்யுத்பவ: சூடத்வஜோ விசோகேசோ வாயுவாஹன: துண்டாயுத: பக்ஷகாதரவோ கணாத்யக்ஷரபீஜோ கருடோ, "கருடம், பக்ஷிராஜம், ஸுவர்ணம், ககாதிபம்" இதி.

கருடனின் இருப்பிடம்

பொருள்: இரண்டாவது ஆவரணத்தில் தங்கம்போன்ற தேஜஸை உடையவரும், பச்சைநிற ஆடை அணிந்திருப்ப வரும், ஜல்லரீ, மேகலை (ஒட்யாணம்) ஆகியவைகளோடு கூடியவரும், கிங்கிணீ சப்தத்துடன் உடையவரும், எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டவரும், ஒன்றன் மேல்

Koviloor Digital Library

ஒன்றாக அமைந்து உள்ளது, பார்ப்போரை வசீகரிக்கக் கூடிய மிகவும் அழகான மூன்று சூடாமணியுடன் கூடியவரும், சாம்பல்நிறமானவரும், மூன்று தலையையுடைய நல்ல அழகான பாம்பினால் (சிரஸை- கேசபாகத்தை) மறைக்கப்பட்ட வீரனும், கிரீடம் தரித்தவரும், ஐந்து வர்ணங்கள் கலந்தவரும், பாம்புகளுடன் கூடியவரும், வேதமயமானவரும், இரண்டு இறக்கைகளை உடையவரும், வெண்மையான ஹ்ருதயம் மற்றும் கண்பாகத்தை உடைய வரும், இரண்டு கைகளையும் கூப்பியவாறோ, அபயமளிப்பது போன்றோ உடையவரும், ஸ்வாதி நக்ஷத்திரத்தில் தோன்றிய வரும், சூடாமணியைக் கொடியாக உடையவரும், விசோகனும், வாயுவை வாகனமாக உடையவரும், அலகை ஆயுதமாக உடையவரும், இறக்கைகளால் சப்தமற்றவரும், 'க' என்ற எழுத்தைப் பீஜாக்ஷரமாக உடையவருமான கருடனை, 'கருடாய நம:, பக்ஷிராஜாய நம:, ஸுவர்ணாய நம:, ககாதிபாய நம:' என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

।। चक्रस्थानादि ।।

तत्पूर्वे चक्राङ्गारवर्णो रक्ताम्बरधरः शिरसि चक्रभृत् पुष्टिकेशो धूमकेतुः प्रवृत्तवाहनः तज्जनितरवः चकारबीजो अनलजः सुदर्शनः, "सुदर्शनं, चक्रं, सहस्रविकचं, अनपायिनं" इति ।।

॥ சக்ரஸ்தாநாதி ॥

தத்பூர்வே சக்ராங்காரவர்ணோ ரக்தாம்பரதர: சிரஸி சக்ரப்ருத் புஷ்டிகேசோ தூமகேது: ப்ரவ்ருத்தவாஹன: தஜ்ஜனிதரவ: சகாரபீஜோSனலஜ: ஸுதர்சன:, "ஸுதர்சனம், சக்ரம், ஸஹஸ்ரவிகசம், அனபாயினம்" இதி.

சக்ரத்தின் இடம்

பொருள்: அதற்கு முன்பு அழகான நிறமுடையவரும், சிவப்புநிற ஆடை அணிந்தவரும், சிரஸில் சக்ரத்தைக்

Koviloor Digital Library

கொண்டவரும், புஷ்டிகேசனும், தூமத்தைக் கொடியாக உடையவரும், அதில் எழும் சப்தத்திற்கு ஒப்பான குரலை உடையவரும், "ச" என்ற எழுத்தை பீஜாக்ஷரமாக உடையவரும், க்ருத்திகா நக்ஷத்திரத் தில் தோன்றியவருமான ஸுதர்சனத்தை, "ஸுதர்சனாய நம:, சக்ராய நம:, ஸஹஸ்ரவிகசாய நம:, அனபாயினே நம:" என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

।। शङ्खस्थानादि ।।

तत्पूर्वे पाञ्चजन्यो दुग्धाभो रक्तवस्त्रधरो भूताकृतिः शिरसिशङ्खभृत् वियत्गतिध्वजो वियद्गात्रायुदो हंस वाहनः कण्ठशब्दरवो वारुणीपतिः शकारबीजो अनलजः शङ्खः, "पाञ्चजन्यं, शङ्खं, अम्बुजं, विष्णुप्रियं" इति ।।

॥ சங்கஸ்தானாதி ॥

தத்பூர்வே பாஞ்சஜன்யோ துக்தாபோ ரக்தவஸ்த்ரதரோ பூதாக்ருதி: சிரஸிசங்கப்ருத் வியத்கதித்வஜோ வியத்காத்-ராயுதோ ஹம்ஸவாஹன: கண்டசப்தரவோ வாருணீபதி: சகாரபீஜோऽநலஜ: சங்க:, "பாஞ்சஜன்யம், சங்கம், அம்புஜம், விஷ்ணுப்ரியம்" இதி.

சங்கினுடைய இடம்

பொருள்: அதற்கு முன்பு வெளுப்பான சரீரத்தை உடையவரும், சிவப்பு வஸ்த்ரம் அணிந்தவரும், பருத்த உருவமுடையவரும், சிரஸில் சங்கினைத் தாங்கியிருப்பவரும், அன்னப்பறவையைக் வாகனமாக உடையவரும், மேகத்தை ஆயுதமாக உடையவரும், நல்லகுரலை உடையவரும், வாருணியின் பதியும், "ச" என்ற எழுத்தை பீஜாக்ஷரமாக உடையவரும், க்ருத்திகா நக்ஷத்திரத்தில் தோன்றியவருமான சங்கினை, "பாஞ்சஜன்யாய நம:, சங்காய நம:, அம்புஜாய நம:, விஷ்ணுப்ரியாய நம:" என்பதாக அர்ச்சிக்கவேண்டும்.

Koviloor Digital Library

।। ध्वजस्थानादि ।।

तत्पूर्वे हाटकाभः शुक्लांबरधरः ऊर्ध्वकेतुः वायुवाहनः सभारवो स्वातीजातो जकारबीजो जयप्रियापतिः द्विभुजः पद्मधरः आसने दक्षिणंपादंप्रसार्य वाममाकुञ्च्याऽऽसीनः सर्पयुक्तः हृदयेञ्जलि संयुक्तो जयो, "जयं, अत्युच्छ्रितं, धन्यं, ध्वजं" इति ।

॥ த்வஜஸ்தாநாதி ॥

